Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஏப்.07–13,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 148

## புலிகளின் பொறி

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## ரணதுங்கவுக்கு வலை

## மம்தாவின் அதிரடிப் பேட்டி



சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

## இரட்டை வேடம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

"பாம்புக்குத் தலை
மீனுக்கு வால்!"
ஐக்கிய தேசியக் கட்சியின்
இன்றைய நிலைப்பாடு அதுதான்!
அதாவது-
இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில்!

பெரும்பான்மை இன
வாக்கு வங்கிகளின்மீதும் கண்!
சிறுபான்மையின வாக்கு வங்கிகளை
இழக்கவும் விரும்பவில்லை!

புத்திசாலித்தனமாக-
காய் நகர்த்துகிறார்கள்!
பௌத்த குருமார்களையும்
கிள்ளிவிடுகிறார்கள்.
தமிழ் கட்சிகளையும் சந்தித்து
தேனொழுகப் பேசுகிறார்கள்!

'புலிகளோடுதான் பேசவேண்டும்'
என்று ஐ.தே.கட்சி சொல்வது
உண்மை நிலவரத்தை அறிந்துதான்
என்று அர்த்தப்படுத்தக்கூடாது.

அரசும், புலிகளும் பேசினால்கூட
அப்போதும் வேறு ஒரு காரணம்
சொல்லி நழுவும் ஐ.தே.கட்சி!

"அய்யய்யோ... புலிகளிடம்
நாட்டை தாரைவார்க்கப்போகிறார்கள்"
என்று நடுத்தெருவில் நின்று
ஆள் திரட்டிக் கூவுவார்கள்!

ஐ.தே.கட்சி-
ஆளும் கட்சியாக இருந்து,
பொது ஜன முன்னணி
எதிர்க்கட்சியாக இருந்தால்
அதுவும் அதைத்தான் செய்யும்!

நமது நாட்டுக்குள்ளேயே
பிரச்சனைக்கு தீர்வு வைத்தியம்
செய்யவேண்டும் என்றால்
ஆளும்கட்சி, பிரதான எதிர்க்கட்சி,
புலிகள்- ஆகிய முத்தரப்பும்
பொது இணக்கத்துக்கு வந்தாக வேண்டும்!

முத்தரப்பும் இணக்கத்துக்கு
வராமல் இருக்கும்வரை
வேறு எத்தரப்பு வந்தாலும்
இனப்பிரச்சனையும் தீராது!
தொடரும் போரும் ஓயாது!

முத்தரப்பும்,
ஒரே மேசையில் சந்திப்பதும்,
பொது உடன்பாடு காண
பிடிவாதங்களை தளர்த்துவதும்
அழகான கனவாக இருக்கலாம்;
ஆகக்கூடிய காரியமாகத்
தெரியவேயில்லை! தெரியவேயில்லை!

நம்நாட்டு அரசியலில்
ஆளும் கட்சி எதைச் செய்தாலும்
கண்களை மூடிக்கொண்டு
ஒரேயடியாக மறுதலிப்பதே
எதிர்க்கட்சியின்
அரசியல் கொள்கையாகிவிட்டது!

எந்தக் கட்சி
எதிர்க்கட்சியாக இருந்தாலும்
அதுதான் பொதுவிதியென்றாகிவிட்டது!

எனவே-புலிகள் வந்தாலும்கூட
ஆளும்கட்சியும்-எதிர்க்கட்சியும்
பொது இணக்கம் காண்பது
அரிதிலும் அரிது; வெறும் கனவு!

தற்போதைய தேர்தல் முறையில்
சிறுபான்மை இன வாக்குகளும்
தேவைப்படுவதால்
பிரதான எதிர்க்கட்சி
வெளிப்படையாக இனவாதம்
பேசவில்லை என்பதே மெய்!

பெரும்பான்மை இனவாக்குகள்
மட்டும் போதுமென்றால்,
பிரதான எதிர்க்கட்சியின்
வசீகர ஆயுதமாக
இனவாதம் மாறியிருக்கும்!

இனவாதமானலும்,
இன ஒற்றுமைக்கோஷமானாலும்
வாக்குச் சீட்டுக்களைக் கவரும்
தேவைகளுக்கு ஏற்பவே
பெரும்பான்மை இனக் கட்சிகளால்
உச்சரிக்கப்பட்டுவருவதுதான்
இங்கே வரலாறு!

இன்றைய எதிர்க்கட்சியின்
இரட்டை வேடமும்
அடுத்த தேர்தலுக்காகவே!

பிரதான எதிர்க்கட்சியின்
தலைவர் நல்லவராக இருக்கலாம்;
ஆனால் - கட்சி
கூட்டுக் கலவையாக மாறிவிட்டது.
கலவையில் இனவாத நெடி
அதிகமாகவே வீசுகிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## என்னத்தை உண்போம் என்னத்தை உடுத்துவோம்

இன்று இவ்வுலகில் வாழ்பவர் எல்லாருமே நாளைய மட்டில் நம்பிக்கை இழந்து, வருங்காலத்தைப் பற்றி கவலைப்படுகின்றனர் என்பது நாமறிந்ததே. உலகாயத விடயங்களில் உயரிய ஆசை கொள்வதே இதற்கு முக்கிய காரணமாகும். எனவேதான் மத்தேயு விவிலியம் இவ்வாறு கூறுகிறது:

"என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாமலிருங்கள் என்று இயேசுவானவர் கூறினார்." (மத்தேயு: 6:25).

ஏன்? நம்மைப் படைத்தவன் ஒருவன் இருப்பின் அவன் இவை எல்லாவற்றையும் அறிந்திருக்கிறான். ஏனெனில் கடவுள் எல்லாம் அறிந்தவர், எல்லாம் உணர்ந்தவர், எல்லாம் தெரிந்தவர்.

அப்படி என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்.? சிந்திக்கின்ற எவரும் கேட்க வேண்டிய கேள்வி. இயேசுவாலேயே பதில் கூறப்படுகிறது:

"ஆம். முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும்"
(மத்தேயு: 6: 33)

எனவே, நீதியான, நேர்மையான, சமதர்ம, சாத்வீக, எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதாய உலகத்தைக் காணவேண்டியது நம் கடமை. அதன் பின்னால் இது உண்மையா இல்லையா என்று உணரலாம்.

ஏ. பி.வி. கோமஸ்.

# ஆன்மீகம்



## கடன் மன்னிக்கப்படமாட்டாது!

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டார். "அல்லாஹ்வின் தூதரே! நான் இறைவனின் பாதையில் போரிட்டு அதில் கொல்லப்பட்டால் என்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுமா?" இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் பதில் சொன்னார்கள். "ஆமாம், நீங்கள் பொறுமையாக இருந்திருக்கவேண்டும். எதிரியை தாக்குவதில் முன்னணியில் நின்று போரிட்டு இருக்க வேண்டும். நன்றியுடையவராக இருந்திருக்க வேண்டும். பின்வாங்கி இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் திருப்தி ஒன்றையே நாடுபவராக இருந்திருக்க வேண்டும். போரில் கொல்லப்பட்டிருக்கவேண்டும்," என்றார்கள். பின்னர் மீண்டும் (ஸல்) அவர்கள் அந்த மனிதரைப் பார்த்து "நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டார்கள்.

அந்த மனிதர் மீண்டும் அந்தக் கேள்வியையே திரும்பக் கேட்டார்கள்.

மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்கள்: "உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும், ஆனால் உங்களுடைய கடன்கள் மன்னிக்கப்படமாட்டாது. என சற்றுமுன்னர் ஜிப்ரில் (அலை) அவர்கள் எனக்கு இதைச் சொன்னார்கள்." என்று பதில் தந்தார்கள்; (முஸ்லிம்)

எனவே நாமும் இச்சம்பவத்தை கருத்தில் கொண்டு கடன் விஷயத்தில் சற்று விழிப்புடன் இருந்து நற்பயன் அடைவோமாக!

தொகுப்பு:- சமீனா ஹுசைன்-தர்கா நகர்.

## கவிதைப்போட்டி இல—145

### பரிசுக்குரிய கவிதை

### தேடல்

எல்லாமே நம்மவர்.......
இதில் எங்கே
என்னவர்?
சாவென்னும் சமுத்திரம்
உயிரெல்லாம் உப்புக்கட்டி
தேடுவது எங்ஙனம்?

திருமதி. மேரி மரியதாஸ்-பார் வீதி, மட்டக்களப்பு.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### தொடரும்

ஆயுத மிருகம்
அடங்காத பசி!
வீதியில் மனிதம்
வீழ்வது தொடரும்!

கே. சண்முகம்,
அக்கரப்பத்தனை.

### கிலேசம்!

தீயினிலே தினம் நொந்து...
தீப்பிழம்பாய் மனம் வெந்து...
தீர்வினை காணவில்லை!
தீமை மட்டும் ஓயவில்லை!!!

நிட்டம்புவ- கலாயுவன்.



### கதி என்ன?

வழியெல்லாம் முட்கள்;
வாழ்க்கையே சிலுவை;
அழுதாலும் தீராது
மாண்டவர் திரும்பார்;
ஆண்டவனும் தலைமறைவு;
நாம் என்ன செய்வோம்?!

செல்வி. மதிவதனி,
பேராதனை வீதி, கண்டி.

### ஒழிப்பு

திட்டமிட்ட இத்தீச்செயல்
தொடர்ந்திங்கு நடந்திட்டால்
இரண்டாயிரம் ஆண்டினிலே
இங்கொரு கமிஷன்தேவை......
அழிந்த ஓரினத்தின்
மறைவை விசாரிக்க......!

பூ. இதயரெத்தினம்,
ஆரையம்பதி-03.

### இடம் இல்லை

இடம் பெயர்ந்து ஓடிவந்து
அகதிமுகாம் தஞ்சமானோம்
உயிர் தப்பி வாழ்வதற்கு
எங்கே நாம் சென்றிடுவோம்?

அ. பரமேஸ்வரி, உவர்மலை-திருமலை.

### யுத்த+சாபம்

அதிஷ்டம் உள்ளவர்கள்
ஒரே நாளில் செத்து மடியட்டும்!
துரதிஷ்டம் பிடித்தவர்கள் மட்டும்
தினம் செத்து செத்து வாழட்டும்!

பா. நாவாஸியா சத்தார்-கொழும்பு-12.

### போர்ப் புயல்

போர்ப் புயலில் சிக்குண்டு
போன உயிர் எத்தனையோ!
மீதி உயிர் காப்பதற்கு
முயன்றிடுமா இவ்வுலகம்?

நஸபியா பஹுர்தீன், கொத்தான்தீவு,புத்தளம்.

### அரசின் உதவி.

மரணம்தான்
போராளிகளை
உருவாக்குகிறது.
இங்கோர் போராளி!

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல-148



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.04.1996.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 148. தினமுரசு வாரமலர்,
த.பெ.இல—1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை

அரசியல் தீர்வுப் பொதி வந்ததும் விழுந்தடித்து வரவேற்றவர்களும் இப்போது தலைகீழாக மாறி எழுதுகிறார்கள். நாரதர் மட்டுமே ஆரம்பம் முதலாக தீர்வுப் பொதி ஒரு பொறி என்பதை சொல்லி வருகிறார். தீர்வுப்பொதியை முதலில் வரவேற்ற சில விமர்சகர்கள் ஏதோதாம் வரவேற்காதது போல வரவேற்பவர்களை சாடிவருவதும் மற்றொரு வேடிக்கை.

கே. திருநாவுக்கரசு- கொழும்பு-11.

என் இனிய தமிழ் முரசே...

நீர் தரும் உண்மைச் செய்திகளையும் தகவல்களையும் படிக்கும் என் உள்ளம் உவகை கொள்கின்றது. மேலும் ராஜேந்திரகுமாரின் நீ! நீயா மர்மக்கதை மிக நன்று.

நி. நித்தியகலா- கொம்மாதுறை.

காதிலை பூ கந்தசாமியின் புதிய வித்தியாசமான நகைச்சுவைப் பகுதி வெகு சூப்பர். உலகக் கிண்ண ஸ்பெஷல் வெரி சூப்பர்.

எஸ். மொஹமட் ஜி- ஹொறவபொத்தானை.

கிரிக்கெட் வெற்றிக் களிப்பில் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்திய சக்திகளை குத்திக் காட்டியது முரசு மட்டுமே! சபாஷ் முரசே!

சா. இதயரத்தினம்-திருகோணமலை.

'காதிலை பூ கந்தசாமி' கற்பனையில் கூறும் அரசியல் ஜோக்குகள் எதிர்காலத்தில் நிதர்சனமானாலும் ஆச்சரியமில்லை. அரசியலின் தரம் அப்படித்தான் இருக்கிறது.

எச். எம். மொகமட்- கல்முனை.

அன்பின் தேன் முரசே

உனது அனைத்து அம்சங்களும் சூப்பர் 'நீ! நீயா' தொடர் வாரா வாரம் எம்மை இன்பக்கடலில் ஆழ்த்துகின்றது. மன்னன் ராஜேந்திரகுமாருக்கு சபாஷ். இலக்கிய நயம் தேன் முத்தாய் இனிக்கின்றது. முரசே வாழ்க வளர்க உன் பணி.

செல்வன் ஆர். சாந்தராஜா-இரத்தினபுரி.

கிரிக்கெட் விமர்சனத்தின் சூடு அபாரம். இரசிகைகள் பக்கம் கமரா திரும்பியது தான் குளிர்ச்சியான விடயம் என்று கூறி விமர்சனத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தீரே....! என்றாலும் உமக்கு இத்தனை 'ஜொள்ளு' கூடாது.

ஐ.பர்வின், ஐ.ஷர்மிளா, கலைச்செல்வி,
பர்ஸான், இப்திகார்-கண்டி.

தித்திக்கும் தினமுரசே.
உன் ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர்.
அதிலும் நீ நீயா வெகு சூப்பர்.
மர்மக்கதை மன்னனுக்கு
மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பே. மஞ்சு-மடுல்சீமை.

காதிலை பூ கந்தசாமி 'படு ஜோர்'
மேலும் சுத்தமான கற்பனை வளர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

எஸ். சாந்தி, கொழும்பு-10.

நாங்கள் "நவீன தொலைத்தொடர்பு" வசதிகள் அற்றவர்கள் தான். ஆனால் "தினமுரசு" எனும் நவீன சாதனத்தால் செய்திகளை அறிந்து கொள்கிறோம்.

சுபா, கண்டி.

அன்பின் தமிழ் முரசே, நீ தாங்கிவரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பற்றிய அனைத்து அம்சங்களையும், கிரிக்கட் சாதனைகள் பற்றிய தகவல்களையும் அள்ளி வழங்கிய உனது பணிக்கு எனது உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்.

ஏ. செபஸ்தியன், உடுப்பிடிய, உக்குவலை.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:**

- ★ செல்வி. எஸ். யுவராணி- பிட்டகந்தை.
- ★ எம். கறீமா சனூன்- புத்தளம்.
- ★ செல்வி. சமீனா ஹுசைன்- தர்கா நகர்.
- ★ நா. ஜெயகணேசன்- பொகவந்தலாவ.
- ★ எஸ். விஜயன்- அக்கரைப்பற்று- 07.
- ★ செல்வி. பி. கேசினி- மட்டுநகர்.
- ★ கா. இராமகிருஷ்ணன்- மட்டக்களப்பு.
- ★ செல்வி. பிரியநேசி- களுத்துறை (தெற்கு)
- ★ திருமதி. இந்திராணி பாலகிருஷ்ணண்- ராகலை.
- ★ எம். இஸட். எம். முஸம்மில்- மடவளை.
- ★ ஏ. எம் இப்திகார்- புத்தளம்.
- ★ லோஷினி நவமோஹன்- ஹப்புத்தளை.
- ★ இ. துசாந்தன்-சிலாபம்
- ★ கே. ஜீவன்- மட்டக்களப்பு.
- ★ கலவான டெயிசி
- ★ பி. எம். முஹம்மது அனீஸ்- கொழும்பு-12
- ★ மர்லியா முஹாஜிரீன்- மீவலதெனிய.
- ★ ஜெ. யேசுதாசன்- அப்புத்தளை.
- ★ பூபா. தவராஜா- செட்டிபாளையம்.
- ★ ந. செல்வன்- கொழும்பு-13.
- ★ ஏ. குழந்தைவேலு- நானு ஓயா.
- ★ வ. பிர்தௌஸ்- கிண்ணியா-03
- ★ அ. லெ. சொசாபீக்- நிக்கவெவ.
- ★ எஸ். பத்மா, உமாஜினி, நவ்சாத்- கொழும்பு-10
- ★ அ. பரமேஸ்வரன்- நவிண்டில்
- ★ வி. சகாயராஜா- சுவிற்ஸர்லாந்து.
- ★ ஜீ. நந்தகுமார்- பெள்மதுளை.
- ★ எம். வி. அருண்- நீர்கொழும்பு.
- ★ ரி. எம். கதிரேசன்- குவைற்.

'வானத்தில் ஒரு இரகசியம்', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' அலசல் அபாரம். திரைமறைவுத் தகவல்களை தருவதில் முரசுக்கு நிகர் முரசுதான். ஆட்சியாளரின் தடைகளால் பாதிக்கப்படுவதும், பாரம் சுமப்பதும் பொதுமக்கள் மட்டுமே என்பதையும் புலிகளின் தடைகளை மீறிய செயற்பாடுகள் மூலம் அறியமுடிகிறது.

எல். லிங்கேஸ், வவுனியா.




திக்கெட்டும் செல்லும் முரசே!

தித்திக்கும் திகட்டிடாத தேன் கிண்ணத்தை அள்ளிவரும் உனக்கு நிகர் நீயே தான். நீ அள்ளித்தரும் ஆக்கங்கள் படுஜோர். இருந்தாலும் ஒரு கவலை. நீ ஒவ்வொரு வாரமும் தரும் கத்தரித்த கடி ஜோக்ஸ் இப்பொழுது அதிகம் வருவதில்லையே? நாரதர் அத்தனை விடயங்களையும் புட்டுப் புட்டு வைக்கிறார். கார்ட்டூன் மூலை சூப்பரய்யா. சினிவிசிட் எம்மையெல்லாம் ஆட்டிப்படைக்கிறதே. நீ சுமந்து வரும் அத்தனை ஆக்கங்களும் எம்மை நிலைகொள்ளாதிருக்கச் செய்கிறது.

முரசே நீ வாழ்க!

ப. சஞ்ஜீவனி, மாத்தளை.

முரசில் வெளிவரும் கவிதைப் போட்டிக்குரிய படங்களை எங்கே தேடி எடுக்கிறீர்கள்? படங்களைப் பார்க்கும் போது வியப்படைகின்றோம்.

கே. சத்திய கீர்த்தி, சித்தாண்டி

வாரா வாரம் தினமுரசு என் கையில் கிடைத்துவிட்டால் முதலில் எப்பக்கத்தை படிப்பது என்று திகைத்து நிற்பேன். காரணம் அனைத்து பக்கங்களும் தேனாய் இனிக்கின்றன.

ஹி. நைறோஸ் கான், மருதமுனை-06.

# வெடிகுண்டுத் தாக்குதலுக்கு முஸ்தீபு!

## தமிழக மக்களுக்கு புலிகள் அவசர வேண்டுகோள்!

பாதுகாப்புப் படையினர் தென்மராட்சி, வடமராட்சி நோக்கி முன்னேறக்கூடும் என்று கருதி, வெடிகுண்டுத்தாக்குதலுக்கான ஏற்பாடுகளை புலிகள் மேற்கொண்டுவருகின்றனர். வெடிகுண்டு தாக்குதலுக்கான தயாரிப்புக்களின்போது யாழ் மாவட்டத்தில் இரண்டு பாரிய வெடிவிபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. படையினரின் கடல்வழி விநியோகப் பாதையிலும் கடற்புலிகளது தாக்குதல்கள் மூலமாக புலிகள் தடைகளை ஏற்படுத்தலாம் என்று நம்பப்படுகிறது.

(அலுவலக நிருபர்)

### இடம் மாற்றம்

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள புலிகள் அமைப்பின் முக்கிய நிலைகள் மற்றும் புலிகள் இயக்கத்தினருக்குச் சொந்தமான தளபாடங்கள் என்பவை வன்னிப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. கடந்த வாரத்தில் கிளாலி கடல் ஏரிப்பாதை வழியாக புலிகள் அவற்றைக் கொண்டு சென்றுள்ளனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்களது குடும்பத்தினர், மற்றும் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் தென்மராட்சி, வடமராட்சி பகுதியில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர்.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் படையினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி பாரிய மோதலில் ஈடுபடும் எண்ணம் புலிகளுக்கு இல்லை என்று தெரிகிறது.

எனினும், படையினர்மீது வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்கான திட்டம் இருப்பதாக கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமராட்சிப்பகுதியில் வெடிகுண்டுகள் பெருமளவில் தயார் செய்யப்பட்டுள்ளன.

வெடிகுண்டு தயாரிப்பு மேற்கொள்ளப்பட்ட இரண்டு இடங்களில் பாரிய விபத்துக்களும் ஏற்பட்டன.

வெடிவிபத்தொன்றில் புலிகளது முக்கிய உறுப்பினரான மேஜர் கலைவானம் என்பவர் பலியாகியுள்ளார். அவருடன் கப்டன் ஆதியன், கப்டன் தியாகன் ஆகியோரும் பலியானார்கள்.

மற்றொரு வெடிவிபத்தில் புலிகள் இயக்க உறுப்பினரான தியாகன் என்பவர் பலியாகியுள்ளார்.

### கடற்தாக்குதல்கள்

பாதுகாப்பு படையினரின் நடவடிக்கை ஆனையிறவு, வெற்றிலைக்கேணி முகாம்களில் இருந்து மேற்கொள்ளப்படலாம் என்று புலிகள் கருதுகின்றனர்.

மேற்படி இரு முகாம்களுக்கும் கடல்வழி விநியோகமே பிரதானமாக இருக்கிறது. அதனால், கடற்புலிகளது தாக்குதல்கள் மூலம் கடற்பாதை விநியோகத்தில் தடைகளை ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

30.3.96 அன்று இரவு காங்கேசன் துறைக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடைப்பட்ட கடலில்வைத்து கடற்புலிகள் தாக்குதல் நடத்தியமை தெரிந்ததே.

இதேவேளை, யாழ் குடாநாட்டில் விமானத்தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றுவருகின்றன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து தென்மராட்சி பகுதி நோக்கியும் ஷெல்கள் வந்து சரமாரியாக விழுகின்றன.

வவுனியாவில் உள்ள இராணுவத்தினர் ஐம்பது புதிய பஸ்வண்டிகளை கொழும்பில் இருந்து தருவித்துள்ளனர். அதனால் வவுனியாவில் இருந்தும் படை நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்று புலிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

### புலிகள் வேண்டுகோள்

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயலகம் அவசர வேண்டுகோள் ஒன்றை அறிக்கை வாயிலாக வெளியிட்டுள்ளது.

"இலங்கை அரசின் யுத்த நடவடிக்கைகளை கண்டித்தும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் துன்ப துயரங்களை உலகின் கவனத்திற்கு கொண்டுவந்தும் உதவுங்கள்" என்று அந்த வேண்டுகோளில் கேட்கப்பட்டுள்ளது.

---

## "மற்றொரு ஜனவரி 31க்கு தயாராகுங்கள்"

### பழிவாங்கப் போவதாக எல்லாளன் படை எச்சரிக்கை!

'எல்லாளன் படை' சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"தமிழ் மக்கள் இனவாத அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் படுகொலை செய்யப்படுகிறார்கள்.

அடுத்தடுத்துப் பதவிக்குவரும் அரசாங்கங்கள் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதற்கு தங்களுக்குள்ளாகவே பல புதிய முறைகளையும் ஆயுதங்களையும் தயார் செய்து கொள்ளுகின்றனர்.

இன்று பிரதமராக இருப்பவரும் முன்பு பிரதமராக இருந்தவரும், இன்றுள்ள ஜனாதிபதியின் தாயாருமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1974ல் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின்போது படுகொலைகளைத் தொடக்கி வைத்தார். இப்படுகொலையில் பங்கெடுத்த பொலிஸ்காரர்களுக்குப் பதவி உயர்வும் வழங்கினார்.

நேற்றுப் போல் இன்றும் இனவாத பாரம்பரியம் தொடர்கிறது. மன்னாரிலுள்ள நாச்சிக்குடா கிராமத்தை மார்ச் 16ம் திகதி ஸ்ரீலங்காவின் இராணுவ MI-24 ஹெலிகொப்டர் முழுமையாக நிர்மூலமாக்கியது.

வலிகாமத்திலிருந்து வெளியேற்றப்பட்ட எமது மக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் குடிசைகளை அமைத்து வாழ்ந்தார்கள். பீரங்கித் தாக்குதல்களால் அவர்கள் படுமோசமாகச் சீர்குலைக்கப்பட்டார்கள்.

இருள் சூழ்ந்த நிலையில் வழி தெரியாது எமது மக்கள் திகைப்புற்று பதட்டமடைந்து ஓலமிட்டவண்ணம், விமானப் படையினரால் ஈவிரக்கமின்றி விரட்டியடிக்கப்பட்டார்கள்.

இத்தகைய நடவடிக்கையினால் அப்பாவிகள் பலர் உயிரிழந்துள்ளனர். இதற்காக எல்லாளன் படை நிச்சயமாகப் பழிவாங்கத்தான் போகிறது.

16 அப்பாவி குடிமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 65 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த நடவடிக்கைக்கு 'எல்லாளன் படை' நிச்சயமாகப் பழிவாக்கப்போகிறது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பார்த்தும் மௌனம் சாதிப்பவர்களே!

விரைவில் எமது எதிர் நடவடிக்கையை காணப்போகிறீர்கள்.

படுமோசமாகவோ அல்லது அதே போன்ற வேறு வழிகளிலோ நடைபெறப் போகும் சம்பவங்களைக் கண்டிக்க உரிய வாக்கியங்களைத் தயாரியுங்கள்.

மற்றுமொரு ஜனவரி 31 கோரக் காட்சியைக் காண்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

எல்லாளன் படையினரான நாம் இந்நடவடிக்கைகளை வெறுங்கைகளால் நடத்தப் போவதில்லை.

நிச்சயமாகப் பழிக்குப் பழி வாங்குவோம் என்பதை மீண்டும் கூறுகிறோம்." இவ்வாறு 'எல்லாளன் படை' தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜனவரி 31 இல்தான் கொழும்பில் மத்திய வங்கிமீது குண்டுத்தாக்குதல் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## வடபகுதித் தாக்குதல் தமிழகத்தில் எதிரொலிக்கும்!

### நிறுத்தக் கோருவாரா இந்தியப் பிரதமர்!

தமிழ் நாட்டில் சட்டமன்றத் தேர்தல்களும், நாடாளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தல்களும் நடைபெறவுள்ளன. தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்து வருகின்றன.

இலங்கை வடபகுதியில் படையினரின் நடவடிக்கைகளில் பொதுமக்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டால், தமிழக தேர்தல் பிரசாரத்தில் இலங்கைத் தமிழர் விவகாரமும் முக்கிய இடம்பெற்றுவிடும்.

இந்திய அரசு மௌனமாக இருப்பதாக குற்றம்சாட்டி பிரசாரம் செய்யும் வாய்ப்பும் தி.மு.க. கூட்டணிக்கு இருக்கும்.

தமிழ் நாட்டில் 30 நாடாளுமன்ற தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது.

இந்தியாவில் மத்திய ஆட்சி அமைவதற்கு தமிழக நாடாளுமன்ற தொகுதிகளில் பெறும் வெற்றி காங்கிரசுக்கு முக்கியமானதாக இருக்கும்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பிரதமர் நரசிம்மராவின் மௌனமான நிலைப்பாட்டை சுட்டிக்காட்டி தி.மு.க.கூட்டணி பிரசாரம் செய்தால், தமிழக வாக்காளர்கள் மனம்மாறக்கூடும். அதனால் அ.தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படலாம்.

எனவே-தற்போது இலங்கை அரசு வடக்கில் பாரிய நடவடிக்கையில் ஈடுபடுவதை இந்தியப் பிரதமர் விரும்பமாட்டார் என்றே தெரிகிறது.

அதன்காரணமாக, வடக்கில் உக்கிரமான தாக்குதலில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு இந்தியப் பிரதமர் இலங்கை அரசை கேட்கக்கூடும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு கோரிக்கை விடப்படுமானால் வடக்கில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் மட்டுமே படையினர் ஈடுபடுத்தப்படலாம் என்று கருதப்படுகிறது.

---

## கைது செய்யப்படுவதால் கடிதம் வழங்கும் வேலை!

(ஏறாவூர் நிருபர்)

வடக்கு-கிழக்கில் தினமும் இடம் பெறும் இளைஞர் யுவதிகளின் கைதுச் சம்பவங்களின்போது கைது செய்யப்பட்டவர்கள் பாடசாலையில் கல்வி கற்றிருந்தால் அல்லது கற்றுக்கொண்டிருந்தால் அதுபற்றிய கடிதத்தைப் பாடசாலையிலிருந்து பெற்று அவர்களை விடுவிக்கும் முயற்சியில் பெற்றோரும் உறவினரும் பாடசாலைகளுக்குப் படையெடுப்பதால் அதிபர்களும், ஆசிரியர்களும் இக்கடிதத்தை வழங்கும் மேலதிக வேலைப் பழு தமக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்கள்.

படையினருக்கும் அவர்களுடன் இணைந்து செயற்படும் சில தமிழ் இயக்கங்களுக்குமே இக்கடிதங்களை வழங்க வேண்டியிருப்பதாகப் பெற்றோர் தெரிவிக்கிறார்கள்.

---

## மட்டக்களப்பில் அடையாள அட்டை பறிப்பு!

### அன்றாட அவஸ்தையில் அப்பாவி மக்கள்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளாந்தம் இளைஞர்களினதும், யுவதிகளினதும் பல தாய்மார்களும் உறவினர்களும் அழுத வண்ணம் களைத்துப் போய் அலைக்கழிவதைக் காணமுடிகிறது. பல உள்நாட்டு வெளிநாட்டு உதவி அமைப்புக்களுக்குச் சென்று தமக்கு உதவுமாறு கோரி அழுகிறார்கள்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில்லாத மக்களும் மற்றும் படையினருடன் இணைந்து செயற்படும் தீவிரஇயக்கங்களுக்கு உதவாதோருமே இவ்விதம் சொல்லொண்ணாத அவஸ்தைக்குள்ளாகிறார்கள். இப்படியான தரப்பு மக்களின் (குறிப்பாக இளைஞர் யுவதிகளின்) அடையாள அட்டைகளை படையினருடன் இணைந்து செயற்படும் குறித்த சில இயக்கங்கள் தேடிச் சென்றோ அல்லது கண்ட இடத்திலோ பறித்தெடுத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட அடையாள அட்டைக் குரியவர்களை தமது முகாம்களுக்கு வரும்படி கூறிச் சென்று விடுகிறார்கள்.

குறித்த நபர் முகாமுக்குச் செல்லத் தவறும் பட்சத்தில் அவருக்கு வாழ்வதற்கு அதிர்ஷ்டமில்லை என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். அடையாள அட்டை பறித்து வைத்திருக்கும் இயக்கத்தவரைச் சந்தித்து அவரது கைக்குள் ஏதாவது திணித்தால் சிலவேளை அடையாள அட்டை திருப்பிக் கொடுக்கப்படும். பின்னர் அவர் நடமாடும் உரிமை பெறுவார்.

படையினருடன் இணைந்து செயற்படும் இயக்கங்களுக்கு பணம்கொடுத்த செய்தி புலிகளுக்கு எட்டினால் அவரது நிலைமை புலிகள் பக்கத்தில் கேள்விக்குரியதாகிவிடும்.

கூடுதலாகப் படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் வசிக்கும் அல்லது அப்பகுதிகளுக்கு தொழிலுக்காகச் சென்று வருவோரிடம் புலிகள் உணவு, உடை மற்றும் நானாவிதப் பொருட்களை வாங்கி வருமாறு கட்டாயப்படுத்துகின்றனர். இக்கோரிக்கையை நிராகரிக்க முடியாத மக்கள் புலிகளுக்கு ஏதோ ஒரு சிறு பொருளையேனும் வாங்கிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. வாங்கிக் கொடுக்காவிட்டால் அப்பகுதியில் வாழவோ அல்லது தொழில் செய்யவோ முடியாது புலிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டிவரும்.

இத்தகவல் மாற்று இயக்கங்களுக்குத் தெரிந்தால் குறித்த நபரின் கதி அதோகதியாகி விடும். அவர் நகர்ப்பகுதிக்கு வரமுடியாது; அப்பகுதியில் பிரச்சினையின்றி வாழவும் முடியாது. படையினருடன் இணைந்து செயற்படும் இயக்கங்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள நேரிடும்.

நாளாந்தம் இவ்விதம் அடையாள அட்டை பறித்துச் செல்லப்படுவோர் தொகையும், அவர்களுக்காக அழுத வண்ணம் முகாம் முகாமாக அலையும் உறவினர்களின் தொகையும் மட்டக்களப்பில் அதிகரித்து வருகிறது.

---

## "தனிநாடுதான் ஒரே தீர்வு"

வடபகுதியில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளில் 'ஈழநாதம்' புலிகள் அமைப்பினரால் நடத்தப்பட்டுவந்தது. தற்போது 'ஈழநாடு' பத்திரிகை நிர்வாகமும் புலிகள் அமைப்பினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

ஈழநாடு நிர்வாகத்தில் ஏற்பட்ட பிரச்சனை ஒன்றை அடுத்தே அதனைப் புலிகள் பொறுப்பேற்றனர்.

சமீபத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தனிநாடுதான் ஒரே தீர்வு என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

'ஈழநாடு' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளதாவது:

"போராட்டத்தின் வளர்ச்சிக் காலத்தில் சிறீலங்கா அரசுகள் இன ஒழிப்பை முன்னெடுத்தன. அதனால் இன வேறுபாடுகள் ஒட்டிச் சேர்க்க முடியாதளவுக்கு உடைந்த கண்ணாடியாகிவிட்டது.

எனவே, இனப்பிரச்சனைக்கான ஒரே தீர்வு தனிநாடுதான். இத்தீர்வை தமிழர்களே ஏற்படுத்துவார்கள்." இவ்வாறு ஈழநாடு தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

---

## சுழிபுரத்தில் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டுள்ள சுழிபுரம் பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

புலிகளால் போடப்பட்டிருந்த தடைகளை அகற்றும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர்மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டதாகவும், தமது தரப்பிலும் இருவர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். கப்டன் ரோஸ்மன் (ஜோசப் மதியழகன். கிளிநொச்சி), லெப்டினன்ட் கிளி (ஜேசுதாசன் ஜோன்சன்-மன்னார்) ஆகியோரே புலிகள் தரப்பில் பலியானார்கள்.

---

## பூபதி நினைவு நிகழ்வுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரேசங்களில் அன்னை பூபதி நினைவுதின நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

போரதீவு, முனைத்தீவு, பழுகாமம், அரசடித்தீவு, முனைக்காடு, வவுணதீவு, கரடியனாறு, உன்னிச்சை, வாகரை போன்ற இடங்களில் நினைவுதின நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. ஏப்ரல் 19ம் திகதிவரை அன்னை பூபதி நினைவுதின நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்திய அமைதிப்படைக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்தவர் அன்னை பூபதி.

---

## "தற்கொலைத் தாக்குதல் வேண்டாம்!"

### படையினர் செய்யும் பிரசாரம்

(ஏறாவூர் நிருபர்)

வடக்கு- கிழக்கில் உள்ள சோதனை முகாம்களில் பாதுகாப்பு படையினரால் விநியோகிக்கப்பட்டு வரும் பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இந்து சமயத்தில் மட்டுமன்றி ஏனைய மதத் தலைவர்களும் மனித உயிரின் பெறுமதி; மானிடத்துவத்தின் உன்னதத்துவம், மனிதத்துவத்தைக் காப்பாற்றுவதன் முக்கியத்துவம் போன்றவற்றை தெளிவாக விளக்கியுள்ளனர். சட்டத்தினால் மட்டுமல்லாது சமய ரீதியாகவும் தற்கொலை செய்து கொள்வதை தடை செய்திருப்பதோடு, அதன் விளைவுகளைப் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளனர். தற்கொலை செய்து கொள்பவர்களைப் பற்றி ஆராயும் போது, காதல், உறவினர்களுக்கிடையிலான தகராறுகள், மனக்கசப்பு போன்ற காரணங்களே அவர்களது தற்கொலை முயற்சிகளுக்குக் காரணங்களாக அமைகின்றன என்பது தெளிவாகும்.

யாராவது இன்னுமொருவரின் பெற்றோர் பிள்ளைகள், உறவினர்கள் போன்ற நெருங்கியவர்களைப் பணயமாக வைத்துக் கொண்டு தங்களது நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தற்கொலை செய்து கொள்ள தூண்டுவதால், வேதனையடைவதும், நஷ்டத்தை அடைவதும் தற்கொலையாளரும் அவரது நெருங்கிய உறவினர்களும் மாத்திரமே. ஆனால் தற்கொலை செய்து கொள்ள தூண்டுபவர்கள் எவ்விதமான வேதனையோ, நஷ்டமோ அடைவதில்லை. நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவும், குண்டொன்றை உடம்பில்வைத்து வெடிக்க வைப்பதால் படும் வேதனைதான் எவ்வளவு? அதன்பின் அந்நபரின் உறவினர்களின் மனதில் ஏற்படும் விரக்தி? இவ்வாறு தற்கொலை செய்து கொள்ள தூண்டுபவர்கள் ஒருபோதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை, பெற்றோர்களை அவ்வாறு செய்ய இடமளிப்பதில்லை.

தங்களின் குறுகிய நோக்கங்களை கொடிய முறைகளில் திருப்திப்படுத்திக் கொள்வோரின் கீழ் நீங்கள் இனியும் செயற்பட வேண்டாம். தங்களது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்காக உங்களைப் பலியிடுவதே அவர்களது நோக்கமாகும்.

தற்கொலைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனித படுகொலைகள் பற்றி கவனத்தை செலுத்துவதெனில் இச்செயல்களை மேற்கொள்ளத் தூண்டியவர்கள் இதுவரை எவ்வித பலனையும் பெறவில்லை என்பது திண்ணமாகும்.

நீங்கள், தற்கொலைப்படை உறுப்பினராக இருப்பின், உங்களது செயல்களின் பலனைப் பெறுகின்றீர்களா? அல்லது வேறு யாரேனும் பலனைப் பெறுகின்றார்களா? தாம் அனுபவிக்கின்ற வேதனைகள் யாது? தாம் இறப்பதால் பெற்றோர்கள், குடும்ப அங்கத்தவர்கள் அவர்களது வாழ்நாள் பூராவும் படும் வேதனையைப் பற்றி நீங்கள் சற்று சிந்தித்துப் பார்ப்பீர்களேயானால், வேறு எந்த நாட்டிலும் மனிதன் மற்றவர்களின் நன்மைக்காகத் தமதுயிரை மாய்த்துக்கொள்ள எப்போதும் முன்வரவில்லை.

ஆனாலும் உங்களுக்கு இன்று எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களின் அச்சுறுத்தல் துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. ஆனாலும் பாதுகாப்புப்படையினர் உங்களை மீட்டுக் கொள்ள எப்போதும் தயாராகவுள்ளனர். உங்களது உயிர்களை அகாலத்தில் மாய்த்துக் கொள்ளாது, உங்களது மட்டு மன்றி, மனைவி, பிள்ளைகளது, பெற்றோர்களது, உறவினர்களது நன்மையைக் கருதி இப்போது செயல்படவும். பயங்கரவாதத்தை கைவிட்டு சமாதானமான வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக செயல்படவும், அது உங்களது மட்டுமன்றி முழு நாட்டினதும் நன்மைக்கு இடமளிக்கும்.

இவ்வாறு படையினரால் விநியோகிக்கப்படும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## தொண்டாமீது பாய்ச்சல்

இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான தொண்டமானின் சமீபகால நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பு ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் கடும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பாக 'ஐலண்ட்' ஆங்கில பத்திரிகையில் காட்டமான ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

இதேவேளை அமைச்சர் தொண்டமான் மலையகமெங்கும் சுற்றுப் பயணம் செய்து வேலை நிறுத்தப் போராட்ட பிரசாரம் செய்துவருகிறார்.

இதுவரை அமைச்சர் தொண்டாவை அழைத்து வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாகவோ, இ.தொ.கா. முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாகவோ ஜனாதிபதி பேச முன்வரவில்லை. ஜனாதிபதியின் நிலைப்பாடு இ.தொ.கா. வட்டாரத்தில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

திட்டமிட்டபடி இ.தொ.கா. பாரியளவில் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினால் அரசோடு முரண்படும் நிலையே ஏற்படும். அதற்கிடையே நல்லதொரு சமரச முடிவு ஏற்படுவதையே இ.தொ.காவில் ஒரு சாரார் விரும்புகின்றனர்.

---

## நாள் ஒன்று, பலி எட்டு

(ஏறாவூர் நிருபர்)

சென்ற 31.03.96 அன்று மட்டக்களப்புப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களின் போது படையினரும் பொதுமக்களும், புளொட் அங்கத்தவருமாக மொத்தம் 8 பேர் கொல்லப்பட்டனர்.

தியாவட்டவானில் இரு படையினரும் 3 முஸ்லிம் பொதுமக்களும், செங்கலடியில் ஒரு படை வீரரும் ஒரு புளொட் உறுப்பினரும், கொம்மாதுறையில் 13 வயதுச் சிறுவனொருவனுமே கொல்லப்பட்டோராவர். 10க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இச்சம்பவங்கள் புலி-படையினர் மோதலின் போதே இடம் பெற்றன.

# தீவிரவாத இயக்கங்கள் நிதித்திரட்டத் தடை

## புதிய சட்டங்கள் கொண்டுவருகிறது கனடா

உலகின் பல பாகங்களிலும் இயங்கும் தீவிரவாத இயக்கங்களுக்கென கனடாவில் நிதி திரட்டுவதைத்தடுப்பதற்கு புதிய சட்டம் கொண்டு வரப்படலாம் என்று கனடாவின் சொலிசிட்டர் ஜெனரல் ஹேர்ப் கிறே சொன்னார். தர்ம ஸ்தாபனங்களுக்கு நிதி திரட்டுவதற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், இதற்கான வரிச்சலுகைச் சட்டங்களிலும் திருத்தங்கள் கொண்டுவரப் படலாம் என்று அவர் சொன்னார்.

அண்மைக் காலங்களில் இஸ்ரேலில் பல குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கு பாலஸ்தீன பயங்கரவாதக் குழுவான ஹமாஸ் இயக்கம் உரிமை கோரியிருக்கிறது. இந்த இயக்கத்துக்கும் கனடாவிலுள்ள சில நிறுவனங்கள் மூலம் பணம் திரட்டி அனுப்பப்பட்டு வரலாம் என்பதையும் மறுப்பதற்கில்லை என்று கிறே கூறினார்.

"நாங்கள் குறிப்பிட்ட ஒரு குழுவை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. பொதுப் படையாகவே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்களையே குறிப்பிடுகிறோம்." என்கிறார்.

திரு.கிறே, சம்பந்தப்பட்ட குழுக்களைப் பட்டியல் போட்டுக் காட்டாவிட்டாலும் ஐ.ஆர்.ஏ, இலங்கை தமிழ் புலிகள், துருக்கியிலுள்ள குர்திஷ் இயக்கம் போன்றவற்றைப் பற்றியே கனடா கருத்தில் கொண்டுள்ளது என்று தெரிகிறது.

"ஹமாஸ் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக கனடாவிலுள்ள குழுக்கள் ஏதாவது பணம் திரட்டும் பணியிலீடுபட்டு வருகின்றனவோ என்று கனடா அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக" வெளி விவகார அமைச்சர் லொயிட் ஆக்ஸ்வேர்தி கூறினார். "இன்று நடைமுறையிலுள்ள சட்டங்களைக் கொண்டே நடவடிக்கையினை மேற்கொள்ள முடியுமா என்பதனை ஏனைய பல நாடுகளிலிருந்து கிடைக்கும் தகவல்களுடன் ஆராய்ந்து வருகிறோம். நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக புதிய சட்டங்களை இயற்ற வேண்டுமோ என்பதனையும் நீதித்துறை பரிசீலனை செய்து வருகிறது."

தர்ம ஸ்தாபனங்கள் என்ற பெயரில் இயங்கும் ஸ்தாபனங்கள் எவையேனும், உலகில் வேறு எங்காவது இயங்கும் பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி திரட்டி அனுப்புகின்றனவோ என்பதை தனது இலாகா ஆராய்ந்து வருவதாக நீதித்துறை அமைச்சர் ஜேன் ஸ்ருவர்ட் தெரிவிக்கிறார். "சில நிறுவனங்கள் பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருப்பதும் தெரிய வருகிறது. இதன் உண்மை நிலைகளை நாம் ஆராய்ந்து வருகிறோம்." என்றார்.

ஹமாஸ் இயக்கத்துக்கு கனடாவிலுள்ள ஏதாவது குழுக்கள் பணம் திரட்டுகின்றன என்பதற்கான சான்றுகளைத் திரு. கிறேயோ ஆக்ஸ்வேர்த்தியோ தெரிவிக்கவில்லை. இருப்பினும் ஹமாஸுக்கு கனடாவிலிருந்து ஆண்டொன்றுக்கு 500,000 முதல் 1000,000 டொலர்வரை ஆதரவாளர்களால் அனுப்பப் படுவதாக ரஷாட் சாலே என்பவர் கூறினார். இவர் கனடாவிலுள்ள ஒரு தேசிய நிறுவனமான பாலஸ்தீன இல்லத்தைச் சேர்ந்தவர். "இப்பணம் வன்முறை நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படுவதாக நான் கூற முற்படவில்லை; பள்ளிக்கூடங்கள், சுகாதார மையங்கள், மேற்குக்கரை மற்றும் காஸாவிலுள்ள அகதி முகாம்களுக்காக அனுப்பப்படுவதாகத்தான் அறிகிறேன்." என்றார் ரஷாட்.

பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி திரட்டுவதைத் தடை செய்வதற்கான சர்வதேச மாநாடு கடந்த டிசம்பரில் கனடாவிலுள்ள ஒட்டவாவில் நடைபெற்றது. கனடா, பிரிட்டன் அமெரிக்கா, ஃபிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஜேர்மனி, மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து அமைச்சர்கள் மட்டத்தில் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டதை திரு.கிறே குறிப்பிட்டார். உலகிலுள்ள பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி சென்றடைவதைத் தடுப்பதற்கும் இந்நாடுகளில் இவ்வியக்கங்களின் பாவினைக்காக வைப்பிலிருக்கும் தொகையை முடக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதென இம் மாநாட்டில் தீர்மானிக்கப் பட்டது.

கனடாவில் உலகத் தமிழர் இயக்கம் என்ற பெயரில் புலிகள் இயங்கிவருகின்றனர். தொண்டர் நிறுவனம் என்ற ரீதியில்தான் உலகத் தமிழர் இயக்கம் கனடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கனடா அரசின் புதிய சட்டத்தால் புலிகள் அமைப்பினரின் நடவடிக்கைகளும் அங்கு பாதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

ஏற்கனவே உலகத் தமிழர் இயக்க பொறுப்பாளர் சுரேஸ் கனடாவில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காட்டுன் மூலை




## "மலையக முன்னணிக்கு தொடர்பில்லை"

மத்திய மாகாண சபையில் கல்வி அமைச்சர் கௌரவ.வி.புத்திரசிகாமணியின் பதவி பறிக்கப்படவிருப்பதாக சில பத்திரிகைகளில் (முரசு அல்ல) விமர்சனங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. இதில் மலையக மக்கள் முன்னணியையும் எனது பெயரையும் சம்பந்தப்படுத்தி செய்திகள் வெளிவந்துள்ளதால் எனது விளக்கத்தை அளிக்க விழைகிறேன்.

இச் செய்திகள் அனைத்தையும் பத்திரிகை மூலமாகவே நான் அறிந்தேன். ஒருவரது பதவியை குறுக்கு வழியில் பெறுவதோ, இன்னொருவர் வகிக்கும் பதவியை தட்டிப் பறிப்பதோ எனதும், எமது அமைப்பினதும் கொள்கைக்கும் கோட்பாட்டுக்கும் முற்றிலும் முரணானது. இப்பத்திரிகைச் செய்தியில் கூறப்பட்டது போல் எச்சந்தர்ப்பத்திலும் எவ்விடத்திலும் எவருடனும் பேச்சு வார்த்தையோ, கலந்துரையாடலோ நடைபெறவில்லை. எமது மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ. சந்திரசேகரனும் இத்தகைய செய்தியில் உண்மையில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சம்பந்தப்பட்ட அமைச்சரின் பதவிக்கு ஆபத்து வருகின்றதென்றால் அதனைப் பாதுகாத்துக்கொள்ளும் பொறுப்பு அவருக்குரியது. நேர்மையான அரசியலை முன்னெடுத்துச் செல்ல முனையும் எம்மை சந்திக்கிழுத்து சகதியில் தள்ள முயல்வதன் மூலம் தனது பதவிக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்த்துக்கொள்ள முயல்வது பொருத்தமான செயலாகாது. எனவே, கௌரவ அமைச்சர் வி.புத்திர சிகாமணி அவர்கள் எதிர்காலத்தில் இத்தகைய செயலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**வீ.டி. தர்மலிங்கம்,**
**மத்திய மாகாணசபை உறுப்பினர்.**

## மட்டக்களப்பில் காடுகள் அழிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைக்கும் ஓட்டமாவடிக்கும் இடையில் உள்ள அடர்த்தியான மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. புலிகள் தமது தாக்குதலுக்கு காடுகளையும், வாவியையும் பயன்படுத்தி வருகிறார்கள். அதனால் காடுகளை அழிக்க வேண்டி இருப்பதாக படைத்தரப்பால் கூறப்படுகிறது.

காடுகளை வெட்ட அப்பகுதியில் உள்ள பொதுமக்களை பயன்படுத்துகிறார்கள். அடையாள அட்டைகளை வாங்கி வைத்து விட்டு காடுகளை வெட்ட அனுப்புகிறார்கள். மரங்களை வெட்டிவிட்டு வந்தால்தான் அடையாள அட்டை திருப்பிக் கொடுக்கப் படுகிறது.

## அமைச்சரின் ஆர்வம்

இலங்கை கிரிக்கெட் அணியினருக்கு பரிசில்கள் வழங்குவதற்கான ஏற்பாடுளை அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களும் மேற்கொண்டிருந்தார்கள். பல முஸ்லிம் வர்த்தகர்கள் மூலமாக பரிசுகளை திரட்டுவதற்கான முயற்சிகளையும் செய்திருந்தார்.



ரணதுங்காவுடன் அமைச்சர் அஷ்ரப். வெற்றியில் பெருமிதம்.

## மாணவர்கள் காத்திருப்பு

"மட்டக்களப்பு கல்விக் கல்லூரி மாணவர்கள் ஆகிய நாங்கள் மேற்படி கல்லூரியில் பயில்வதற்காக 95ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் திகதியன்று பதிவு செய்துவிட்டு டிசம்பர் இறுதியில் கல்லூரி ஆரம்பிக்கும் என நிர்வாகம் அறிவித்தமையினால் எமது வீடுகளுக்குச் செல்லாது வவுனியாவிலும், மட்டக்களப்பிலும், கொழும்பிலும் பல இன்னல்களின் மத்தியில் தங்கியுள்ளோம்.

ஆனால் இதுவரை கல்விநெறி ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. பலமுறை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோதும் எதுவித தீர்க்கமான முடிவையும் அவர்கள் கூறவில்லை.

இனிமேலாவது சம்பந்தப்பட்டவர்கள் எம் நிலையைக் கவனிப்பார்களா?"

இவ்வாறு 8 மாணவர்கள் கையொப்பமிட்டு புகாரினை அனுப்பியுள்ளனர்.

## சடலங்களை எடுத்துவர புலிகள் தடை!

மட்டக்களப்பு இலுப்படிச்சேனை என்னும் இடத்தில் சென்ற 19.03.96 அன்று வடிவேல் காத்தலிங்கம் (42) உக்குபண்டா குணபாலன் (40) ஆகிய இருவரையும் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக இவர்களை புலிகள் பிடித்துச் சென்று விசாரணைக்குட்படுத்தியிருந்தனர். சற்று வசதி படைத்த விவசாயிகளான இவர்கள் படையினருக்கு உதவினார்கள் என்பதையொட்டியே விசாரணைகள் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இவர்களைச் சுட்ட பின்னர் சடலங்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்று மரண விசாரணை நடத்துவதற்கு புலிகள் தடை விதித்திருந்ததாகவும் பகல் 12 மணி வரை சடலங்கள் தார் வீதியில் வெயிலில் கிடக்க வேண்டுமென்று கூறியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு மரண தண்டனை வழங்கவிருப்பது பற்றி புலிகள் முதல் நாளே சுவரொட்டி மூலம் தெரியப்படுத்தி பொது மக்கள் முன்னிலையில் சுட்டனர் என்றும் கூறப்படுகிறது.

சுடப்பட்டவரில் காத்தலிங்கம் என்பவர் செங்கலடி மகாவித்தியாலய அதிபரின் தம்பியாவார்.

## வாகனங்களுக்குப் பாதுகாப்பில்லை

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை வங்கிகளுக்கு வங்கி அலுவல்கள் காரணமாகச் செல்லும் வாடிக்கையாளர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளைக்கூடப் பாதுகாப்பாக வைக்க இடமின்றித் தவிக்கின்றனர்.

தெருவோரங்களில் தமது சைக்கிள்களையும் மோட்டார் சைக்கிள்களையும் அநாதரவாக விட்டுச்செல்லும் வாடிக்கை யாளர்கள் தங்கள் அலுவல் முடிந்து வெளியேறும்வரை வாகனங்களின் நினைவாகவே இருக்க வேண்டியவர்களாகின்றார்கள்.

பாதுகாப்புக் காரணங்கள் என்ற போர்வையில் வாகனங்களை வங்கி வளவுக்குள் அனுமதிக்க மறுக்கும் வங்கி நிர்வாகம் தெருவோரங் களில் வைக்கப்படும் வாகனங்களுக்கு எந்தப் பாதுகாப்பு வசதியும் அளிப்ப தில்லை.

வாடிக்கையாளரின் பணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வங்கி, விளம்பரங்களுக்கு கோடிக்கணக்கில் செலவழிக்கும் நிலையில், வாடிக்கையாளர் தங்களை நாடிவரும் வேளையில் அவர்களது வாகனங்களுக்குப் பாதுகாப்பு வழங்க முன்வராதது கவலைக்குரியது என்கிறார் வங்கி வாடிக்கையாளர் ஒருவர்.


## விளம்பரப் பகுதி

### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

முதற்தர பாதணி விநியோக ஸ்தாபனமொன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. பிணை (SECURITY) அவசியம். மிகவும் வசீகரமான தரகுகளும் சலுகைகளும் வழங்கப்படும்.

உடன் விண்ணப்பிக்கவும்:–

சீட்டி ஷு கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்,
129, காலி வீதி, பள்ளி-முல்லை,
பாணந்துறை.



33 வருட கடும் சேவைக்கு பின் உலக மாந்திரீக சக்ரவர்த்தி என பட்டமெடுத்த எமது நிர்வாகத்தில் தெட்டத்தெளிவான சேவை என்னவென்றால் மலையாள மாந்திரீகமோ அல்லது ஜோதிட ஆயுள் கணிப்போ வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. பல மொழிக்கு ஒப்ப எனது நிர்வாகத்தில் எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு என்ன கிழமை உங்கள் உந்தன் விடயம் சரிவரும் என்று கருதி உறுதிமுத்திரையுடன் வாங்கும் பணத்திற்கு அத்தாட்சி வழங்கி பெயர் வாங்கிக் கொண்டிருப்பது அரசு அங்கிகாரம் பெற்ற திரு.பி.கே.சாமி (ஜே.டி.ஜீ.என்)ஜே.பி.யின் பி.கே.சாமி அசோசியட் தனியார் நிறுவனம் உண்மை பொய் அறிய நேரில் வந்து காணலாம் திரு.பி.கே.சாமி அவர்களை காலை ஆறு முதல் மாலை 2.00 மணிவரையே சந்திக்கலாம். நேரில் மட்டுமே அவரின் ஆலோசனை பெறலாம். தெளிவுரையாளர் மூலமே தொலைபேசியில் பேசலாம். ஆலோசனைக் கட்டணம் ரூபா 250. வெளிநாட்டவர்கள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 2000. அவர் அவர் கையிலேயே மாந்திரீகப் பார்சலை ஒப்படைக்க அவர்களது உண்மையான தொலைபேசி சரியான இலக்கத்தை குறிப்பிட்டு அங்கத்தவர் கட்டணம் 2000 ரூபா அனுப்பினால், அவர் இல்லத்திலேயே அவர்களது கையிலேயே எமது பிரதிநிதி பார்சலை ஒப்படைப்பார். வெளிநாட்டவரோ உள்நாட்டவரோ மலையாள மாந்திரீக சக்தி உதவி தேவையென்றால் உண்மை சேவையான எமது ஸ்தாபனத்திற்கு வருகை தரலாம்.

**நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ, கடிதத்தொடர்புகளுக்கோ**

திரு.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
ஸ்ரீ துர்க்காதேவி ஸ்தானம்,
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

தொலைபேசி வரிகள்:- 01-342463, 342464, 344831, 344832.
நுவரெலியா:- 052 3093, 2508, 3570, 3336.

இன்னும் உண்மை விளங்க எமது விளம்பர சேவை 'ஜோதிடம் பார்ப்போம்' நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமைதோறும் காலை 10.45 மணிக்கு FM 99இல் நடைபெறும் கேட்டு உண்மை அறியலாம்.

### வெளிவந்துவிட்டது...

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7.8,9
கல்வி மஞ்சரி O/L
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

BRIGHT BOOK CENTRE
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770

### BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்: ..............................
விலாசம்: ..............................

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL: 434770

### மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்தியிரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஏப்ரல் **20** முதல் **28** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 ஏப்ரல் **3, 4, 5** Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், (ஏப்ரல் **7, 8, 9**) கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD. BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

# போரும்-பொறியும்

**எக்ஸ்ரே ரிப்போர்ட் — நாரதர்**

**வ**டமராட்சியிலும், தென்மராட்சியிலும் உள்ள மக்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதுதான் அரசின் உடனடி நோக்கம்.

ஆளில்லாத மண்ணில் கொடி கட்டிய நடவடிக்கையாக சூரியக்கதிர் மாறியிருக்கிறது.

புலிகளை ஒருவழி பண்ணிவிட்டதாக அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் செய்த பிரசாரமும் புஸ்வாணமாகிவிட்டது.

புலிகளின் தளம் மாறியிருக்கிறதே தவிர, அவர்களின் தாக்குதல் பலம் குறையவில்லை என்பது வடக்கு-கிழக்கில் நடைபெறும் தொடரான தாக்குதல்கள் மூலமாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது.

கிழக்கில் வெற்றிகரமான அதிரடித் தாக்குதல்களை புலிகள் தொடுத்திருக்கிறார்கள்.

முகாம்களைத் தேடி புலிகள் வருவார்கள் என்று படைத்தரப்பு உஷாராக இருக்கும்போது, புலிகள் தமது உத்தியை மாற்றிக்கொண்டார்கள்.

முகாமைவிட்டு படையினரை வெளியே கொண்டுவந்து தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

கிழக்கில் நடைபெற்ற தாக்குதல்களில் சில புலிகளால் பொறிவைத்து நடத்தப்பட்டவை. புலிகள்வைத்த பொறியில் படையினர் சென்று மாட்டிக் கொண்டார்கள்.

28.3.96 மட்டக்களப்பு முறக்கொட்டாஞ் சேனை இராணுவ முகாமுக்கு புலிகள் சிலரை அனுப்பினார்கள்.

புலிகள் வந்து நடமாடுகிறார்கள்; உடனடியாகச் சென்றால் தாக்கலாம் என்று படையினருக்கு அவர்கள் சொன்னார்கள்.

முதலில் படையினர் அதனை நம்பவில்லை. புலிகள் மீண்டும் பொது மக்களில் சிலரை அனுப்பிவைத்தனர். "புலிகள் வந்து திரிகிறார்கள் என்று போய்ச் சொல்லுங்கள்" என அவர்களை அனுப்பிவைத்தார்கள்.

மறுபடியும் தகவல் வந்ததால் படையினரின் ரோந்துப்பிரிவு புறப்பட்டது.

வந்தாறுமூலையில் புலிகள் நடமாடுவதாகவே தகவல் சொல்லப்பட்டிருந்தது. எனவே, இராணுவ ரோந்து அணி விரைந்துசென்றது.

மாவடிவேம்பு என்னுமிடத்தில் வைத்து புலிகளது கெரில்லா அணி தாக்குதல் தொடுத்தது. படையினரும் பதிலடி நடிவடிக்கையில் ஈடுபட்டனர். 40 நிமிடம் பலத்த சண்டை. ஒரு மினிப் போர்க்களம் உருவானது.

சண்டையைத் தமக்கு வாய்ப்பான பகுதியில் ஆரம்பித்தவர்கள் என்றரீதியில் புலிகளுக்கு நிலவரம் சாதகமாக இருந்தது.

படையினர் தரப்பில் 40 பேருக்கு மேல் பலியானபோதும், புலிகள் தரப்பில் மூவர் மட்டுமே பலியானவர்கள்.

முகாம்களை தேடிச்சென்று தாக்குவது, பொறிவைத்து தாக்குவது, ரோந்து அணிகள்மீது தாக்குவது என்று புலிகளது தாக்குதல்கள் கிழக்கில் பரவலாகியிருக்கின்றன.

அநேகமான சந்தர்ப்பங்களில் படையினர், புலிகள் தரப்பு இழப்பை மிகைப்படுத்திக் கூறுகிறார்கள். தமது தரப்பில் பலியானவர்களது எண்ணிக்கையை கணக்கிட்டு, அதனைவிட கூடுதலாக புலிகள் பலியானதாக கணக்குக் காட்டுகிறார்கள்.

வடக்கு-கிழக்கு போர்முனை நிலவரத்தை, படைத்தரப்பு வெளியிடும் எண்ணிக்கைப்படி நோக்கினால் புலிகளது ஆட்பலத்தில் 75 வீதம் குறைந்திருக்க வேண்டும். பிரபாகரனும் அவரோடு சிலரும்தான் பாக்கியிருப்பதாக எண்ணத் தோன்றும்.

தொடர்ந்து ஒரேவிதமாகவே கணக்குக் கூறுவதால் படையினர் தரப்பால் கூறப்படும் புலிகள் தொடர்பான இழப்பு விபரங்களை தென்னிலங்கையின் சிங்களப் பத்திரிகைகள்கூட நம்புவதை விட்டுவிட்டன. வெளியே என்னதான் கூறினாலும் புலிகளது தாக்கும்திறன் குறித்து படைத்தரப்புக்கும் தெரியும். அரச உயர் மட்டத்திற்கும் தெரியும்.

இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைக்கு இவ்வளவு காலம் எடுத்திருக்க வேண்டியதில்லை.

யாழ்ப்பாணத்தில் புலிகளது நடமாடும் யுத்த தந்திரத்தால் படையினர் முகாம்களுக்குள்தான் இருக்கவேண்டிய நிலை.

அராலித்துறையில் இருந்த மினிமுகாம் ஒன்றை புலிகளால் தாக்கமுடிந்தது என்றால், நீண்டகாலத்திற்கு படையினர் ஒரேவிதமாக நிலைகொண்டிருக்க முடியாது என்பதையே காட்டுகிறது.

பாரிய மோதல்களைவிட, இடைக்கிடையே நடைபெறும் தாக்குதல்கள்தான் தலையிடியான விஷயம்.

எப்போதுமே விழிப்பாக இருப்பது என்பது யாராலும் முடியாத காரியம். கொஞ்சம் அயர்ந்தால் போதும்; புலிகள் தாக்கிவிடுவர்கள். பரந்த யாழ்ப்பாணத்தில் புலிகள் மறைந்திருக்கவா இடமில்லை?

யாழ்ப்பாணம் முழுக்க ஒரே நேரத்தில் அங்குலம் அங்குலமாக தேடுதல் நடத்துவது நினைத்தும் பார்க்க முடியாத காரியம்.

எனவே-யாழ்ப்பாணத்தையும் வைத்துக்கொண்டு, வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது படைத்தரப்புக்கு சுமையான விஷயம்.

தற்போது யாழ்ப்பாணத்தில் படையினர் நிலைகொண்டிருப்பது 'சுண்டைக்காய் காப்பணம், சுமைகூலி முக்காப்பணம்' என்ற நிலைதான்.

மக்கள் இல்லாத பகுதியில் நிலைகொண்டிருப்பதால் அரசியல்ரீதியிலும் அரசாங்கத்திற்கு இலாபமில்லை.



பரந்த நிலப்பரப்பில் பெருந்தொகையான படையினரை குவித்துவைத்திருப்பதால் படைத்தரப்புக்கும் இலாபமில்லை.

மக்கள் நடமாட்டமே இல்லாத பகுதியில் தொடர்ந்திருக்கும்போது படையினரும் உளவியல் ரீதியாக தளர்ந்துபோகும் நிலை தோன்றும்.

"புலிகளின் பிரதான தளப்பிரதேசம் எமது கையில்" என்று படையினர் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், வன்னியில் இருந்துகொண்டு, முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது மேற்கொண்ட அதே நடவடிக்கைகளை புலிகள் தொடர்கிறார்கள்.

எனவே-'புலிகளது பிரதான தளப் பிரதேசம் எமது கையில்' என்று படைத்தரப்பு சொல்வதும் இராணுவரீதியில் பலமான நிலையாகக் கொள்ளப்படமுடியாது.

இந்நிலையில்தான் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் உள்ள மக்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு படைத்தரப்பு திட்டமிடுகிறது.

அதன்மூலம் மக்கள் இல்லாத பகுதியில் தாம் நிலைகொண்டிருப்பதாக சொல்லப்படுவதை பொய்யாக்கலாம் என்பதுதான் நோக்கம்.

வடமராட்சி, தென்மராட்சி இரண்டையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது கடினமாக இருக்கலாம் என்றால், அங்குள்ள மக்களை யாழ்ப்பாணத்திற்குள் செல்லவைக்கக்கூடிய நடவடிக்கையில் படையினர் ஈடுபடலாம்.

அதன்மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேறிய பகுதிகளில் அவர்களை குடியமர்த்த அரசாங்கம் நினைக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய மக்களில் ஒரு பகுதியினர் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ளனர்.

அவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றால், அதனைவைத்து புனர்வாழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக அரசாங்கம் கூறிக்கொள்ள முடியும்.

வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் உள்ள மக்கள் வெளியேற வேண்டும் என்று கடந்த ஒரு மாதகாலமாக புலிகள் கூறிவருகின்றனர்.

படையினரின் நடவடிக்கை ஆரம்பமாகப் போவதாக உறுதியான தகவல்கள் வெளியான பின்னரும் பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்து செல்ல விரும்பவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து மக்களை வெளியேற்றியதுபோல, வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து மக்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றுவது புலிகளால் முடியக்கூடிய காரியமாகத் தெரியவில்லை.

வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் இருந்து கிளாலி கடல் ஏரிவழியாக புலிகளது இலவசப்படகுச் சேவை மூலமாக கடந்தவாரம் கிளிநொச்சி வந்தவர்களில் பலர் புலிகளின் ஆதரவாளர்கள். மற்றும் புலிகள் இயக்க உறுப்பினர்களது குடும்பத்தினர்தான்.

ஏனையோர் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க விரும்புகிறார்கள் என்பது அர்த்தமல்ல. ஆனால், இடம்பெயர்ந்து சென்றால் திரும்பிவர நீண்டகாலம் எடுக்கலாம். அந்த இடைப்பட்ட காலத்தில் தமது வீடுகள், சொத்துக்கள் பாழடைந்துபோகலாம் என்று நினைக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் மக்களை வெளியேறச் சொன்னது குறுகிய கால அவகாசத்தில்தான். அதனால் மக்கள் புலிகளது அறிவித்தல் தொடர்பாக யோசிக்கவே சந்தர்ப்பமிருக்கவில்லை. அது தவிர படையினரின் ஷெல் மழையும், டாங்கிகளின் தாக்குதல் ஓசைகளும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருந்தன.

புலிகளின் பதிலடி எவ்வாறு இருக்கப் போகிறது என்பது தொடர்பாகவும் பல்வேறு வதந்திகள் பரவியிருந்தன.

யாழ்நகருக்குள் படையினர் வரும்வரை அனுமதித்துவிட்டு பெரும் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருப்பதாக ஒரு செய்தி பரவியது.

"படையினரை உள்ளே அனுமதித்துவிட்டு இறுதி முடிவு கட்ட பிரபாகரன் தீர்மானித்துவிட்டார். விஷவாயு அடித்து சகல படையினரையும் பலியாக்கப் போகிறோம்" என்று புலிகள் அமைப்பு உறுப்பினர்களே கூறினார்கள்.

இவ்வாறு ஒரே குழப்பமும், அச்சமும் நிறைந்த சூழலில் மக்கள் வெளியேற்றம் வேகமாக நடந்தது.

ஆனால், இப்போது நிலவரம் வேறு. மக்களுக்கு யோசிக்க சந்தர்ப்பம் இருக்கிறது.

படையினர் முன்னேறிவரும்போது உயிரிழப்புக்கள் ஏற்படலாம். படையினரின் நடவடிக்கைகள் கடுமையாக இருக்கும் என்றெல்லாம் நினைத்தாலும்கூட, ஒரே ஒரு விடயம்தான் அவர்கள் வெளியேற்றத்தை தடுக்கிறது.

'இடம்பெயர்ந்து சென்றால் தற்போதைக்கு திரும்பிவர முடியாது. அதைவிட இங்கேயே இருந்துவிடலாம். நடப்பது நடக்கட்டும். தலைவிதிப்படி நடக்கும்' என்ற மனநிலைதான் மக்கள் வெளியேற்றத்தைத் தடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து மக்களை வெளியேறுமாறு புலிகள் கோரியபோதே, யாழ்குடாநாடு முழுவதும் இருந்து மக்களை வெளியேறுமாறு கேட்டிருந்தால், அப்போது சுலபமாக வெளியேற்றியிருக்கலாம்.

அதேபோல யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த சூட்டோடு, வடமராட்சி, தென்மராட்சி நோக்கியும் படை நடவடிக்கை ஆரம்பித்திருந்தால், தற்போது அங்குள்ள மக்களைவிட அதிகமான மக்கள் படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்திருப்பார்கள்.

அந்தளவுக்கு நடவடிக்கையில் இறங்க படைத்தரப்பு முன்வராததுக்கு காரணம் இல்லாமல் இல்லை.

திடீரென்று அகலக்கால்வைத்து இடறி விழுந்து விடுவதாகிவிடும் என்று படைத்தரப்பு தயங்கியது.

படைத்தரப்பை பரவலாக்கினால் நீண்ட இராணுவ வேலி போடவேண்டியிருக்கும். புலிகள் இடையிலே புகுந்து ஊடுருவி வேலியை குறுக்கே வெட்டிவிட்டால் படைத்தரப்பின் ஒரு கணிசமான பகுதி ஏனைய பகுதிகளோடு தொடர்பிழந்துவிடும்.

தாமாகவே சென்று புலிகளின் பொறியில் மாட்டிக்கொண்டதாகிவிடும் என்று படைத்தரப்பு நினைத்திருக்கலாம்.

படைத்தரப்பினர் யாழ் குடாநாட்டில் எந்தளவுக்கு பரவலாகிறார்களோ, அந்தளவுக்கு புலிகளுக்குச் சாதகம்.

ஒன்று குவிந்திருக்கும் படையினர்மீது தாக்குதல்கள் தொடுப்பதைவிட, பரவலாகி பரந்திருக்கும் படையினர்மீது தாக்குதல் நடத்துவதையே கெரில்லா அணிகள் விரும்பும்.

எனவே, மீண்டும் ஒரு நடவடிக்கை மூலமாக படைத்தரப்பை பரவலாக்குவதால் ஏற்படக்கூடிய பாதகங்களை படத்தரப்பின் தலைமைப்பீடம் உணர்ந்தே இருக்கிறது.

ஆனால் எவ்வாறெனினும் ஒரு நடவடிக்கையை வடக்கில் மேற்கொண்டேயாக வேண்டியது அரசுக்குள்ள கட்டாயம்.

இல்லாவிட்டால், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பலன் மக்களை வெளியேற்றியது மட்டும்தான் என்றாகிவிடும்.

பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லவே வெட்கப்பட்டுக்கொண்டிருக்கிறது அரசு. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையைப் பொறுத்தவரை மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை என்ற நிலைதான் அரசுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது.

அதனால், எப்பாடு பட்டாவது தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் கணிசமான அளவு மக்களை கொண்டுவந்தே தீருவது என்ற முடிவில் இருக்கிறது அரசாங்கம்.

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளை நோக்கி படையினர் பாரியளவில் முன்னேறினால் அனுமதிப்பது என்ற நிலையில்தான் புலிகள் இருக்கிறார்கள்.

பெயரளவுக்கான எதிர்ப்பு மட்டுமே புலிகள் தரப்பில் இருந்து காட்டப்படும்.

வடமராட்சி, தென்மராட்சியை படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதோடு யாழ் குடாநாடு முழுவதும் படையினர் வசம் சென்றுவிடும்.

ஆனால், அதனை புலிகளின் வீழ்ச்சி என்று அரசு பிரசாரம் செய்யுமானால் அது தப்புக்கணக்குத்தான் என்று துணிந்து சொல்லலாம்.

புலிகளுக்கு பலமாக அடித்துவிட்டு பின்னர் பேசுவோம் என்றரீதியில் ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருக்கிறார்.

புலிகளை பூரணமாக வெற்றிகொள்ள முடியாது. எத்தகைய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், புலிகள் தாக்குதல் திறன் கொண்ட அமைப்பாகவே இருப்பார்கள் என்பதை ஜனாதிபதி உணர்ந்திருக்கிறார் என்றே தோன்றுகிறது.

சித்திரை வருடத்தின் முன்னர் புலிகளை வெற்றிகொள்ளுவோம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை கூறியிருந்தார்.

சித்திரைப்புத்தாண்டும் வந்துவிட்டது. அடுத்த அவசரகால சட்ட விவாதத்தில் அவரைக் கிண்டல் செய்ய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காத்திருக்கிறார்கள்.

புலிகளை ஒரேயடியாக வெற்றிகொள்ளலாம் என்பது ஒரு கனவு என்பதை ஜனாதிபதி உணர்ந்துவிட்டார்.

அந்த உணரல் என்பது, தமிழ் மக்கள் மீதான ஜனாதிபதியின் அதிருப்தியாக மாறி வருகிறது.

புலிகள் நிலைத்து நிற்பதற்கு தமிழ் மக்களது ஆதரவே காரணம் என்று ஜனாதிபதி நினைக்கிறார்.

அந்த நினைப்பில் தவறில்லை. வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மட்டுமல்ல, கொழும்பிலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களும்கூட புலிகளை ஆதரிக்குமளவுக்கு நிலமை மாறி வருகிறது.

ஆனால், அதற்கான காரணம் என்னவென்று அறியாமல் ஜனாதிபதி தமிழ் மக்கள் மீது அதிருப்திப்படுவது சரியாக இல்லை.

'மொஸ்கோவில் மழை பெய்தால் மருதானையில் உள்ள கம்யூனிஸ்ட்டுக்களும் குடை பிடிப்பார்கள்' என்று முன்னர் கேலி செய்வதுண்டு. அது அர்த்தமுள்ள கேலியாக இருக்கலாம்.

சிங்கப்பூரில் இலங்கை கிரிக்கெட் அணி வெற்றிபெற்றால் கொழும்பில் வெடி கொளுத்துவதை கேலி செய்ய முடியாதல்லவா?

அதுபோலத்தான், யாழ்ப்பாணத்தில் புலிகள் தோல்வி கண்டபோது, கொழும்பில் உள்ள தமிழர்களின் முகம் சுருங்கியது. காரணம் என்ன, யாழ் வெற்றிக்கு வெடி கொளுத்தியவர்கள் மலையகத் தமிழர்கள், கொழும்புத் தமிழர்கள் என்றெல்லாம் பிரித்துப் பார்க்கவில்லை. சகல தமிழர்களையும் பார்த்து 'அடி எப்படி?' என்பதுபோல கேட்டார்கள்.

யாழ்ப்பாணம் என்ற அழகிய தமிழ் பெயரை, 'யாப்பா பட்டுன' என்று அரசாங்கம் குறிப்பிட ஆரம்பித்தது.

இதெல்லாம் நடந்தபின்னர்தான், 'புலிகளின் தோல்வி தமிழர்களின் தோல்வியாகிவிடும்' என்ற எண்ணம் சகல தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்பட்டது.

சூரியக்கதிர் வெற்றியை மிகைப்படுத்தியதிலும், அரசியல் லாபத்திற்காக அமர்க்களப்படுத்தியதிலும் அரசாங்கத்திற்கும் பங்குண்டு.

'யாப்பா பட்டுனவை மீட்ட' செய்தி அடங்கிய பேழையை பிரதி பாதுகாப்பு அமைச்சரிடம் இருந்து பெற்றவர் ஜனாதிபதிதான். யாழ்ப்பாணம் என்ற பெயர் மாற்றப்பட்டதால் தமிழ் மக்களிடம் ஏற்பட்ட உணர்வு அரசுக்கு சாதகமாக இருக்கவில்லை.

எனவே-சூழ்நிலைகள், காரணங்கள் என்பவற்றை ஆராயாமல் தமிழ் மக்கள் மீது வெறுமனே அதிருப்திப்படுவது பயன் தராது.

இப்போதுகூட, புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்று தெரிந்தும், அரசியல் நோக்கத்திற்காக, தெற்கில் தமது முஷ்டியை உயர்த்திக் காட்டுவதற்காக படை நடவடிக்கைக்கு பச்சைக் கொடி காட்டப்படுகிறது.

மாகாணசபைகளை கலைத்து நீதிமன்றத்தில் வாங்கிய குட்டு வலிக்கிறதோ இல்லையோ, அது தொடர்பாக எதிர்க்கட்சி செய்யும் பிரசாரம் வலி கொடுக்கவே செய்யும்.

அந்த வலியைத் தணிக்கவும் படை நடவடிக்கையும், வலிமை காட்டலும் அரசுக்கு தேவையாக இருக்கிறது.

ஆக, இனப்பிரச்சனையை தீர்க்கும் நோக்கம் பின்தள்ளப்பட்டு, அவ்வப்போது தோன்றும் பிரச்சனைகளைப் பொறுத்து வடக்கு-கிழக்கு நிலவரத்தை அரசு கையாளப் பார்க்கிறது.

சலித்துப்போயிருக்கும் தென்னிலங்கை பொதுஜனத்தை உற்சாகப்படுத்த வடக்கில் ஒரு 'சிக்ஸர்' அடித்துக் காட்டத்தான் இராணுவ நடவடிக்கை.

ஆனால், எவ்வித திட்டமும் இல்லாமல் வடக்கில் படையினர் குவிவதும், பரவலாவதும் புலிகளது பொறிக்குள் சிக்குவதாகவும் மாறலாம்.


யாழ்-குடாநாட்டில் படையினர் குவிந்து பரவலாவதால் புலிகளுக்கு இரண்டுவகையில் லாபம்.

ஒன்று- கிழக்கில் பரவலான தாக்குதல் தொடுக்கலாம்.

இரண்டு- யாழ் குடாநாட்டில் திடீர் தாக்குதல்கள் நடத்தி ஆயுதங்களை எடுக்கலாம்.

இரு தரப்புக்குமே சுலபத்தில் வெற்றி கிட்டாத ஆட்டம் இது. வலி முழுக்க மக்களுக்குத்தான்.

# அதிரடி அய்யாத்துரை



**அ**திகாரமுள்ள 'சக்தி'யானவர் அயலகப் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்தார். கூட்டான கட்சியின்மீது கூடுதலாக தாக்கிப்போட்டார். பேட்டியைப் படிச்சுப்போட்டு கூட்டான கட்சி வட்டாரம் அப்செட்டாகிப் போட்டுதாம். கூட்டான கட்சித்தலைவர் எக்கச்சக்கமாக நொந்துபோய் இருக்கிறார். ரெண்டு எழுத்தாருக்கும் நோகாமல், அதிகார தரப்புக்கும் வலிக்காமல் சுழியோட்டம் நடத்தலாம் எண்டு போட்ட கணக்கெல்லோ பிழைச்சுக்கொண்டிருக்குது. நினைச்சா கவலை வரத்தான் செய்யும்.

"**வ**டபகுதி மக்களுக்கு அரசாங்கம் ஒரு விஷயத்திலை கட்டாயம் நன்றி சொல்ல வேண்டிய தருணம் இது" எண்டார் ஒரு நண்பர். அதென்ன விஷயம்? எண்டு கேட்டேன். மின்சாரத்தை பல வருடமாக மிச்சம் பிடிச்சு உதவியிருக்கினமல்லோ. அதுக்காக நன்றி சொல்ல வேண்டாமோ? 4 மணிநேர வெட்டும் போதாமல் இருக்குதாம். வடக்கிலும் மின்சாரம் பாவிக்கப்பட்டிருந்தா ஆறுமணி நேர வெட்டல்லோ போட்டிருக்க வேணும்" எண்டார் நண்பர். அதுவும் சரிதானே!

**இ**ந்த வருஷக் கடைசியில் பொதுத்தேர்தல் வருமாம். கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை ஒண்டு செய்தி போட்டிருக்குது. உதெல்லாம் கொழும்பில் இருந்துகொண்டு தீர்மானிக்கிற விவகாரம் இல்லை எண்டது அய்யாத்துரையின் அபிப்பிராயம். வன்னியிலிருந்து சிக்னல் எப்படி வருகுது எண்டதைப் பொறுத்து தீர்மானிக்கவேண்டிய விஷயமல்லோ அது. பள்ளிக்கூடம் நடத்தவே பயமாகக் கிடக்கு; பகிரங்க கூட்டம் நடத்தி பிரசாரம் செய்யிறது எப்படியுங்கோ?

**த**லைநகரில் உள்ள பிரபல தமிழ் வர்த்தகர்கள் சிலர் தங்கள் குடும்பங்களை இந்தியாவுக்கு இடம்மாற்றுவதாகத் தகவல். நிலவரம் சரியில்லை. நிச்சயமாக எதனையும் சொல்ல முடியாமல் இருக்கிறது. வருமுன் காப்பது புத்திசாலித்தனம் எண்டு நினைக்கினமாம்.

**தி**ட்டத்தை தயாரிக்க உதவியவர் நீலமானவர். திட்டத்தை வரவேற்றவர் கூட்டானகட்சித் தலைவர். தெரிவுக்குழுவுக்கு வையுங்கோ; எண்டும் முழுச் சப்போட் தருவோம் எண்டும் தனியாகச் சந்தித்து சொன்னது கூட்டான கட்சி. ஏனைய தமிழ் கட்சிகளும், ரெண்டு எழுத்தாரும் கடும் நிலைப்பாடு எடுத்தவுடன் கூட்டான கட்சி குத்துக்கரணம் அடிச்சுப்போட்டுது. தன்னிடம் சொன்னது ஒன்று, செய்வது ஒன்று எண்டு தெரிந்தவுடன்தான், அதிகாரமுள்ள 'சக்தி'க்கு கெட்ட கோபம் வந்ததாம். சாராயக் கடை கோட்டாவும் கேட்கிறது. சூரர்கள் மாதிரியும் பேசுறது. நினைச்சுப்பார்த்தால் கோபம் வருவது நியாயம் எண்டுதான் படுகுது. நீங்கள் என்ன நினைக்கிறியள்? உரிமைக்கு போராடினால் சலுகை கேட்கக்கூடாது. சலுகைக்கு மன்றாடிக்கொண்டு வீர அறிக்கை விடக்கூடாது. டபுள் கேம் போட்டா யாருக்குத்தான் கோபம்வராது? சிலரை பலநாள் ஏமாற்றலாம். பலரை..!

**வி**ழுந்து விழுந்து அரசியல் தீர்வு யோசனை திட்டத்தை வரவேற்ற தமிழ் பத்திரிகையாளர்களில் சிலர், 'நாம் அல்ல, அது நாம் அல்ல' எண்ட கதையாக சத்தம் காட்டுகினம். தமிழ் கட்சிகளில் பிழைகள் இருக்கலாம். ஆனால் பாருங்கோ, கூட்டான கட்சியைத் தவிர வேறு எந்த தமிழ் கட்சியும் அரசியல் தீர்வு யோசனையை வரவேற்கவேயில்லை. அதனை வரவேற்று எழுதி, எழுதிய பத்திரிகைக் 'கட்டிங்குகளை' மேலிடத்துக்கு அனுப்பிய பத்திரிகையாளர்கள் சிலர் சத்தம் பேசுவது அத்தனை பொருத்தமாகப் படேல்லை. வாசகர்களின் ஞாபகசக்தியில் அவைக்கு நம்பிக்கையில்லையெண்டு நல்லாத் தெரியுது. இன்னும் பல விஷயங்கள் இருக்கு. மெல்ல மெல்லச் சொல்லலாம்.

**பொ**ங்கல் பரிசாக வானொலி தமிழ் சேவையில் புது அலைவரிசை தந்ததல்லோ?! சித்திரை வருசத்துக்கு முந்தியாவது தந்த பரிசை மெருகூட்டினால் என்ன? ஒரே இரைச்சல். ஒலிப்பதிவுகளிலும் கோளாறு. கறார்புறார் சத்தங்கள். செந்தமிழ் பாடல்கள் தேளாகக் கொட்டலாமோ? ஏனைய மொழி அலைவரிசைகள் மட்டும் சுத்தமாக இருப்பது எப்படியுங்கோ? இதைவிட பரிசு தராமலேயே இருந்திருக்கலாம் எண்டு நினைக்க வைக்கிறது நல்லாயில்லை!

**க**விதைகளில் சிலேடை பாவிப்பது தெரியுமல்லோ. "விளக்குமாறு கேட்கிறேன்." இதில் விளக்குமாறு ரெண்டு அர்த்தத்தில் வரும். அதுபோல கண்ணதாசன் பற்றி வைரமுத்து எழுதிய கவிதை-

"முப்போதும் தமிழுக்காய்
மூச்சுவிடும் கவியுனக்கு
எப்போதும் சிந்தனைகள்
இடைவிடாத கற்பனைகள்"

இடைவிடாத என்பதில் சிலேடை இருக்கிறது. கண்டு பிடியுங்கள்.

# அரசியல் தொடர்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## கிட்டுவுக்கு கிட்டிய பிரபலம்

### சுரண்டல் ரிக்கெற்

யாழ்ப்பாணம் கோட்டை முகாமில் இருந்து அல்லைப்பிட்டிக்கு சென்று கொண்டிருந்த இராணுவ அணிமீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

கோட்டை முகாமுக்கு சமீபமாகவுள்ள மதகு ஒன்றின் அருகே போராளிகள் பதுங்கியிருந்தனர்.

முகாமுக்கு அருகிலுள்ள மதகு என்பதால், அங்கு போராளிகள் வருவார்கள் என்று படையினர் எதிர்பார்க்கவில்லை.

டிரக் வண்டியில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரை நோக்கி சிலிண்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ இராணுவம் (TEA) இத் தாக்குதலை மேற்கொண்டது.

தமிழீழ இராணுத்தின் யாழ் மாவட்ட பொறுப்பாளராக அப்போதிருந்தவர் நந்தன்.

சிறிய இயக்கமாக இருந்தபோதும் தமிழீழ இராணுவமும் வரிவிதிப்புக்களில் ஈடுபட்டது.

புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இரண்டும் வரிவிதிக்காத துறைகளாகப் பார்த்து தமிழீழ இராணுவம் வரிவிதிக்கும்.

அதிஷ்டலாப சீட்டுகளுக்கு தமிழீழ இராணுவம் வரிஅறவிட்டு வந்தது.

யாழ்ப்பாணத்தில் அப்போது சுரண்டி இலக்கம் பார்க்கும் அதிஷ்டலாபச் சீட்டுகளுக்கு பலத்த கிராக்கி. அந்த ரிக்கெட்டுக்களை சுரண்டல் ரிக்கெட்டுக்கள் என்றுதான் சொல்லுவார்கள்.

சுரண்டல் ரிக்கெட்டுக்களை அனுமதிக்கலாமா? மாக்சிய தத்துவப்படி பிழையாச்சே! என்று நினைத்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

சுரண்டல் ரிக்கெட்டுக்கள் ஈழத்தில் தடைசெய்யப்படுகின்றன என்று அறிவித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

சுரண்டல் ரிக்கெற்காரர்கள் தமிழீழ இராணுவத்திடம் ஓடினார்கள். தமிழீழ இராணுவத்தினர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புடன் பேச்சு நடத்திப் பார்த்தார்கள்.




ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புடன் பேசுவது என்றால் மாக்சியம் தெரிந்த ஆளுடன்தான் செல்ல வேண்டும் என்று நந்தன் நினைத்தார். மாக்சியம் தெரிந்த ஆசிரியர் ஒருவரை அழைத்துப் போனார்.

தடையை நீக்கவே முடியாது என்று விட்டனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பில் பேசிய ரமேசும், டேவிற்சனும்.

அத்தோடு சுரண்டல் ரிக்கெற் விற்பனை வடக்கு-கிழக்கில் நிறுத்தப்பட்டது.

### கிட்டுவின் பிரபலம்

1986 இன் மத்திய பகுதியில் புலிகளது யாழ்மாவட்ட பொறுப்பாளரும், தளபதியுமான கிட்டுவின் செல்வாக்கு உயரத் தொடங்கியது.

'கிட்டு மாமா' என்று அழைக்கப்பட்டார். வெளிநாட்டு பத்திரிகையாளர்களும், உள்நாட்டுப் பத்திரிகையாளர்களும் கிட்டுவின் பேட்டிகளை வெளியிட்டனர்.

கிட்டுவிடம் காணப்பட்ட தனித்தன்மைகள் அவரை ஏனையோரிடம் இருந்து பிரித்துக்காட்டின.

புலிகளது பயிற்சி முகாமில் கிட்டு குறிதவறாமல் சுட்டுத்தள்ளும் காட்சிகளைக் கொண்ட புலிகளது வீடியோ பிரசார படங்களும் காண்பிக்கப்பட்டன.

புலிகள் இயக்கம் என்றால் கிட்டு மாமாதான் என்று நினைக்குமளவுக்கு கிட்டுவின் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்தது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் மத்தியில் கிட்டுவும் நிற்கிறார் என்றால் உடனே தெரிந்துவிடும்.

ஏனையோர் நீண்ட காற்சட்டை போட்டிருந்தால் கிட்டு அரைக்காற் சட்டையுடன்தான் காணப்படுவார்.

எல்லோரும் நீண்ட காற்சட்டையுடன் நின்று, கிட்டுவும் நீண்டகாற்சட்டையுடன் வந்துவிட்டால், மேலே சட்டைபோடாமல் வெற்றுடம்புடன் காட்சியளிப்பார்.

அதனால் ஏனைய இயக்கங்கள் கிட்டுவை, 'திரில் காட்டுபவர்' என்று பட்டம் சூட்டியிருந்தார்கள்.

தமது வீடுகளுக்கு வந்து விருந்துண்ணுமாறு கிட்டுவை அவரது அபிமானிகள் அழைப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்த 'சைனிஸ் ரெஸ்ட்ரோரண்ட்' ஒன்றில்தான் கிட்டுவும், அவரது மெய்ப்பாதுகாவலர்களும் சாப்பிடுவார்கள்.

கிட்டுவுக்கு நம்பிக்கையான இடம் அது. வீட்டுக்கு விருந்துண்ண வருமாறு அழைப்பவர்களிடம் குறிப்பிட்ட ரெஸ்ட்ரோரண்டின் பெயரைச் சொல்லி, அங்கு "தனக்கும், தனது மெய்ப்பாதுகாவலர்களுக்கும் சேர்த்து பணம் கட்டிவிடுங்கள். நாங்கள் போய் சாப்பிட்டுக்கொள்கிறோம்" என்று கூறிவிடுவார் கிட்டு.

தனது மெய்ப்பாதுகாவலர்களாக கூட இருந்தவர்களையே யாழ்ப்பாணத்திற்குள் பகுதிப் பொறுப்பாளர்களாக கிட்டு நியமித்தார்.

ஆயினும், கிட்டுவிடம் இருந்த விசேஷம் என்னவென்றால், தனக்கு வேண்டியவர்கள் என்பதால் பிழை செய்பவர்களை தண்டிக்காமல் விடுவது கிடையாது.

ஏனைய இயக்கங்களின் பொறுப்பாளர்கள் பலரிடம் காணப்படாத குணாம்சம் இது.



கிட்டு

### கிட்டத்தட்ட

கிட்டுவின் பெயர் பிரபலமாகிவந்த அதே நேரத்தில், கிட்டு-மாத்தையா பிரச்சனையும் வளர்ந்து வந்தது.

கிட்டுவோடு பிரபாகரனுக்கும் பிரச்சனை என்று கதைகள் பரவத் தொடங்கின.

பிரபா-கிட்டு பிரச்சனை என்று நகைச்சுவையாக ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. அது இதுதான்.

பிரபாகரனிடம் ஒருவர் கேட்டாராம், "உங்கள் இயக்கத்திற்குள் பிரச்சனையாமே உண்மையா?"

அதற்கு பிரபாகரன் சொன்னாராம் "கிட்டத்தட்ட பிரச்சனை தீர்ந்தமாதிரித்தான்."

கிட்டத்தட்ட என்பதை கிட்டைத்தட்ட என்ற அர்த்தத்தில் பார்த்தால் அந்த நகைச்சுவையின் சாராம்சம் புலப்படும்.

அப்போது பிரபாகரன் தமிழ்நாட்டில் தங்கியிருந்தார். யாழ்ப்பாணத்தில் கிட்டுவின் பெயர் பிரபலமாகியதால், பிரபாகரனின் பிடி தளர்ந்துவிட்டதைப் போன்ற கருத்து ஏற்பட்டது.

பிரபாவின் ஆதரவு மாத்தையாவுக்கு இருப்பதாகவே நம்பப்பட்டது. ஆனாலும் கிட்டுவைமீறி பிரபாகரன் எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறார் என்றுதான் ஏனைய இயக்கத்தவர்கள் சொல்லிக்கொண்டனர்.

### ஐ.நாவில் இலங்கைப் பிரச்சனை

1986 இல் நடைபெற்ற முக்கியமான அரசியல் நிகழ்வொன்றையும் சொல்ல வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் இனப்பிரச்சனை விவகாரத்தை கிளப்பியது இந்திய அரசு.

இந்தியத் தூதுக்குழுவின் தலைவரான டாக்டர் ஜீ.எஸ்.திலான் ஐக்கிய நாடுகள் சபையில் முதன் முதலாக இலங்கைப் பிரச்சனை தொடர்பாக குரல் எழுப்பினார்.

"சிறீலங்கா அரசின் உயர் தலைவர்கள் வெளியிடும் அறிக்கைகளைப் படித்தால், அவர்கள் இராணுவத்தீர்வு ஒன்றையே விரும்புவதாகத் தெரிகிறது." என்றார் டாக்டர் ஜி.திலான். 5.3.86 அன்று திலானின் குரல் ஒலித்தது.

13.3.86 இல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் இலங்கைப் பிரச்சனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

18 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

சைப்பிரஸ் நாட்டு பிரதிநிதி மைக்கேல் ஷெரிப்ஸ் பின்வருமாறு சொன்னார்: "சிறீலங்காவில் உள்ள தமிழர்களின் அடிப்படையான அரசியல் உரிமைகள், சிவில் உரிமைகள், மற்றும் மனித உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும்வகையில் திட்டவட்டமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும்."

கனடா நாட்டுப் பிரதிநிதி சொன்ன கருத்து இது: "தமிழர்கள் அடர்த்தியாக வாழும் யாழ்ப்பாண கிராமங்களில் விமானம் மூலம் சிறீலங்கா அரசு குண்டுவீசி சாதாரண மக்களை பலியாக்குவது அதிர்ச்சி தருகிறது. சிறீலங்காவில் நடைபெறும் சண்டையில் அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டு வருவதையிட்டு கனடிய அரசு மிக வேதனை அடைந்துள்ளது."

இலங்கை விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு கொண்டு சென்றது மூலமாக இந்தியா இலங்கை அரசுக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்தது.

இலங்கைப்பிரச்சனையில் இந்தியா தலையிடவேண்டிய தார்மீக காரணத்தை உலகுக்கு உணர்த்தவும் இந்தியா விரும்பியது.

அவசியம் ஏற்பட்டால் இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிட இந்தியா தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதையும் ஓரளவு ஊகிக்கக் கூடியதாகவிருந்தது.

## கறுப்புச் சட்டையினர் மீது தாக்குதல்

### திலானின் உரை

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற தமிழ் மக்களும், மலையகத்தில் உள்ள இந்திய வம்சாவளிமக்களும் இலங்கை விவகாரத்தில் தலையிட இந்தியாவுக்குள்ள நியாயமான காரணிகளாக இருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் டாக்டர் ஜி.திலான் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது:

"இலங்கை அரசு அங்குள்ள ஆயுத மேந்திப் போராடும் அமைப்புகளுக்கும், சாதாரண மக்களுக்கும் இடையே வித்தியாசம் காட்டுவதில்லை.

ஒரு இலட்சத்து 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாக வந்துள்ளனர். சுமார் 45 ஆயிரம் தமிழர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். தற்போதைய நிலையைப் பார்க்கும்போது, அவர்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் தாயகத்திற்கு திரும்பிச் செல்ல முடியாது.

அகதிகளாகவரும் தமிழர் தொகை மேலும் மேலும் கூடி வருகிறதேதவிர குறைவதற்கு வழியே காணவில்லை.

தமிழ் சிறுபான்மையினரின் அடிப்படை மனித உரிமைகள்கூட இலங்கை அரசினால் கடுமையாக மீறப்படுகின்றன.

இலங்கையின் வடக்கு-கிழக்கிலே வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக கண்மூடித்தனமான வன்முறை இலங்கை அரசினால் ஏவிவிடப்படுவதற்கு தெளிவான சாட்சியங்கள் இந்தியாவிடம் இருக்கின்றன.

மனித உரிமைகள்மீது அக்கறை கொண்ட சகல நாடுகளுக்கும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கை ஒரு சவாலாகிவிட்டது." என்றார் திலான்.

அன்று இந்தியாவின் குரலையும், இன்று இந்தியாவின் மௌனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லையல்லவா.

### தரையிறங்கிய ஹெலி

யாழ்ப்பாணத்தில் கைதடிப் பாலத்தருகே உள்ள வெளியில் இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர் ஒன்று தரையிறங்கியது.

இயந்திரக்கோளாறு காரணமாகவே ஹெலி தரையிறங்கியது.

செய்தியறிந்து இயக்கங்கள் சென்றன. ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ் ஆகிய இரண்டு இயக்கங்களின் உறுப்பினர்களும் ஹெலியை தாக்கவேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

"நாங்கள் அடிக்கப்போகிறோம். நீங்கள் விட்டுவிடுங்கள்" என்றார்கள் ஈரோஸ் இயக்கத்தினர்.

ஹெலியில் இருந்த இராணுவத்தினரிடம் எல்.எம்.ஜி. ஆயுதம் இருந்தது. அதனால் அவர்களை உடனே நெருங்க முடியவில்லை.

ஆர்.பி.ஜி. ரக ஆயுதத்தால்தான் தூர இருந்து தாக்கவேண்டும். தமது முகாமுக்கு செய்தியனுப்பிவிட்டு ஈரோஸ் இயக்க உறுப்பினர்கள் காத்திருந்தனர்.

அதற்கிடையே ஹெலி தரையிறங்கிய செய்தியறிந்து விமானப்படை விமானம் ஒன்று வந்து வட்டமிடத் தொடங்கியது.

கைதடிப்பாலமும், அதனையொட்டிய பகுதியும் திறந்தவெளியாக இருக்கும். விமானத்தில் இருந்து ஆள் நடமாட்டத்தைக் கவனித்து தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக இருக்கும்.

அதனால், கைதடி வெளிப்பகுதியில் இருந்து ஹெலியை நோக்கி தாக்குதல் நடத்துவது கஷ்டமாகிவிட்டது.

ஈரோஸ் இயக்க முகாமில் இருந்து ஆர்.பி.ஜி வந்து சேர்வதற்கிடையில் ஹெலியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாற்றைச் சரிசெய்துவிட்டார்கள். ஹெலி பறந்துவிட்டது.

"ஈரோஸ் விட்டிருந்தால் நாம் அடித்திருக்கலாம். கெடுத்துவிட்டார்களே." என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டனர்.

### ஹெலிமீது தாக்குதல்

7.6.86 அன்று வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் தரையிறங்கிவிட்டு, மேலேழுந்த ஹெலிக் கொப்டர்மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்

விமானி காயமடைந்தார் என்று புலிகள் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது. எனினும் அரசாங்க செய்தியில் சேத விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஹேலிமீது தாக்குதல் நடத்தப்பட்டதும் வல்வை முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் நடத்திய புலிகள் சென்றுவிட்டனர். இராணுவத்தினரின் ஷெல் 16 வயதுப் பெண் ஒருவரைத் தாக்கியது.

தலையில் அடிபட்டு, மூளை வெளியே வந்த நிலையில் அப் பெண் உயிரிழந்தார்.

வல்வெட்டித்துறை இராணுவமுகாமில் பிரிட்டிஷ் சென்று விசேட பயிற்சி பெற்ற இராணுவத்தினர் இருந்தனர். கறுப்பு உடைகளையே அவர்கள் அணிந்திருப்பர். அதனால் கறுப்புச் சட்டைப் படையினர் என்று அழைக்கப்பட்டனர்.

14.6.86 அன்று கறுப்புச்சட்டை படையினருக்கும், புலிகளது அணியினருக்கும் இடையே வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அருகே மோதல் நடந்தது.

நான்கு கறுப்புச் சட்டை படையினர் உயிரிழந்தனர். புலிகள் தரப்பில் இழப்பில்லை.

18.6.86 அன்றும் வல்வெட்டித்துறை இராணுவ முகாமருகே மோதல் நடைபெற்றது.

புலிகள் சிலிண்டர் தாக்குதல் நடத்தினார்கள். தாக்குதல் நடத்திய புலிகளின் தகவலின்படி ஐந்து இராணுவத்தினர் பலியானார்கள்.

### தமிழீழத்தின் குரல்

1986 இல் வடக்கு-கிழக்கு மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது ஒரு வானொலி நிலைய ஒலிபரப்பு.

'தமிழீழத்தின் குரல்' என்பது அதன் பெயர். தமிழ் ஈழ கம்யுனிஸ்ட் கட்சி என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டனர் அந்த வானொலி நிகழ்ச்சியை நடத்தியவர்கள்.

ஒருநாள் இயக்கங்களை ஆஹா,

## அற்புதன்-எழுதுவது

ஓஹோ என்று புகழ்வார்கள். மறுநாள் கேவலமாகத் திட்டுவார்கள்.

அரசுதான் நடத்துகிறதா? அல்லது இந்தியா நடத்துகிறதா? போன்ற சந்தேகங்கள் ஏற்பட்டன.

பாலசுப்பிரமணியம் என்பவரது தலைமையில் ஈழம் கம்யுனிஸ்ட் கட்சி என்று ஒரு அமைப்பு இருந்தது. ஒருவேளை, அவர்கள்தான் வானொலி நிலையம் நடத்துகிறார்களோ? என்றெல்லாம் பல்வேறு ஊகங்கள் நிலவின.

உண்மையில் இலங்கை அரசுதான் அந்த ஒலிபரப்பை செய்தது. அப்போது தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியின் சம்மதத்தோடு அந்த ஒலிபரப்பு நடத்தப்பட்டது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் தமிழ் சேவையில் இருந்த சிலரின் உதவியோடு நடத்தப்பட்டது.

இயக்கங்கள் தொடர்பான தவறான தகவல்களை பரப்புவது, இயக்கங்கள் மத்தியிலும், இயக்கங்களுக்கு உள்ளேயும் குழப்பத்தை உருவாக்குவது என்பதுதான் அந்த ஒலிபரப்பின் நோக்கமாக இருந்தது.

எனினும், அந்த முயற்சி வெற்றிபெறவில்லை..

ஈழம் கம்யுனிஸ்ட் கட்சிக்கும் அதற்கும் ஒரு தொடர்புமில்லை.

ஈழம் கம்யுனிஸ்ட் கட்சி என்னவாயிற்று?

அது ஒரு சுவாரசியமான கதை

(தொடர்ந்து வரும்)

## தந்தை-தளபதி-தந்தை



திராவிட-முன்னேற்றக் கழகத் தலைவர் அமரர் பெரியார் ஈ.வே.ராவை தந்தை பெரியார் என்றுதான் அழைப்பார்கள். அதுபோல தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தையும் தந்தை செல்வா என்றே அழைப்பதுண்டு. தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த தந்தை செல்வா, 'தளபதி' அமிர்தலிங்கம் ஆகியோர் தந்தை பெரியாரைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

## அலசுவது - இராஜதந்திரி

முறைகோடி மன்னவன் செய்யின் உறை
- கோடி
ஒல்லாது வானம் பெயல்

திருக்குறளில் கொடுங்கோன்மை என்ற அதிகாரத்தில் வரும் இக்குறட்பாவுக்கு தமிழ் வித்தகர் டாக்டர் மு. வரதராசனார் இவ்வாறு பொருள் கூறுகிறார்:- அரசன் முறைதவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவமழை தவறி மேகம் மழை பெய்யாமல் போகும்.

பாதிப்புக்கள் வறட்சி, மழையின்மை, பயிரழிவு, நோய்- நொடி, பஞ்சம் என்பவற்றைக் கொண்டுவருகின்றன.

மனிதவாழ்வு என்பது எப்போதும் இயற்கையோடிணைந்ததாகவே இருக்கவேண்டும். இயற்கைக்குமாறானதாக மனிதர்களின் நடவடிக்கைகள் திசைதிரும்பும்போதே அழிவுகள், அவலங்கள் ஏற்படுகின்றன.

'ஒப்பரேஷன் சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை வடக்கே ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, இலட்சக்கணக்கானவர்கள் வடக்கேயிருந்து இடம்பெயர்ந்தனர்.

வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பிரதேசங்கள் என்று புகலிடம் தேடிவந்த மக்களின் வயிற்றில் தற்போது மீண்டும்,

# முரண்பாடுகளும் - மூர்க்கத்தனங்களும்!

சிந்தனைக் கண்ணோட்டங்களைக் கொண்டவராகவே வடக்கு-கிழக்கு மக்கள் கருதியிருந்தனர்.

இருந்தபோதிலும் கடந்த காலத்தவர்கள் செய்த தவறுகள், அவர்கள் போட்டுச் சென்ற தடைகள், பூதாகரமாக்கிவிட்ட யுத்த நிலவரங்கள் என்பவற்றிலிருந்து

மஸ்கெலியாவிலுள்ள மௌசாக்கல நீர்த்தேக்கதில் எப்போது ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் முழுமையாகத் தென்படுகிறதோ அப்போது நாட்டில் கடும் வரட்சி என்பதே அர்த்தம்.

மௌசாக்கல நீர்த்தேகத்தை அமைக்கும் பொருட்டு நீரில் மூழ்கடிக்கப் பட்டவற்றில் ஒன்றே மஸ்கெலியாவில் உள்ள ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலாகும்.

அக்கோயிலை அண்டிய ஒரு சிறிய கிராமமே நீர்த்தேக்கத்தின் நிர்மாணத்திற்காக நீரில் அமிழ்த்தப்பட்டது. ஆனால் தற்போது நிலவும் கடும் வரட்சி, அந்நீர்த்தேக்கத்தின் நீர்மட்டத்தை வெகுவாகக் குறைத்து விட்டுள்ளதுடன்,

இதேபோன்றே மனுநீதியும் காணப்படுகின்றது. எப்போது மனுதர்மம், மனுநீதி என்பன புறந்தள்ளப்படுகின்றனவோ, அன்று அட்டூழியங்களும், அராஜகமும் தலைவிரித்தாட ஆரம்பிக்கின்றன.

ஒரு நாட்டில் அராஜகமும், அட்டூழியங்களும் மலிந்துவிட்டால் அந்த நாட்டின் அனைத்து வளங்களும் குட்டிச்சுவராகிவிடுகின்றன. மக்கள் மனதில் பீதி, சந்தேகம், பகைமை, கசப்புணர்வு, அவநம்பிக்கை என்பன தோன்றிவிடுகின்றன.

இலங்கையை எடுத்துக் கொண்டால் இன்று எந்தவொரு பகுதியிலும் மக்கள் மகிழ்ச்சியாகவோ அல்லது அச்சமின்றியோ வாழ்வதாகக் கூறுவதற்கில்லை.


புளியைக் கரைக்கும் நிகழ்வுகள் தோற்றம் பெற ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே வீடு- வாசல்களை இழந்து பரிதவித்துப் போயிருப்பவர்களாகவே வடபகுதி மக்கள் இருக்கின்றனர். இந்நிலையில் மீண்டுமொரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது அவர்கள் எவ்வகையிலும் அதற்கு முகங்கொடுக்கமுடியாது.

இந்நிலையில் பெரும் உயிரழிவே ஏற்படும் சூழ்நிலைகள் தோன்றும்.

ஏற்கனவே உணவின்மை, மருந்தின்மை, நீரின்மை என்பவற்றினால் பல்வேறு உபாதைகளுக்குமுள்ளாகி வடபகுதி மக்கள் இறுதி மூச்சை இறுகப்பிடித்தவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் அம்மக்களால் மீண்டுமொரு யுத்தக் கெடுபிடியைத் தாக்குப் பிடிக்கமுடியாது.



# யுத்த சூழலுக்குள் சிக்கியுள்ள ஜனாதிபதி

நீரில் மூழ்கடிக்கப்பட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயிலையும் வரண்ட நிலத்தின் மேலே தெளிவாகத் தென்படச் செய்துள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடானபோதிலும் இங்கு அனைத்து வளங்களும் நிறையவே உள்ளன. மலைவளம், கடல் வளம், நிலவளம், வனவளம் என்று அனைத்துமே நேர்த்தியாக உள்ளன.

ஜனாதிபதி முதற்கொண்டு சாதாரண குடிமகன் வரை பாதுகாப்புக்குறித்து இன்று பெரும் பதட்டமடைந்திருக்கும் சூழ்நிலை நிலவுகின்றது.

ஜனாதிபதிக்கு நிம்மதியாக அவரது வாசஸ்தலத்தில் படுத்துறங்கவோ அல்லது வீதியில் நடமாடவோ முடியாது. அதேபோலவே சாதாரண குடிமகனுக்கும் நிம்மதியாகப் படுத்துறங்கவோ அல்லது நடமாடவோ

> **"தமிழ் மக்கள் வலியுறுத்துகின்ற அவர்கள் எதிர்பார்க்கின்ற ஒரு நேர்த்தியான அரசியல் தீர்வை தென்னிலங்கையின் எந்தவொரு ஆட்சியாளர்களாலும் வழங்க முடியாதிருந்துள்ளதே உண்மை."**

ஆனால் இந்த நிலவளங்கள் சரிவரப்பங்கிடப்படாததாலும், அந்தந்த வளங்களுக்கேயுரிய மக்களின் மண்வாசனை, மொழி, கலாசார, விழுமியங்கள், சமூக- பொருளாதார, அரசியல் அபிலாஷைகள் என்பன புறந்தள்ளப்பட்டதாலும் ஏற்பட்ட மாறுபாடுகளே இன்று இலங்கையில் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இயற்கை வளங்களைப் பொறுத்தவரை, காடழிப்பு, மற்றும் சுற்றாடல் மாசடைதல், குடிசனப் பெருக்கம் என்பனவே பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

சூழல் சமநிலையில் ஏற்படும்

முடியாதுள்ளது.

வடக்கு-கிழக்கு மக்களைப் பொறுத்தவரை இத்தகைய பாதுகாப்பற்ற தன்மைகள் அவர்களது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்டதாகவே இருக்கின்றன.

பாதுகாப்பு என்று அவர்கள் தஞ்சமடையும் இடங்களைக் கூட கொடிய மரணபயம் தொடர்ந்து வந்துவிடுகின்றது.

வடக்கு-கிழக்கு குண்டுவீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் இடம்பெறும்போது கோயில்கள், தேவாலயங்கள் என்று தேடிச் சென்று தஞ்சமடைந்தால், அந்த இடங்களிலும் குண்டுகள் வீழ்ந்து வெடித்து அனர்த்தங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.



எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பதாக வடக்கே மக்களை மீண்டும் குடியமர்த்தப்போவதாக ஜெனரல் ரத்வத்த கூறியிருந்தார்.

ஆனால் இந்த குடியமர்த்தும் நடவடிக்கையை மேற்கொள்ள ஒரு பெரும் யுத்தமொன்றை நடத்தவேண்டியிருப்பதையே அவர் உணரவேண்டும்.

இந்நிலையில் வடக்கே மக்களை குடியமர்த்தும் நடவடிக்கை என்று கூறி இராணுவ நடவடிக்கை பாரியளவில் மெற்கொள்ளப்படுவது, வடக்கே உயிரழிவுகளை அதிகமாக்கவே செய்யும்.

வடக்கே இருப்பவர்கள் கொல்லப்படும் அதேசமயம், போரில் குதிக்கும் ஆயிரமாயிரம் சிங்கள இளைஞர்களும் உயிரிழப்பை எதிர்நோக்கவேண்டிவரும்.

இந்நிலையில் புதுவருடப் பிறப்பைக் குறிக்கும் 'ரபான் மத்தள' இசைக்குப் பதிலாக தென்னிலங்கையில் மரணச் சடங்குகளைக் குறிக்கும் பாண்ட் வாத்திய இசையே திக்குத்திக்காக ஒலிப்பதைக் கேட்க முடியும்.

புதுவருடம் என்பது ஒரு புதிய ஆரம்பத்தைக் குறிக்கின்றதென்பதே தமிழ்-சிங்கள மக்களின் வழி வழி வந்த நம்பிக்கையாகும். இந்த் நம்பிக்கையை மையமாகவைத்து அழிவுகள், அவலங்கள், இழப்புக்கள் அற்ற ஒரு புதிய ஆரம்பத்துக்கு ஆட்சியாளர்கள் ஏன் செல்லக்கூடாது? என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அண்மையில் இந்தியாவின் இந்துப்பத்திரிகைக்குப் பேட்டியொன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியில், தமிழ் மக்கள் ஒரு தீர்வுக்குத் தயாராக இல்லை, என்ற வகையில் அவர் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இக்கருத்து வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் உணர்வுகளை நன்கு நாடிபிடித்தறியாததாகவே இருக்கின்றது.

எத்தகைய தீர்வுக்கு தமிழ் மக்கள் உடன்படவில்லை என்பதனை ஜனாதிபதி தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம், போன்ற தீர்வு முயற்சிகளையெல்லாம் குழப்பியது யார்? தமிழ் மக்களுக்கு தீர்வுகள் கிடைக்கக்கூடாது என்று யாத்திரைகளையும், ஊர்வலங்களையும் நடத்தியது யார்?

அஹிம்சைவழியில் சத்தியாக்கிரகமிருந்து தமது கோரிக்கைகளை முன்வைத்த தமிழ் அரசியல்வாதிகளை மூர்க்கத்தனமாகத் தாக்கியது யார்?

காலத்துக்குக் காலம் இனக்கலவரம் என்று தமிழர்களைச் சூறையாடி, வீதிகளில் போட்டு, அவர்களைச் சுட்டெரித்தது யார்? போன்ற கேள்விகளைத் தன்னைத் தானே ஜனாதிபதி கேட்பாரேயானால், தமிழ்மக்கள் தீர்வு முயற்சிகளுக்கு தடையாகவா அல்லது உடந்தையாகவா இருந்துள்ளார்கள் என்பதனை அவரால் நன்கு அறிந்துகொள்ள முடியும்.

தமிழ் மக்கள் வலியுறுத்துகின்ற- அவர்கள் எதிர்பார்க்கின்ற ஒரு நேர்த்தியான அரசியல் தீர்வை தென்னிலங்கையின் எந்தவொரு ஆட்சியாளர்களாலும் வழங்க முடியாதிருந்துள்ளதே உண்மை.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவை ஒரு புதிய சந்ததியின் தலைவராக, புதிய

மீள முடியாதவராகவே ஜனாதிபதி இருக்கின்றார்.

எனவே தமிழர்களுக்குரிய அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியும் ஒரு புதிய அணுகுமுறையைக் கொண்டுவரவேண்டியவராகின்றார்.

இத்தகைய அணுகுமுறை மூலமே அவர் இலங்கையின் பழமைவாத, பிற்போக்கான, குறுக்கலான அரசியல் வாதிகளிலிருந்தும் வேறுபட்டவராக- மேம்பட்டவராக விளங்க முடியும்.

யுத்த நிர்ப்பந்தங்கள், இராணுவ அழுத்தங்களால் ஒரு தீர்வை எப்போதும் கொண்டுவர முடியாதென்பதே உண்மை. இதனை அனைவருமே நன்கறிந்திருக்கின்றனர்.

இருந்தபோதிலும் மீண்டும் மீண்டும் யுத்தமென்று குதிப்பதால் அரசியல் அணுகுமுறைகள் வெகுதூரத்துக்கே சென்று விடுகின்றனர்.

கொழும்பிலுள்ள ஐந்து தமிழ் அரசியல் கட்சிகள், இராஜதந்திர வட்டாரங்களை அணுகி இனப்பிரச்சனைத் தீர்வுக்காக ஆதரவு தேடிவருகின்றன.

இதன்மூலம் உள்நாட்டில் அரசியல் அணுகுமுறைகள் உரிய உத்வேகமடையவில்லை என்பதே புலனாகின்றது.

தமிழ் மக்களை நிதானமாக ஓர் அரசியல் தீர்வுகுறித்துச் சிந்திக்கச்செய்வதற்கு அவர்கள் மீதான இராணுவ அழுத்தங்கள் நீக்கப்படவேண்டும்.

பலாத்காரமாகவும், துப்பாக்கிமுனையிலும் எத்தரப்பினரையும் அடிபணிய வைக்க முடியாது.

ஆட்சியாளர்களால் இராணுவ அழுத்தங்களை மேற்கொண்டு ஒரு தீர்வை நோக்கி நகர முடியாது. மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈ யினராலும் தாக்குதல் நடிவடிக்கைகளை மேற்கொண்டநிலையில் சமரச முயற்சிகளை எதிர்நோக்க முடியாது.

முரண்பாடுகளை நீக்குவதற்கு மூர்க்கத்தனமான மோதல்களைவிட, நிதானமான அரசியல் முஸ்தீபுகளே இன்றியமையாததாகின்றன.

புத்தாண்டு கொண்டுவரும் புத்துணர்வில் அரசியல் முயற்சிகள், புதிய வடிவில் அமைய வேண்டியதே அவசியமாகின்றது.

எந்தவொரு அரசியல்தீர்வுக்கும் யுத்தமொரு சாபக்கேடு என்பதையே அதில் குதித்துள்ள அனைவரும் உணரவேண்டும்.

---

*வடபகுதியில் இருந்து வெளியாகும் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் இது. ஈழநாடு பத்திரிகை நிர்வாகத்தை புலிகள் பொறுப்பேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

விடுதலைப் புலிகளோடு மக்கள் இருக்கின்ற வரையிலும் நாம் யுத்தத்தில் வெற்றி காணவோ அன்றி அதற்குத்தீர்வு காணவோ இயலாது என்று பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அவர்கள் சமீபத்தில் கூறியுள்ளார். அவர் இதை எந்த நோக்குடன் கூறினார் என்பதுதான் முக்கியம். அரசு முனவைத்துள்ள தீர்வுத்திட்ட யோசனைகளைச் சிங்களவர்கள் ஏற்றுக்கொண்டால் தமிழ் மக்களை வென்றெடுத்து அவர்களிடமிருந்து விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி விடலாம், என்று சிங்களவருக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கொன்றில்தான் அவர் இவ்வாறு கூறியுள்ளார். இப்போது அவரின் நோக்கம் விளங்குகிறதுதானே!

பீரிஸ் அவர்கள் கூறுவதுபோல் கடந்த ஆகஸ்டில் முன்வைக்கப்பட்டு பின்னர் சிங்களப் பேரினவாதிகளினதும், மகாசங்கத்தினதும் எதிர்ப்பினால் எத்தனையோ மாற்றங்கண்டுள்ள தீர்வுத்திட்ட யோசனைகள் தமிழர்களை வென்றெடுக்கப் போதுமானவையா?

சிங்களவர்கள் மத்தியிலேயே விலைபோகாத தீர்வுத்திட்டப் பொதி இப்போது மகாசங்கத்தினரின் ஏகோபித்த எதிர்ப்புக் காரணமாக பாராளுமன்றில் வைத்தே நிராகரிக்கப்பட்டுவிடும். சிலவேளைகளில் அரசினாலேயே தானாகவே கைவிடப்படும் நிலைக்கும் தள்ளப்படலாம்.

கண்மூடித்தனமாக தீர்வுத்திட்ட யோசனைகளை வரவேற்ற, கொழும்பிலிருந்து இயங்கும் உதிரித்தமிழ் குழுக்களும், கூட்டணியினரும்கூட தவிர்க்க முடியாத காரணங்களால் ஆதரிக்க இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கூட்டணியின் ஆனந்த சங்கரிக்கு இப்போ ஞானம் பிறந்துள்ளது. தீர்வுத்திட்டத்திற்கு பிக்குகள் எதிர்ப்பது என்பது தமிழீழக் கொள்கையே முடிவானது என்று தமிழர்களை எண்ணவைக்கச் செய்யும் என்று கூறுகிறார் இது வேடிக்கைதான்.●

# மனித வெடிகுண்டு

# கார்லோஸ் 5

பாலஸ்தீன முன்னணித் தலைவர் வாடிஹாட்டாட் நோய்ப் படுக்கையில் வீழ்ந்து இறந்து போகிறார். கார்லோஸை கொலை செய்ய ஃபிரான்ஸ் உளவுத்துறை திட்டமிடுகிறது. சோவியத் ரசியாவின் உளவுப்பிரிவான கே.ஜி.பி. கார்லோஸை தனது திட்டங்களுக்கு பயன்படுத்த ஆரம்பிக்கிறது.

பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணித் (PFLP) தலைவர் டாக்டர் ஜோஸ் கபாஸ் தம்மோடு சேருமாறு கார்லோஸை அழைக்கிறார். கபாஸ் விதித்த நிபந்தனைகள் கார்லோஸிக்கு பிடிக்க வில்லை.

தனி வழி செல்கிறான்.

## பாரிஸ் நகரில் பட்டப்பகலில்

**தருவது ரசிகன்**

யூகோஸ்லாவியாவின் ஒரு பகுதி குரோசியா.

பிரிந்துபோய் தனிநாடாக வேண்டும் என்று போராட ஆரம்பித்தது குரோசியா.

யூகோஸ்லாவியா பிரிந்து துண்டு துண்டாவதை சோவியத் ரசியா விரும்பவில்லை.

"ஏன் விரும்பவில்லை?" என்று கேட்டான் கார்லோஸ். கேட்டது கே.ஜி.பி. அழகி ரோசியாவிடம்.

ரோசியா மூலமாகத்தான் கே.ஜி.பி. கார்லோஸுக்கு தகவல் அனுப்பியிருந்தது.

"குரோசிய எழுத்தாளர் புரூணோ பூசிக் நெருப்பு. அந்த நெருப்பில் இருந்து பறக்கும் பொறிகள் யூகோஸ்லாவியாவை எரித்துவிடலாம்.

ஆகவே, அதனால், அந்த நெருப்பை அணைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அணைக்கவேண்டியது கார்லோஸ்.

காரியம் முடிந்ததும் கார்லோஸின் கையில் கணிசமான தொகை கிடைக்கும்.

யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோவும் புரூணோ பூசிக் விவகாரத்தில் கார்லோஸின் உதவியை விரும்புகிறார்"

அதுதான் தகவல், தகவலைக் கேட்டதும். கே.ஜி.பியின் நோக்கத்தை அறிய கேள்விகள் வீசினான் கார்லோஸ்.

"யூகோஸ்லாவியா சோசலிசநாடு. சோவியத் ரசியாவின் நட்பு நாடு. அதனால் அந்த நாட்டை கேக் வெட்டுவது போல துண்டுபோடுவதை ரசியா விரும்பவில்லை" என்றாள் ரோசியா.

"ஓ.கே.. நான் மறுத்தால், புரூணோ பூசிக் வாழட்டும் என்று விரும்பினால்..?" என்று கேட்டான் கார்லோஸ்.

ரோசியா தனது உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டு புன்னகைத்தாள்.





கார்லோஸின் தோளில் தன் இருகைகளையும் அமரவைத்து, அவன் கண்களுக்குள் பார்த்தாள். குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள். கார்லோஸின் சட்டைப் பொத்தான்களை விடுவித்து, அவன் நெஞ்சை விரல்களால் வருடினாள். வருடிக்கொண்டே சொன்னாள்; "நீ மறுக்கமாட்டாய். நீ துணிச்சலானவன். நீ துடிப்பானவன். நீ இளமையானவன்."

கார்லோஸ் தன் இடதுகரத்தை நீட்டி அவளின் கழுத்துக்கு கீழே தொட்டுக் கொண்டு, "சம்மதம் சொன்னால் என்ன தருவாய்?" என்றான்.

"என்னைத் தருவேன்!" என்றாள். "தா" என்றான். "இப்போதா?" என்றாள் அவன் மேலே சாய்ந்து கொண்டாள். "இப்போதே. இந்த நிமிடமே; சாப்பிடப் போகிறேன் உன்னை!" என்றான்.

"பசி உனக்குமட்டுமா? நானும் சாப்பிடவேண்டும்" என்று கண்ணடித்தாள். அவனைக் கலங்கடித்தாள்.

பாரிசில் போலிக் கடவுச்சீட்டோடு மிகச் சுலபமாய் நுழைந்துவிட்டான் கார்லோஸ்.

தனியாகவே வந்தான். யாரும் சந்தேகப்படவேயில்லை. நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கிக் கொண்டான்.

தொலைபேசியில் இலக்கம் சுழற்றி;


"ஹலோ, புரூணோ பூசிக் இருந்தால் அவருடன் பேசமுடியுமா?"

"நீங்கள் யார்?"

"சுதந்திரம்!" என்றதும், மறுமுனை சிரித்தது.

"இத்தனை விரைவாக கிடைத்துவிட சுதந்திரம் என்ன ஒரு கோப்பை மதுவா நண்பனே? நான்தான் புரூணோ பூசிக். நீங்கள் யார் என்று அறிய ஆவல்!"

"உங்கள் நண்பன்! நேரில் பேசலாம்!



கார்லோஸ்

நேரம் இருக்குமா?" நேரம் சொன்னார் புரூணோபூசிக்.

பாரிசிலுள்ள கே.ஜி.பி. ஒற்றன் ஒருவன் மூலமாக 'பிஸ்டல்' ஒன்று வந்து சேர்ந்தது.

புத்தம் புது பிஸ்டல். "இன்று உனக்கு சாப்பாடு இருக்கிறது" என்று பிஸ்டலோடு பேசினான் கார்லோஸ். இடுப்பில் செருகிக் கொண்டான். புறப்பட்டான்.

புரூணோ பூசிக் ஒரு கவிதை எழுதினார்.

**"என் தாய்நாடே! குரோசியா!**
**என் இதயத்துடிப்பு கேட்கிறதா?**
**விடுதலை! விடுதலை! விடுதலை!"**

அழைப்புமணி அழுத்தப்பட்டது. எழுதியதை நிறுத்திவிட்டு எழுந்தார். சென்று கதவு திறந்தார். "நீங்கள் மிஸ்டர்..." என்று கேட்க, "நான் கார்லோஸ்!" என்றதும் புரூணோ சட்டென்று அதிர்ந்தார். அதே நொடியில் உள்ளே புகுந்து கதவை அறைந்து சாத்தினான் கார்லோஸ். கையில் பிஸ்டல்.

"நீ.. நீங்கள்?"

"நான், நானேதான்!.."

புரூணோவுக்கு தன் மரணம் கார்லோஸ் கையில் இருக்கிறது என்று தெரிந்துவிட்டது. கார்லோஸ் எப்படிப்பட்டவன் என்று புரூணோவுக்கு தெரிந்திருந்தது.

இறுதி முயற்சியாக அவனோடு பேசிப் பார்க்கலாம் என்று நினைத்தார்.

"கார்லோஸ், நீ என் எதிரியல்ல, நானும் உனக்கு பகைவனல்ல! விடுதலைக்காக குரல் கொடுக்கும் என் குரல்வளையை முறிப்பதில் உனக்கு லாபமில்லை! நீ எப்படிப்பட்டவன் என்று எனக்குத் தெரியாது. உன்னை ஆட்டுவிப்பவர்கள் கொடியவர்கள். விடுதலைக்காக போராடும் மக்களின் விரோதிகள்!"

"நன்றாகப் பேசுகிறீர் புரூணோ! அது சரி, உம்மைக் கொல்வதால் எனக்கு லாபமில்லை என்று எப்படித் தெரியும்! இருக்கிறது! நிறைய லாபம்! நீர் எழுத்தாளராக இருந்தால் பரவாயில்லை, எழுச்சியாளராகவும் இருக்கிறீர். அதனால்தான் உமது இடத்தை காலி பண்ணச் சொல்லி கட்டளை வந்திருக்கிறது! உமக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்!"

கார்லோஸ் சுட்டான்! புரூணோவின் வயிற்றோடு பிஸ்டலை அழுத்திப்பிடித்துச் சுட்டான். அதனால் வெளியே பெரிதாகச் சத்தம் கேட்கவில்லை.

புரூணோ செத்துப்போனார்.

**"பட்டப்பகலில் படுகொலை!**
**கார்லோஸின் கைவரிசை!**
**குரோசிய எழுத்தாளர் சாவு!"**

ஃபிரான்ஸ் தினசரிகள் செய்தி போட்ட போது, கார்லோஸ் யூகோஸ்லாவியா நோக்கி பறந்துகொண்டிருந்தான்.

யூகோஸ்லாவியாவில் கார்லோஸுக்கு பிரமாதமான கவனிப்பு.

தனியான பங்களாக்கள் இரண்டு ஒதுக்கித் தரப்பட்டன.

அடிக்கடி இடம்மாறிக்கொண்டே இருந்தான் கார்லோஸ்.

யூகோஸ்லாவிய உளவுப்பிரிவுக்கு கார்லோஸின் பலவீனம் தெரியும்.

தினம் ஒரு அழகியை கார்லோஸுக்காக அனுப்பி கொண்டிருந்தனர்.

யூகோஸ்லாவியாவில் இருந்து லெபனான் தலைநகரான பெய்ரூட்டுக்கு செல்ல திட்டமிட்டான் கார்லோஸ்.

பயண ஏற்பாடுகள் பூர்த்தியான நிலையில், கார்லோஸுக்கு அந்தச் செய்தி கிடைத்தது.

**1979 ஜனவரி 22.**
**பெய்ரூட் நகரில் கொலை.**
**கொல்லப்பட்டவன் அலி ஹசன்.**

1972 இல் மூனிச் நகரில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது.

ஒலிம்பிக்கில் கலந்துகொண்ட இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் கொலை செய்யப்பட்டனர். அந்த திட்டத்தின் சூத்திரதாரி அலிஹசன். அவனை 7 வருடங்களாக கண்காணித்து, மோப்பம் பிடித்து தீர்த்துக் கட்டிவிட்டது இஸ்ரேலிய மொசாட்!

செய்தியறிந்த கார்லோஸ் பெய்ரூட் செல்லும் திட்டத்தைக் கைவிட்டான்.

யூகோஸ்லாவியாவில் இருந்து ஜெர்மன் சென்றான் கார்லோஸ்.

புரூணோ பூசிக்கை கொலை செய்த கார்லோஸுக்கு யூகோஸ்லாவிய அரசு இலட்சக்கணக்கான டொலர்களை கொடுத்திருந்தது.

தேவைக்கு மிஞ்சிய பணம். பணம் கரையும் வரை ஐரோப்பிய நாடுகளை சுற்றிவரத் திட்டமிட்டான் கார்லோஸ்.

ரோசியாவும் அவனோடு ஒட்டிக் கொள்ள விரும்பினாள். கார்லோஸ் அதனை விரும்பவில்லை. தனியாகவே புறப்பட்டான்.

ஜெர்மனில் கார்லோஸுக்கு உதவியாளராக இருந்தவன் வெயின்றிச்.

ஜெர்மன்காரனான வெயின்றிச் கார்லோஸுக்கு ஜெர்மனில் மொழி பெயர்ப்பாளராகவும் இருந்தான்.

வெயின்றிச்சுக்கு மகதலோனா என்று ஒரு காதலி இருந்தாள்.

அழகான ஜெர்மன்காரி. அதீதமான உடல் வளைவுகள். ஏற்ற இறக்கங்கள். முதல் பார்வையிலேய கார்லோஸுக்கு அவளை பிடித்துப் போய்விட்டது.

வெயின்றிச்சை தேடிவரும் மகதலோனா கார்லோசுடனும் நெருக்கமானாள்.

அன்றும் வெயின்றிச்சை தேடிவந்தாள் மகதலோனா. வெயின்றிச் வெளியே போயிருந்தான். வீட்டில் கார்லோஸ் மட்டுமே இருந்தான்.

"வெயின்றிச் இல்லையா? என்றாள்.

"வந்துவிடுவான். இரு. என்ன குடிக்கிறாய்?"

"சூடாக ஏதாவது!"

"சூடாக என்றால் நான்தான் தரவேண்டும்!"என்றான்.

கார்லோஸ் எதிர்பார்க்காத வேகத்தில் அவள் சொன்னாள்; "தரலாமே!"

கார்லோஸ் நெருங்கினான். தன்னோடு நெருக்கினான்.

"நீண்டநாளாக எதிர்பார்த்தது!" என்றாள் கார்லோஸின் காதுக்குள்

வெளியே- வெயின்றிச் வந்துகொண்டிருந்தான்.

கதவை மூட மறந்திருந்தார்கள்.

வெயின்றிச் அக் காட்சியை கண்டுவிட்டான்.

மகதலோனாவின் கழுத்தில் இருந்து முகம் விலக்கிய கார்லோஸின் கண்கள் வெயின்றிச்சைக் கவனித்துவிட்டன.

(தொடர்ந்து வரும்.)

## மறுபடி முளைத்த காதல்

## நீனாவைத் தேடிவந்த விவியன்

மேற்கிந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் விவியன் ரிச்சாட்சன் ஒரு விளையாட்டுப்பிள்ளை. இந்திய நடிகைகள் பலருக்கு அந்த விளையாட்டுபிள்ளைமீது ஒரு கண்.

கிரிக்கெட் வீரர்கள்மீது இந்திய நடிகைகளில் இந்திப் படவுலக நடிகைகளுக்குத்தான் ஈடுபாடு அதிகம்.

இந்திய கிரிக்கெட் வீரர்களைவிட மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்கள்மீதும், பாகிஸ்தான் அணி முன்னாள் கப்டன் இம்ரான்கான்மீதும் இந்தி நடிகைகள் பலர் பைத்தியமாகவே இருந்தார்கள்.



விவியன் ரிச்சாட்ஸின் பரம ரசிகையாக இருந்தவர் இந்தி நடிகை நீனா குப்தா. விவியன் ரிச்சாட்ஸுக்கும் நீனாவை பிடித்துக் கொண்டதால் இருவரும் ராசியானார்கள்.

இருவரது காதல்லீலைகளும் பம்பாய் பத்திரிகைகளில் பிரபலமாக அலசப்பட்டன. இறுதியாக நீனா குப்தாவுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. 'விவியன் ரிச்சாட்ஸ்தான் என் குழந்தையின் தந்தை' என்று அறிவித்தார் நீனா குப்தா.

விவியனை நீனா குப்தா மடக்கிவிட்டதில் இந்தி நடிகைகள் பலருக்கு பொறாமை.

"நீனா பொய் சொல்கிறார்" என்று கதை பரப்பினார்கள். இதெல்லாம் பழைய செய்திகள்.

நீனாகுப்தா-விவியன் ரிச்சாட்ஸ் காதல் விவகாரத்தை சகலரும் மறந்து, பழைய கதையாகிப்போன நிலையில், சமீபத்தில் ஒரு திருப்பம்.

மேற்கிந்தியாவில் இருந்து பம்பாய்க்கு பறந்துவந்த விவியன் ரிச்சாட்ஸ் நீனாவை சந்தித்து மகிழ்ந்திருக்கிறார். தன் பிள்ளையையும் கொஞ்சிக் குலாவியிருக்கிறார்.

பம்பாயில் நடந்த பொது நிகழ்ச்சிகளில் இருவரும் இணைந்தே காட்சியளித்துள்ளனர்.

அசாருதீன், சங்கீதா விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், மறுபடியும் விவியன், நீனா விவகாரம் பத்திரிகைகளுக்கு கிடைத்திருக்கிறது. டபிள் சூடுதான்!

இதேவேளை ஒரு வினோதமான ஆராய்ச்சியில் இறங்கியுள்ளது ஸ்டார் வேல்ட் என்னும் பத்திரிகை.

நீனா குப்தா முதல் சங்கீதா வரை பல இந்தி நடிகைகள் விளையாட்டு வீரர்களை நாடிச் சென்ற காரணம் என்ன? சினிமா உலகில் கவர்ச்சிகரமான ஆண்கள் பலர் இருந்தும்கூட விளையாட்டு வீரர்கள்மீது தனி ஈடுபாடு ஏற்படக் காரணம் என்ன? போன்ற கேள்விகளை எழுப்பி விடை தேடுகிறது 'ஸ்டார் வேல்ட்' பத்திரிகை. ரொம்ப அவசியமான ஆராய்ச்சிதான்!

## அபாய எச்சரிக்கை

## லப்... டப்... திக்... திக்...

நீங்கள் சாதாரண மனிதரா? சாம்ராச்சிய அதிபரா? பாகுபாடில்லாமல் தாக்கும் சக்தி அதற்கு இருக்கிறது.

அதுதான் மாரடைப்பு!

சமீபத்தில் பிரபல அரசியல் வாதியான என்.டி.ஆரை வீழ்த்தியதும் மாரடைப்புத்தான்.

சமீபத்தில் மருத்துவ உலக புள்ளி விபரத்தின் அதிர்ச்சிதரும் கணிப்பு என்ன தெரியுமா?

நிமிடத்துக்கு இரண்டு பேரை மாரடைப்பு தாக்குகிறது! இது உலகளாவிய ரீதியில் பெறப்பட்ட கணிப்பின் முடிவு.

சாதாரணமாக மாரடைப்பு தாக்குவது யாரை?

இதயத்தில் ஒப்பரேசன் செய்து கொண்டவர்களையும், பலகீனமான இதயம் உள்ளவர்களையும் மாரடைப்பு சுலபமாக தாக்குகிறது.

ஆனாலும், தடாலடியாக ஏனையோரையும் மாரடைப்பு தாக்குகிறது.

மாரடைப்பு ஏற்படும் காரணங்களை முழுமையாக கண்டறிந்து கூறுவது கடினம்.

ஓரளவு கணித்துக் கூறியிருக்கிறார்கள் மருத்துவர்கள்.

அதனை நாமும் அறிந்துகொண்டால் மாரடைப்புக்கு எதிராக தற்காப்பு யுத்தம் நடத்த முடியும்.

### திங்கள் கிழமைகளில்

அமெரிக்காவில் உள்ள மானிடோபா பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரப்படி எழுபத்தைந்து சதவீத மாரடைப்பு மரணங்கள் திங்கள் கிழமைகளில்தான் நடந்துள்ளன.

"847 மாரடைப்பு மரணங்களைக் கணக் கெடுத்துப் பார்த்தேன். திங்கள் கிழமை காலை ஆறு மணியில் இருந்து, பதினொரு மணிக்குள்தான் அதிகம்." என்கிறார் ஹார் வோர்ட் பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சியாளர் முல்லர்.

அதற்கு காரணம் என்ன?

ஆறுநாட்கள் இடைவிடாத வேலை. ஒரே டென்ஷன். பின்னர் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு. உடலும், மனதும் ஓய்வில் குஷிப்படுகிறது. இருபத்திநான்கு மணிநேர இடைவெளிக்குப் பின்னர் மறுபடியும் திங்கள் கிழமை திடீரென்று டென்ஷன். அதனால் உடல் தடுமாறுகிறது. மனமும் தடுமாறுகிறது. விளைவு திடீர் மாரடைப்பு!

எனவே- ஞாயிற்றுக்கிழமைகளிலும் கொஞ்சமாவது பரபரப்பும், துடிதுடிப்பும் இருப்பதுபோல எதையாவது செய்வது நல்லது. திங்கள் கிழமைகளில் மெதுவாக வேலைகளை ஆரம்பிப்பது நல்லது.

### இரவுச் சாப்பாடு.

நான்கில் ஒரு திடீர் மாரடைப்பு 'வெயிட்டான' இரவுச் சாப்பாட்டுக்கு பின்னர் ஒரு மணிநேரம் கழித்து ஏற்படுகிறது. என்கிறார்கள் பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் கள். சுருங்கச் சொன்னால் கொழுப்புத் தான் காரணம்.

மூக்குமுட்டச் சாப்பிட்டுவிட்டு ஆழ்ந்து தூங்கும் போதுதான் வேகமான செரிமானம் நடக்கிறது. பொதுவாகவே இதயம் உயிருடன் இருக்க வேண்டுமானால் இரத்தக் குழாய் வழியாக இதயத்திற்குள் இரத்தம் போய் வந்து கொண்டிருப்பது கட்டாயம்.

சாப்பிட்ட உணவுக் கொழுப்பால்



இரத்தக் குழாய்கள் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் சமயத்தில், இரத்தத்தில் கலந்திருக்கும் கொழுப்பும் கூடுதல் சுமையாகச் சேர்கிறது.

புதுசும், பழசுமாய் சேர்ந்து குழாய்களின் அகலத்தை அடைத்து.. இதயத்திற்கு இரத்தம் போவதை தடுத்துவிடுகின்றன.

எனவே, இரவு நேரத்தில் மூக்குமுட்ட ஒரு பிடி பிடிப்பவர்கள் நாக்கை கட்டுப்படுத்துவார்களாக! நாவடக்கம் ஆயுளுக்கு நல்லது!

### உணர்ச்சி வசப்பட்டால்..


அதிகப்படியான துக்கம், அதிகப்படியான சந்தோசம். இரண்டில் எதைச் சந்திக்கும்போதும் எக்கச்சக்கமாக உணர்ச்சி வசப்படவேண்டாம். பட்டால்.. இதயம் இரண்டு படக்கூடும்.

எதிர்பாராமல் ஏற்படும் அதிர்ச்சி இதயத்தின் இரத்த ஓட்டத்தையும், இரத்த உந்து சக்தியையும் நிலைகுலையைச் செய்துவிடலாம்.

ஆக, ஆத்திரமாகட்டும், அழுகையாகட்டும், துக்கமாகட்டும் ஐந்து நிமிஷங்கள் தள்ளிப் போடுங்கள். பரபரப்பு தானாகவே தள்ளிப் போய்விடும். இதயத்துக்கு பலம் சேர்க்கும் ஒரே ஒரு பொலிசி என்ன தெரியுமா? 'டேக் இட் ஈஸி' பொலிசிதான்.

த
க
வ
ல்
பெ
ட்
டி

# நீ! சிங்கங்களின் ராணியா நீ?



சிறுமி சன்ரெல்லிக்கு ஆறுவயது. இங்கிலாந்திலுள்ள மிருகக்காட்சிசாலைக்கு பெற்றோருடன் சென்றாள். சன்ரெல்லியைக் கவர்ந்தன இரண்டு சிங்கக்குட்டிகள். பிறந்து 6 வாரமேயான இரண்டு சிங்கக்குட்டிகளும் சிறுமியுடன் உடனே ஒட்டிக்கொண்டன. பயமேயில்லாமல் சிங்கக்குட்டிகள் நடுவே இருந்து எப்படிப் போஸ் கொடுக்கிறாள் பாருங்கள். இளம் கன்று பயமறியாது.

## தெருமேலே ரயில் வண்டி



ரயில்வண்டி. தண்டவாளத்தில் ஒடும் என்பது சரி; ரயில்வண்டி தண்டவாளத்தில் மட்டும் ஒடும் என்பது பிழை!

என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? படத்தில் இருக்கிறது பாருங்கள் ஜிலு ஜிலு ரயில்வண்டி. இது தெருவில்தான் ஓடுகிறது.

உலகிலேயே தெருவில் ஒடக்கூடிய மிக நீளமான ரயில்வண்டி இதுதான்.

அவுஸ்திரேலியாவில் உள்ள மைக் ஆர்தர் ஆற்றுச் சுரங்கத்திலிருந்து பிஸ்பான் நகர்வரை 120 கிலோ மீட்டர்கள் தூரம்வரை இந்த ரயில் வண்டி ஓடுகிறது.

இந்த ரயில் வண்டியில் மற்றொரு ஆச்சரியம் யாதென்றால், ரிமோட் கொன்ரோல் முறைப்படிதான் இது இயக்கப்படுகிறது.

## பிழைத்தது புண்ணியம்

இந்தப் படத்தைப் பார்த்ததும் ஏதாவது வித்தியாசமாகத் தெரிகிறதா?

தெரியவில்லையே! என்று பதில் சொன்னால் உங்கள் பார்வையில் கோளாறு என்றோ, எதையும் கூர்ந்து பார்க்காமல் மேலோட்டமாக முடிவுக்கு வரும் அவசரக்காரர் என்றோ உங்களை சொல்லலாம்.

பால்குடிக்கும் கன்றுக்கு மூன்று கால்கள் மட்டும்தான்! இவ்வாறு பிறக்கும் அதிசய பசுக்கன்றுகள் உயிர்பிழைப்பது அரிது.

படத்தில் உள்ள கன்று உயிர் பிழைத்ததுடன், திடகாத்திரமாகவும் இருக்கிறது. தமிழ்நாட்டில் குமரிமாவட்டத்தில் இந்தப் பசுக்கன்று தோன்றியது.



## பாம்போ இது பாம்போ?

பாம்பின் தலையை 'சதக்' கென்று வெட்டி உள்ளங்கையில் வைத்திருக்கிறார் என்று சொன்னால் நம்பிவிடுவீர்கள். ஆனால் விஷயம் அதுவல்ல. உள்ளங்கையில் இருப்பது பப்பாளிக்காய். தமிழ் நாட்டில் கன்னியாகுமரி அருகே இருக்கிறது. பஞ்சலிங்கபுரம் என்னும் ஊர். அங்குள்ள தோட்டம் ஒன்றில்தான் பாம்பு உருவில் பப்பாளிக்காய் தோன்றியிருக்கிறது. அதிசய பப்பாளி என்பதால் புகைப்படத்தில் இடம்பிடித்து பிரபலமாகிக்கொண்டிருக்கிறது.



## ஒரு விரலால் உலக சாதனை

உடலுக்கு பலம் தரும் உடற்பயிற்சிகளில் ஒன்று புஷ்-அப்ஸ். இதயத்திற்கும் மிக நல்லது. உடலின் சகல பாகங்களையும் கெட்டிப்படுத்த வல்லது.

புஷ்-அப்ஸ் பல விதமாக செய்யலாம். இரண்டு உள்ளங்கைகளை தரையில் ஊன்றி செய்தல். கை முஷ்டிகளை நிலத்தில் ஊன்றிச் செய்தல். பத்துவிரல்களை நிலத்தில் ஊன்றிச் செய்தல், ஒரு கையை மட்டும் ஊன்றிச் செய்தல், ஒரு கையின் ஐந்து விரல்களை ஊன்றிச் செய்தல் என்று பல முறைகள் உண்டு.

புஷ்-அப்ஸ் செய்தலில் உலக சாதனைகளும் இருக்கின்றன.


இரண்டு உள்ளங்கைகளையும் தரையில் ஊன்றிச் செய்யும் புஷ்-அப்ஸ் செய்வதில் உலக சாதனை படைத்திருப்பவர் அமெரிக்கரான சாள்ஸ் செவிலியே. எத்தனை தடவைகள் புஷ்-அப்ஸ் செய்தார் தெரியுமா? 46 ஆயிரத்தி ஒரு தடவைகள்! 24 மணி நேரத்தில் இடைவிடாமல் செய்த சாதனை அது. உண்மையாகவே அசுர சாதனைதான். 1993 ஏப்ரல் மாதம் 24 -25 ம் திகதிகளில் அந்த உலக சாதனை செய்யப்பட்டது.

ஒரு கையால் மட்டும் தரையில் ஊன்றிக்கொண்டு புஷ்-அப்ஸ் செய்து உலக சாதனை படைத்திருப்பவரும் ஒரு அமெரிக்கர்தான். அவரது பெயர் அலன் ரம்பல். ஐந்து மணி நேரத்தில் 8 ஆயிரத்தி 151 தடவைகள் அவர் புஷ்-அப்ஸ் செய்து அசத்தோ அசத்தென்று அசத்திவிட்டார். 1993 ஜூன் 23ம் திகதி அந்த சாதனை செய்யப்பட்டது.

அவரைத் தூக்கிச் சாப்பிடும் வகையில் தென்கொரிய நாட்டைச் சேர்ந்த சிம்சென்சி என்பவர் புஷ்-அப் சாதனை படைத்தார். அவர் எப்படிச் செய்தார் தெரியுமா? ஒரு கையில் உள்ள விரல்களை மட்டுமே நிலத்தில் ஊன்றியபடி 7 ஆயிரத்தி 11 தடவைகள் புஷ்-அப்ஸ் செய்தார். ஐந்துமணி நேரத்தில் செய்யப்பட்ட சாதனை. 1990 ஆகஸ்ட் 30ம் திகதி அச் சாதனையை நிகழ்த்தினார்.

இதையெல்லாம் அறிந்துவிட்டு, விட்டேனா பார் என்று கிளம்பினார் லண்டனைச் சேர்ந்த பவுல்லின்கிஸ். படத்தில் புஷ்-அப்ஸ் செய்கிறாரே அவரேதான்.

ஒரு கையில் உள்ள ஒரு விரலை மட்டும் நிலத்தில் ஊன்றி புஷ்-அப்ஸ் செய்து காட்டுகிறேன் என்றார். யாரும் நம்பவில்லை. உலக சாதனை நடுவர்கள் முன்பாக செய்துகாட்டினார். மொத்தம் 124 தடவைகள் புஷ்-அப்ஸ் செய்தார். 1992 ஏப்ரல் 21ம் திகதி இந்த உலக சாதனையை படைத்தார் பவுல்லின்கிஸ்! ஒரு விரலை ஊன்றி (படத்தில் உள்ளதுபோல) ஒரு பத்துத்தரமாவது உங்களால் செய்ய முடியுமா? முயன்றுபாருங்கள். அப்போதுதான் இந்தச் சாதனையின் பெறுமதி புரியும்.



* இயக்குநர் சிகரம் பாலசந்தரின் 'நேசு' படம் மூலம் வில்லனாக அறிமுகமான பிரகாஷ்ராஜ், அடுத்து பாலசந்தர் இயக்கும் 'கல்கி' படத்தில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* பிரபு- நக்மா இணைந்து நடிக்கும் 'பெரியதம்பி' படத்தை தயாரித்து இயக்கி வருகிறார் சித்ரா லட்சுமணன். இதே நேரத்தில் 'வீர விளையாட்டு' என்ற மொழிமாற்றுப் படத்தையும் தயாரித்து வருகிறார்.

* தெய்போலியன் நடித்த 'மாமனிதன்' படத்தை இயக்கிய மந்தானந்தா, அடுத்து 'மகாநிருடன்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் கார்த்திக்.

* வசந்த் இயக்கிய 'ஆசை' படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் சுவலட்சுமி. தற்போது 'வான்மதி' என்ற படத்தில் நடித்து வரும் இவர் மீண்டும் வசந்த் இயக்கத்தில் புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* 'பசும்பொன்' படத்தைத் தயாரித்த ஆனந்தி ஃபிலிம்ஸ் நிறுவனம், அடுத்து தயாரிக்கும் படத்தை பாலுமகேந்திரா இயக்கவுள்ளார். இந்தப்படத்தில் மம்முட்டி கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* 'பிரியம்' படத்தில் அருண்குமாருக்கு ஜோடியாக நடித்து வரும் மந்த்ரா, தமிழில் 'வீடு', 'மக்கள் ஆணையிட்டால்', 'தாய்மேல் ஆணை' ஆகிய படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர்.

# மி னி சி னி

* பிரேம் கதாநாயகனாக நடிக்கும் 'அந்ததாள்' படத்தை இயக்கி வரும் விஷ்ணுப்பிரியன், டி. ராஜேந்தர், மணிவண்ணன், விக்ரமன் ஆகியோரிடம் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

* சரத்குமாருடன் 'அரவிந்தன்' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்து வரும் பார்த்திபன், 'வளையல் சத்தம்' படத்தை இயக்கிய ஜெபாலன் இயக்கும் 'தஞ்சைத் தரணியிலே' என்ற புதிய படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார்.

* ஆர். கே. செல்வமணி தயாரித்த 'அசுரன்' தற்போது தயாரித்து வரும் 'ராஜாளி' ஆகிய படங்களின் இயக்குநரான வேலுபிரபாகர், அடுத்து 'சிவன்' என்ற படத்தை இயக்க விருக்கிறார்.

* 'பம்பாய்' படத்தில் அரவிந்தசாமி தங்கையாகவும் 'இளைய ராகம்' படத்தில் கதாநாயகியாகவும் நடித்துள்ள ஸ்ரீஷா, புரட்சிக் கலைஞர் விஜயகாந்திற்கு தூரத்து உறவினர்.

* சிவகுமார்-குஷ்பு ஜோடியாக நடித்த 'நாட்டுப்புறப்பாட்டு' படத்தில் வில்லனாக நடித்தவர் அன்வர் அலிகான். தற்போது இவர் அருண்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'பிரியம்' படத்திலும், ஜெயராம் கதாநாயகனாக நடிக்கும் 'புதுநிலவு' படத்திலும் வில்லனாக நடித்து வருகிறார்.

## வீரத்தாலாட்டு

தாயின் மானம், தகப்பனின் வீரம், தமிழ் மண்ணின் சாரம் மூன்றும் கலந்த கதைதான் வீரத்தாலாட்டு. முரளி, குஷ்பு, ராதிகா, மணிவண்ணன் ஆகியோர் நடிக்கின்றனர்.

'நாட்டுப்புறப்பாட்டை' இயக்கிய கஸ்தூரிராஜா இயக்கத்தில் வளரும் படம் வீரத்தாலாட்டு. ஒரு தாய்க்கு 96 மகன் என்ற கருவை வைத்து பின்னப்பட்டிருக்கிறதாம்.

## அனுஷாவுக்கு வாய்ப்பு

ஆர்.கே.செல்வமணியின் தயாரிப்பில் உருவாகிவரும் 'ராஜாளி'யில் ராஜாவுக்கு ஜோடியாகவும், 'இசைப்பயணம்' படத்தில் விஜயசாந்தியுடனும் நடித்து வருகிறார் அனுஷா. இவை தவிர அறு மலையாளப்படங்களிலும், 'தன்வீர்' என்ற இந்திப்படத்திலும் நடித்து வருகிறார் அனுஷா.






## பாரதிராஜாவின் பட வரிசை

விஜயகாந்த்-ரோஜா நடிக்கும் 'தமிழ்ச்செல்வன்', விஜயகுமார்-ஜெயசுதா நடிக்கும் 'அந்திமந்தாரை' ஆகிய படங்களை இயக்கிவரும் பாரதிராஜா, இந்த ஆண்டில் மேலும் நான்கு படங்களை இயக்கவுள்ளார். சரத்குமார் கதாநாயகனாக நடிக்கும் ஒரு படம், ராஜ்கிரண் நடிக்கும் ஒரு படம், நெப்போலியன் நடிக்கும் ஒரு படம், மற்றும் அவரது மகன் மனோஜ் நடிக்கும் ஒரு படம் என வரிசையாக வெளிவரும்.

## ராஜ்கிரண் முயற்சி தோல்வி

'என் ராசாவின் மனசிலே', 'எல்லாமே என் ராசா தான்', 'ராசாவே உன்னை நம்பி', 'என்னைப் பெத்த ராசா' போன்ற படங்களை தயாரித்தவர் ராஜ்கிரண். அவற்றில் சில படங்களில் அவர்தான் ஹீரோ. படங்களும் சூப்பர் ஹிட்.

இளையராஜாமீது பக்தி கொண்ட ராஜ்கிரண் அவரை மனதில்வைத்தே தனது படங்களுக்கு 'ராசா' என்ற பெயரையும் சேர்த்துக்கொண்டார்.

இப்போது வெளியார் படங்களிலும் ராஜ்கிரண் நடித்துவருகிறார். அதில் ஒரு படம் 'பொன்னு விளைகிற பூமி', படத்தயாரிப்பாளருக்கும் இளையராஜாவுக்கும் பிரச்சனை. சமரசம் செய்துவைக்க ராஜ்கிரண் செய்த முயற்சிகள் தோல்வி.

தற்போது தேவா இசையமைக்கிறார். குருநாதர் இசையமைக்க மறுத்த படமானாலும் ராஜ்கிரண் நடிப்பதுதான் ஆச்சரியம்.

## மறுபடியும் பாரதிராஜாவுடன்

பாரதிராஜாவின் இயக்கத்தில் விஜயகாந்த் ஜோடியாக ரோஜா நடித்த படம் தமிழ் செல்வன். ரோஜாவின் நடிப்பு பாரதிராஜாவுக்கு பிடித்துவிட்டது. தனது அடுத்த படத்திலும் வாய்ப்புத்தருவதாகக் கூறியுள்ளார்.

இனிமேல் நல்ல கதை உள்ள படங்களாக தேர்ந்து நடிக்கப்போகிறேன் என்று சொல்கிறார் ரோஜா. அப்படியானால் ராஜாளி படத்தில் எப்படி நடிக்கிறார்? அது காதலருக்காக செய்த விட்டுக் கொடுப்பு.



## சட்டத்தரணியாகிறார் ஊர்வசி

'கடல்புறா' படத்தில் கதாநாயகனாக நடித்தவர் பாபுகணேஷ். அவர் கதாநாயகனாக நடிக்கும் படம் 'நான் ஒரு இந்தியன்'. படப்பிடிப்புக்கள் முடிவடைந்து விட்டன. விரைவில் திரைக்கு வருகிறது.

ஊர்வசி சட்டத்தரணியாக நடித்திருக்கிறார். தேச விரோத சக்திகளை ஒழித்துக் கட்ட திட்டம் தீட்டும் ஊர்வசி, இரண்டு கைதிகளை சிறையிலிருந்து தப்பவைக்கிறார். அவர்கள் மூலம் தேசவிரோதிகளை ஒழித்துக்கட்டுகிறார்.

சிறையில் இருந்து தப்பும் கைதிகளாக பாபுகணேசும் வடிவேலுவும் நடித்துள்ளனர்.

ஜெயில்கைதி, கிராமத்துப் பெண், அலி உட்பட ஒன்பது விதமான பாத்திரங்களில் நடிக்கிறார் வடிவேலு.

## கண்டேன் சீதையை நிறுத்தமா?

கமலஹாசன் நடிக்க தமிழில் தயாராகிய 'கண்டேன் சீதையை' என்னும் படம் வளர்ந்து வந்தது. ஒரு மாதம் நடைபெற்ற படப்பிடிப்பின் பின்னர் தயாரிப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு படம் கைவிடப்படலாம் என்பது சினிமா வட்டாரத் தகவல். சரியாக உறுதிப் படுத்த முடியவில்லை.

முன்னர் பாக்யராஜ் நடிப்பதாக விளம்பரம் செய்யப்பட்டது 'கண்டேன் சீதையை' பின்னர் அது கைவிடப்பட்டு, கமல் நடித்தார். இப்போது அதுவும் சிக்கலில் நிற்கிறது.

## 'மது'வின் பல்லவி

பிரபு மதுபாலா, மகேஸ்வரி ஆகியோர் நடிக்கும் படம் 'பாஞ்சாலங்குறிச்சி'

கதைப்படி இரண்டு கதாநாயகிகள். ஆனால் தனக்குத்தான் முக்கியத்துவம் என்கிறார் மதுபாலா.

தமிழில் அதிக கவனம் செலுத்தப்போவதாகச் சொல்கிறார் மதுபாலா. இவ்வாறு முன்பும் பல தடவை சொன்னவர்தான் மதுபாலா. இந்தியில் மதுபாலா தாராளம் காட்டியும் வாய்ப்புக்கள் இல்லை. அதனால் தமிழில் பிடிப்பு வந்துவிட்டதாக பல்லவி.

## 'காலாபாணி' சர்ச்சை

இந்திய திரையுலக வரலாற்றில் இதுவரை எந்தப் படத்திற்கும் இல்லாத அளவுக்கு காலாபாணி' படத்துக்கு 400 'பிரிண்ட்' போடப்பட்டுள்ளது.

மலையாளத்தில் தயாரான 'காலாபாணி', தமிழில் 'சிறைச்சாலை' என்ற பெயரில் திரைக்கு வருகிறது. கன்னடம், தெலுங்கு, இந்தியிலும் மொழி மாற்றப்பட்டுள்ளது.

காலாபாணி படத்துக்கு இரண்டாவது சிறந்த பட அந்தஸ்தை வழங்கியுள்ளது கேரள அரசு. முதலாவது அந்தஸ்து வழங்காதது ஏன்? என்று சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

கேரள அரசின் சிறந்த நடிகர் விருதை மட்டுமே வாங்குவேன். தயாரிப்பாளருக்கான விருதை வாங்க மாட்டேன் என்று நடிகரும், தயாரிப்பாளருமான மோகன்லால் அறிவித்திருக்கிறார்.

பிரபு தமிழில் பேசி நடித்ததால் சிறந்த துணை நடிகருக்கான விருதை வழங்கவும் கேரள அரசு மறுத்துவிட்டது.

## இயக்குநரின் காதல்

'சின்னராமசாமி, பெரியராமசாமி' படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் ஆர்வி. உதயகுமார். இயக்கமும் அவர்தான். கதாநாயகியாக நடிப்பவர் புதுமுகம். பெயர்: உதயா.

'உதயா' என்ற பெயரை ஆசையாகச் சூட்டியவர் உதயகுமார்தானாம். பார்த்தவுடனேயே உதயாவை பிடித்துவிட்டது. கடுமையாகக் காதலிக்க ஆரம்பித்துவிட்டார். தனியாகவும் நடிப்புச் சொல்லிக்கொடுக்கிறார் என்று மீதமிக.

எல்லாமே கலப்படமில்லாத வதந்திகள் என்று மறுக்கிறார் உதயகுமார்.

ஏற்கெனவே சௌந்தர்யாவை லவ்விக்கொண்டிருந்தவர் உதயகுமார். அதையும் வதந்தி என்றுதான் மறுத்திருந்தார்.

இரண்டுமே உண்மையைத் தவிர வேறல்ல என்கிறது விஷயமறிந்த வட்டாரம்.

## மறுபடி கூட்டணி

படங்களை இயக்குவதை விட்டுவிட்டு பிஸியாக நடித்துக் கொண்டிருக்கும் இயக்குநர் மணிவண்ணன் விரைவில் சத்யராஜ் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். தற்போது சத்யராஜ் 'சேனாதிபதி', 'சிவசக்தி', 'வள்ளல்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இப்படங்கள் முடிவடைந்ததும் மணிவண்ணன் இயக்கும் புதிய படம் தொடங்கப்படவுள்ளது.

சத்யராஜ்-மணிவண்ணன் கூட்டணி சோடை போகாதது.

## ...மல் நடிக்கும் புதிய படம்
### ...ஸ்.ரவிக்குமாரின் 'அவ்வை சண்முகி'

...நடிக்கும் 'தர்பார்', விஜயகாந்த் நடிக்கும் 'தர்மசக்கரம்', ...நன் நடிக்கும் 'காளையன்' என்று பல படங்களை ...வைத்திருக்கிறார் கே. எஸ். ரவிக்குமார்.

... 'முத்து', 'பெரியகுடும்பம்' என்று தொடர்ந்து ஹிட் ... கொடுத்ததால் கே. எஸ். ரவிக்குமார் காட்டில் ... எந்தக் ஹீரோவைக் கேட்டாலும் உடனே நடிக்கச் ...விடுகிறார்கள்.

...விடமும் கதை சொல்லியிருக்கிறார் கே.எஸ்.ரவிக்குமார். ...பிடித்துவிட்டது. ஓ.கே. சொல்லிவிட்டார்.

...ந்த படத்திற்கு பெயர் சூட்டி விட்டார்கள். படத்தின் ... அவ்வை சண்முகி. கமல் ஜோடியாக மீனா நடிக்கிறார். ...சனம் கிரேஸிமோகன். திரைக்கதை இயக்கம் கே.எஸ். ...டார். இசை: தேவா. இம்மாதம் படப்பிடிப்பு ஆரம்ப...

...லிலாவதி' போல 'அவ்வை சண்முகி'யும் நகைச்சுவைக்கு ...த்துவம் கொடுத்து தயாராகப்போகிறது.

## ...டீர் மறுப்பு

...தியில் 'யுக புருஷ்' படத்தில் முதலில் நடிக்கச் ...ந்தவர் ஸ்ரீதேவி. பட விளம்பரத்திற்காக பல ...ங்களில் பல இலட்சம் செலவில் ஸ்ரீதேவியை ...படமும் எடுத்தார்கள். திடீரென்று என்ன ...தாரோ தெரியாது நடிக்க மறுத்துவிட்டார். ...ல் தயாரிப்பாளர் வெறுப்பாகிப்போனார். ...யாரிப்பாளர் சங்கத்திடம் முறையிட்டுள்ளார். ...தேவி அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. 'ஆர்மி' படம் ...ரமாக ஓடும் என்று நம்பி அதில் கவனம் செலுத்திக் ...டிருக்கிறார்.

... புருஷ்' படத்தில் ஸ்ரீதேவிக்கு பதிலாக மனிஷா ...ராலா நடிக்கிறார்.

## பொழுது போக்க 'பரசுராம்'

சத்யராஜ் நடித்து தமிழில் வெற்றி குவித்த படம் 'வோல்டர் வெற்றிவேல்.'

அதனை தெலுங்கில் பரசுராம் என்ற பெயரில் தயாரித்தார்கள். சிரஞ்சீவி, ஸ்ரீதேவி நடித்து தெலுங்கிலும் சூப்பர் ஹிட். இப்போது பரசுராம் தமிழில் மொழிமாற்றப்பட்டு திரைக்கு வந்துள்ளது.

தமிழில் சத்யராஜின் நடிப்பில் படம் முழுக்க காணப்பட்ட சீரியஸ், பரசுராமில் மிஸ்ஸிங்.

சிரஞ்சீவியும், ஸ்ரீதேவியும் நடித்திருப்பதால் பாடல் காட்சிகளை தாராளமாகப் புகுத்தியிருக்கிறார்கள். ஸ்ரீதேவியின் கவர்ச்சியும், நடன அசைவுகளும் ஸ்ரீதேவிக்கு தெலுங்கு மார்க்கெட்டில் ஒரு கண் என்பதை சொல்லாமல் சொல்லியிருக்கின்றன.

'வோல்டர் வெற்றிவேல்' படத்தில் சுகன்யா ஆட்டக்காரியாக நடித்தார். பரசுராமில் ஒரு மாற்றம். ஸ்ரீதேவி கொள்ளைக்காரியாக நடிக்கிறார்.

சத்யராஜ் செய்த பாத்திரத்தை சிரஞ்சீவியால் திருப்தியாக செய்ய முடியவில்லை. ஆனால், சுகன்யாவை ஓரம் கட்டிவிட்டார் ஸ்ரீதேவி.

வில்லனாக நடிக்கும் தேவராஜ் நன்றாகச் செய்திருக்கிறார். நாசர் தமிழில் செய்த பாத்திரம் அவருக்கு. நாசருக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் தேவராஜ் சூப்பர்.

பொழுதுபோக்குப் பிரியர்கள் பார்க்கக்கூடிய படம்.

## இரகசியப் படப்பிடிப்பு

'ராஜாளி', 'புதல்வன்', 'சாம்ராட்', 'இரட்டை ரோஜா', 'என் ஆசை தங்கச்சி', 'நந்தா', 'ஓன் டை ரு', 'கறுப்புரோஜா' ... படங்களில் ராம்கி நடித்து வருகிறார். இவற்றில் ஆபாவாணனின் 'கறுப்பு ரோஜா' படத்தில் வித்தியாசமான தோற்றத்தில் நடித்திருக்கிறார் ராம்கி. எனவே இந்தபடத்தில் இவர் சம்பந்தப்பட்ட காட்சிகளைப் படமாக்கும் போது மட்டும் வெளியாட்கள் யாரையும் படப்பிடிப்புத் தளத்திற்குள் செல்ல அனுமதிப்பது இல்லையாம்.



சிரஞ்சீவி-ஸ்ரீதேவி
படம்- பரசுராம்




## மம்தாவின் அதிரடிப் பேட்டி
### "ஊர்மிளா நிலைக்க முடியாது"

தமிழில் 'நண்பர்கள்' படத்தின் மூலம் அறிமுகமானவர் மம்தா குல்கர்னி. இப்போது இந்தியில் ஒரு கலக்குக் கலக்கிக்கொண்டிருக்கிறார் மம்தா.

இந்தி நடிகர்களில் மம்தாவுடன் இணைந்து பேசப்படாத இளம் நடிகர்களே கிடையாது. உடலை வைத்தே இந்தியில் உயரப் பறக்கலாம் என்று நினைக்கிறார் மம்தா.

சமீபத்தில் மம்தா அளித்த சூடான பேட்டி ஒன்றில் இருந்து:

கேள்வி:- **"உங்களுக்கு பிடித்தமான ஹீரோ யார்?**

மம்தா:- சல்மான்கான், ஜாக்கி ஷெராப்.

கேள்வி:- **நீங்கள் மது அருந்துவதாகவும், இரவுநேர கேளிக்கைகளில் கலந்துகொள்வதாகவும், பத்திரிகைகள் எழுதுகிறதே?**

மம்தா:- அப்படியா? நான் கலந்துகொள்ளும் இரவு நேர கேளிக்கைகளுக்கு வந்த சில நிருபர்கள் என்னிடம் அசடு வழிகிறார்கள். பம்பாய் ஹோட்டல் ஒன்றில் ஒரு நிருபர் என்னைத் தொட்டுப் பேச முற்பட்டார். ஒரு முறைப்பால் அவரை அடக்கிவிட்டேன். அப்படியான நிருபர்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்த தாறுமாறாக எழுதத்தான் செய்வார்கள்.

கேள்வி:- **பம்பாயில் நட்சத்திரக் கலைவிழா ஒன்றின் பின்னர் நீங்களும் ஒரு ஹீரோவும் மது போதையில் வரம்புமீறி நடந்து கொண்டதாக புகார் கிளம்பியதல்லவா?**

மம்தா:- யாரைச் சொல்கிறீர்கள்? என்னையும் ஜாக்கி ஷெரப்பையும் இணைத்து கட்டிவிடப்பட்ட கதை அது. எனக்கும் ஜாக்கிக்கும் எங்கள் நெருக்கத்தை வைத்துக்கொள்ள பகிரங்க இடமா கிடைத்தது?

கேள்வி:- **செக்ஸ் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மம்தா:- சந்தர்ப்பமும், சூழ்நிலையும் வாய்த்தால் எல்லோரும் என்ன நினைப்பார்களோ அதுதான் என் நினைப்பும். பலர் தமது எண்ணத்தை வெளியே சொல்வதில்லை. நான் சொல்கிறேன். அதற்காக என்னை 'கெட்ட பெண்ணாக' பார்க்கிறார்கள். எனக்கு விருப்பமான ஆணுடன் என் சந்தோசத்தை பகிர்ந்து கொள்வது கெட்ட காரியமா? எனக்கு அப்படிப்படவில்லை.

கேள்வி:- **படவாய்ப்புக்கள் பெறுவதற்காக இயக்குநர்களை தனியாக கவனிக்கும் நடிகைகள் பட்டியலில் உங்கள் பெயரும் இருக்கிறதல்லவா?**

மம்தா:- பெரிய இயக்குநர்களின் விருப்பங்களுக்கு இசைவாக நடக்காத ஒரு நடிகைகூட இங்கே நிலைக்க முடியாது. ஸ்ரீதேவி, மாதுரி டிக்ஷித் என்று யாருமே அதற்கு விதிவிலக்கல்ல.

கேள்வி:- **புதிதாக ஊர்மிளா அலை வீசுகிறதே?**

மம்தா:- ஊர்மிளா அலை நீடிக்காது. ஊர்மிளாவிடம் விசேஷமாக எதுவும் இல்லை. உடற்கட்டில்கூட செக்ஸ் அப்பீல் கிடையாது. சில படங்களின்பின் ரசிகர்களுக்கு சலித்துவிடுவார்."

என்று பேட்டியளித்துள்ளார் மம்தா. இந்தப் பேட்டியின்பின்னர் மம்தாமீது கோபமாக இருக்கிறார் ஊர்மிளா.

## குஷ்புவின் இரட்டை வேடம்

'இரட்டை ரோஜா' படத்தில் கிளாமராக பாடல் காட்சிகளில் நடித்திருக்கிறார் குஷ்பு. திருமணச் செய்தியின்பின் இளமை திரும்புகிறதோ?

'பாரதி' என்னும் படத்தில் குஷ்பு இரட்டை வேடத்தில் நடிக்கிறார். நடிகையாகவும், கல்லூரி மாணவியாகவும் நடிக்கிறார்.

குஷ்புவுக்கு அன்னை தெரசா ஆசிவழங்கும் காட்சியும் 'பாரதி' படத்தில் இடம் பெறுகிறது.

காங்கிரஸ் கட்சி எம்பி. அன்பரசுவும் நடிக்கிறார். கதாநாயகன் பாபுகணேஷ். நிழல்கள் ரவி, சின்னி ஜெயந்த், வடிவேலு ரூபினி ஆகியோரும் பாரதியில் நடிக்கின்றனர்.

## வேட்டைக்காரி

ஆக்ஷன் ஹீரோயின் விஜயசாந்திக்கு மற்றொரு அதிரடிப்படம் 'வேட்டைக்காரி'. சிங்கம், புலி கரடி என்று மிருக பட்டாளமும் நடிக்கிறது. 'அடவிராணி' என்ற பெயரில் தெலுங்கிலும் தயாராகிறது. தமிழ், தெலுங்கு இரண்டிலும் ஒரே நேரத்தில் வெளியாகப் போகிறது.

நெப்போலியன் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். ஹீரோ அவர்தான். விஜயசாந்திக்கு முக்கியத்துவம் உள்ள படம் என்பதால் ஹீரோ சீரோதான்.

காட்டுவாசிப் பெண்ணாகவும் வேடமிட்டு நடிக்கிறார் விஜயசாந்தி. தனது குடும்பத்தை அழித்தவர்களை துரத்தித் துரத்தி பழிவாங்கும் பாத்திரம். விடுவாரா விஜயசாந்தி. புகுந்து தூள் கிளப்புவார்.

## கோலிக்குண்டு விளையாட்டு

நடிகைகளின் தொப்புளை குளோசப்பில் காட்டிக்கொண்டிருந்தது அந்தக் காலம். இப்போது கதையே வேறு.

சின்னக்கவுண்டர் படத்தில் சுகன்யாவின் தொப்புளில் விஜயகாந்த் பம்பரம் விட்டாலும் விட்டார். அடுத்து வந்த பல படங்களில் தொப்புளை வைத்து பல காட்சிகள். இறுதியாக லவ்பேர்ட்ஸ் படத்தில் நக்மாவின் தொப்புளில் 'ஓம்லெட்' தயாரித்து அசத்தினார் பிரபுதேவா.

தற்போது தயாரிப்பில் உள்ள 'காவல் காரன்' படத்தில் நடிகை கரமியின் தொப்புளில் கோலிக்குண்டு விளையாட்டு நடத்துகிறார்கள். இப்படியே போனால் எங்கே போய் நிற்கப்போகிறதோ?

## சிவசக்தி ரெடி

சத்யராஜ், பிரபு, ரம்பா நடிக்கும் 'சிவசக்தி' படப்பிடிப்பு முடிவடையும் நிலையில் இருக்கிறது. சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் படம் நன்றாக வந்திருப்பதாக கூறுகிறார் சத்யராஜ். படத்தில் அவருக்கு ஜோடி கிடையாதாம்.

'மக்கள் என் பக்கம்' படத்தில் வந்தது போன்ற கெட்-அப் சத்யராஜுக்கு. கடத்தல்காரனாகவே இதிலும் நடிக்கிறார்.

## ஷில்பாவின் தாராளம்

நடிகைகளில் தொப்புள் காட்டி தாராளமாக முன்னிற்கும் நடிகை ஷில்பா. "தொப்புள் ஷெட்டி. இந்திய அழகை ரசிகர்கள் மிகவும் விரும்பிப்பார்க்கிறார்கள்" என்கிறார் ஷில்பா.

'மிஸ்டர் ரோமியோ' படத்தில் ஷில்பாவின் வற்புறுத்தலால் பல குளோசப் காட்சிகள் கூட்டப்பட்டுள்ளனவாம்.

## விந்தையுள்ள படம்

கம்பியூட்டர் சாகசங்களை படங்களில் புகுத்துவது பெருகிவருகிறது. காதலன் படத்தின்பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றம் அது.

அர்ஜுன்-மீனா-ரம்பா நடித்து முடிவடைந்துள்ள 'செங்கோட்டை' படத்திலும் கம்பியூட்டர் தொழில் நுட்பம் புகுந்து விளையாடியிருக்கிறதாம்.

பறக்கும் விமானத்திலிருந்து அர்ஜுன் குதிக்கும் காட்சியை அசத்தலாக எடுத்திருக்கிறார்களாம்.

பெருந்தொகையான பணச் செலவில் உருவாகியிருக்கிறது 'செங்கோட்டை.'

## புதிரான பாடல்

பிரபு-நக்மா முதன் முதலில் ஜோடி சேர்ந்து நடித்துவரும் படம் 'பெரியதம்பி' அந்தப் படத்திற்காக வைரமுத்து எழுதி, தேவா இசையில் சுவர்ணலதா பாடிய பாடலின் ஆரம்ப வரிகள் இவை:

"சாயங்காலம் வெயில் படாத இடத்தைப் பார்த்து தொட்டுப்புடிச்சான்டி" என்று தொடர்கிறது பாடல்.

வழக்கம்போல வைரமுத்து புதிர் போட்டிருக்கிறார். வெயில் படாத இடம் எது? என்று தலைமுடியை பிய்க்கப் போகிறார்கள்.

## ...றிந்த காதல்

...இந்தி நடிகர் அக்ஷய்குமாரும் ... ராண்டனும் வெகு ...நையாக காதலித்து வந்தார்கள். ...குமார் வீட்டில் பச்சைக்கொடி. ...னும் காதலர்கள் இருவரும் ...துவிட்டார்கள்.

...வீனா ராண்டன் என்ன சொல்லுகிறார் ...துவா?

...அக்ஷயிடம் காதல் கீதல் எதுவும் எனக்கு கிடையாது. ...நானும் நண்பர்கள் மட்டும்தான். அக்ஷய் என்னையே ...ந்தார் என்று கூறுவது சரியல்ல. இதுபோல பத்துப் ...களை அவர் சுற்றிவந்திருப்பார். அதில் நானும் ...யாக இருந்திருப்பேன். அவ்வளவுதான். அவர் ...வுடன் இருந்தால் என்ன? வேறுயாருடன் இருந்தால் ...க்கென்ன?" என்று கூறியிருக்கிறார்.

## முகப்பில்
**சுகன்யா**

ராஜ்கிரண்-வனிதா
படம்- மாணிக்கம்



பிரபு-ரசிகா
படம் பூச்சோலை

# முக்கியமான மூன்று கேள்விகள்

## பதில் சொல்கிறார்கள் 4 பிரபலங்கள்

பெண்கள் தொடர்பான சில கேள்விகளைக் கொடுத்து பிரபலமானவர்களிடம் பதில் கேட்டிருந்தது தமிழக பத்திரிகையான 'தினமணி.'

அவற்றில் மூன்று கேள்விகளும், அதற்கு பிரபலங்கள் சொன்ன பதில்களும் இங்கே:

### கேள்விகள்

1. ஒரு பெண்ணின் முதல் அக்கறையாக எது இருக்க வேண்டும்? குடும்பமா? கல்வியா? வேலையா? ஏன்?
2. செக்ஸ் விஷயத்தில் பெண்ணுக்கு ஆணுடன் சம உரிமை வேண்டுமா? வேண்டாமா?
3. பெண்ணுக்கு பெண்தான் எதிரி என்பது உண்மையா?

### பதில்கள்




**வாசுகி:-** அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்.

1, இக் கேள்வியைப் படிக்கும் போது 'கல்வியா, செல்வமா, வீரமா?' என்ற 'சரஸ்வதி சபதம்' சினிமாப் பாடல் நினைவுக்கு வருகிறது. ஒட்டுமொத்தமான ஒரு பதிலை இதற்கு கூறமுடியாது. பெண்ணுக்கு இதுதான் முதல் அக்கறை. ஆணுக்கு அதுதான் முதல் அக்கறை என்று திட்ட வட்டமாக நம்மால் வரையறை செய்யவும் இயலாது. ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இச் சமூகத்தில் கண்ணியத்துடன், கௌரவத்துடன் வன்முறையில்லாமல் வாழ எது தேவையோ, அதனை உருவாக்குவதுதான் அனைவரின் முதல் அக்கறையும்! அதற்கு உட்பட்டதுதான் குடும்பம், கல்வி, வேலை எல்லாம்.

2.சமூகம், பொருளியல், அரசியல், கலாசாரம், குடும்பம் என்று அனைத்து விஷயங்களிலும் சம உரிமை வேண்டும். பொதுவாக சம உரிமை என்னும் போது, ஆண் செய்யும் அனைத்து விஷயங்களையும் பெண்ணும் செய்ய உரிமை என்பதாய் அர்த்தப்படுத்துவது தவறு. அப்படியானால் அராஜக நடிவடிக்கைகளிலும் பங்கு கேட்பதாய் அமையும். 'செக்ஸ்' விஷயத்தில் என்ற உங்கள் கேள்வி தெளிவாக இல்லை. கணவன், மனைவிக்கிடையேயான பாலியல் உறவு, பரஸ்பர உணர்வுகளை மதித்து, சமத்துவக் கண்ணோட்டத்தில் அமையவேண்டுமா என்றால், ஆம்! பாலியல் அராஜகங்களில் சம உரிமை வேண்டுமா என்றால், இல்லை.

3. ஏற்கமுடியாது! பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சனைக்கு காரணம் மற்றொரு பெண் என்கிறார்களே. வரலாற்றில் பல யுத்தங்களில் அடித்துக்கொண்டு செத்தது ஆண்கள்தான். இன்றைக்கு பங்காளிச் சண்டைகளில், வரப்புத் தகராறுகளில் ஓர் ஆண்தான், மற்றொரு ஆண்மீது தாக்குதல் தொடுக்கிறான். ஆகவே ஆண்தான் ஆணுக்கு எதிரி என்று முடிவுக்கு வரமுடியுமா?

பெண்ணுக்கு பெண்ணும் எதிரியல்ல. ஆணும் எதிரியல்ல. அவளைக் கீழ்நிலையில் வைத்துள்ள சமூக அமைப்புத்தான் காரணம்.



**சோ:-** 'துக்ளக்' ஆசிரியர்

1. குடும்பம்தான்.

இது ஏன்? என்று கேட்கும் நிலைக்கு பெண்கள் போய்விட்டார்களே- அதுதான் காரணம்.

2. என்ன கேட்கிறீர்கள் என்பதே புரியவில்லை.

ஆண்களை 'ரேப்' செய்தால் பெண்களுக்கும் தண்டனை உண்டு என்று சட்டம் வர வேண்டும் என்கிறீர்களா? பாவம் பெண்கள்! அதெல்லாம் வேண்டாம்.

3. பொதுவாகப் பெண்கள் அமைதிக்கு எதிரிகள் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், பெண்களைப் பற்றி எதுவுமே உண்மை இல்லை. ஒரு ஸ்திரத்தன்மை இருந்தால் அல்லவா, உண்மை எது, பொய் எது என்று கண்டுபிடிக்க முடியும்.

**எஸ். சுபா:-** பொறுப்பாசிரியர்– 'ஆனந்தவிகடன்'

1. முதல் அக்கறை கல்வியாகத்தான் இருக்க வேண்டும். அதுதான் அஸ்திவாரம். அதனால்தான் இயற்கையிலே கூட அவளுக்கென்று குடும்பம் அமைவதற்கு முன்பு, வேலை கிடைப்பதற்கு முன்பு கல்விக்கான வாய்ப்பு வருகிறது. தவிரவும் கல்வி என்பது பள்ளியோடே முடிந்து போகும் விஷயமல்ல...! கற்றுக்கொள்ளும் தாகம் மட்டும் எப்போதும் இருந்துவிட்டால்



குடும்பத்தையும் வேலையையும் கூட தெளிவோடும், திடத்தோடும் அக்கறையோடும் நடத்திவிடமுடியுமே!

2."இன்பம் என்பது இருவரின் உரிமை. யார் கேட்டாலும் இளமைக்கு பெருமை!" என்பது கண்ணதாசன் பாடல். இரண்டு தரப்புக்கும் சம உரிமை இருந்தால்தான் அதற்கு பெயர் 'செக்ஸ்.' இதில் எவர் ஒருவருக்கு உரிமை குறைந்தாலும், அதற்கு வேறு பெயர் வந்துவிடும். அது பலாத்காரம்!

3. பொதுவாக மனித குலத்திற்கு நட்பும் உண்டு. எதிரிகளும் உண்டு. பெண்ணுக்கு பெண் மட்டுமே எதிரியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. எதிரிகள் ஆணாகவும் இருக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகளாகவும் இருக்கலாம். எது எப்படியாயினும் தன் வழியில் எதிர்ப்படும் தடைகள் எல்லாவற்றையும் வேகமாக கடந்து முன்னேறிக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு எதிர்ப்பு ஒரு பொருட்டல்ல. எதிரிகளும் ஒரு பொருட்டல்ல.

**நாசர்:-** திரைப்பட நடிகர்.

1. இன்றைய வாழ்க்கை முறையில் இது மட்டும்தான் முக்கியம் என்று வீம்புக்காக வாழ முடியாது. சினிமாக்களில் வேண்டு



மானால் அப்படி நடக்கலாம். ஒரு பெண்ணுக்கு கல்வி முக்கியம். அந்தக் கல்வியால் வேலை கிடைத்தால் அதுவும் முக்கியம். இரண்டுமே குடும்பத்துக்குத்தானே பயன்படுகிறது.....இந்த விஞ்ஞான யுகத்தில் குடும்பம் என்ற உணர்ச்சிக்குவியலை மட்டுமே முன்னிறுத்தி வாழ்வை பணயம் கட்டுவது முட்டாள்தனம். பெண்ணுக்கு வேலை முக்கியமோ இல்லையோ, கல்வி மிக மிக முக்கியம்.

2. செக்ஸ் உணர்ச்சி ஆண்களுக்கு மட்டுமே என்று இயற்கை என்றும் நியதி வகுத்ததில்லை. உடல்ரீதியாகவும் மனரீதியாகவும், ஆணுக்கு இருக்கும் அதே உணர்ச்சிதான் பெண்ணுக்கும் உண்டு. காலம் காலமாக அது என்னவோ ஆண்கள் உணர்ச்சிவசப் பட்டால்தான் உடலுறவு என்ற திணிக்கப்பட்ட வழிமுறை இருந்து வருகிறது. பெண் உணர்ச்சிவசப்பட்டால் அதை வேறுவிதமாகப் பேசுவது காட்டுமிராண்டித்தனம். பெண் வெறும் போகப் பொம்மையல்ல. உயிருள்ள, உணர்ச்சியுள்ள ஒரு அற்புதம்.

3.இதில் இரண்டு பொருள் அடங்கியுள்ளது. 'தனக்குத்தானே எதிரியா?' 'ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் எதிரியா?' என்று பொருள்படுகிறது. இந்திய வாழ்க்கை முறையில் இரண்டுமே நடைமுறையில் இருக்கிறது. இன்னும் தனக்குத்தானே எதிரியாக இருக்கிறாள். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக திணிக்கப்பட்ட, நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறைதான் சரி என்றும், நவீன சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதும் தான் அவளின் முதல் எதிரி.

# சிகை அழகும் பாதுகாப்பும்!

## லேடீஸ் ஸ்பெஷல்

தலையை நன்கு தேய்த்துக் குளித்த பிறகு இரத்தம் அப்பகுதியில் புத்துணர்ச்சியுடன் பாயும். தலை, முகம் ஆகிய பகுதிகள் சுத்தமாக விளங்கும். தலைக்கு ஊற்றிக் குளிக்காவிட்டால் இரத்த ஓட்டத்தில் மாறுதல் இராது. மந்த உணர்ச்சி ஏற்படும். தலைக்குத் தண்ணீர் ஊற்றினால் ஏற்படும் புத்துணர்ச்சிக்கும், தண்ணீர் ஊற்றிக்கொள்ளாவிட்டால் ஏற்படும் மந்தத் தன்மைக்கும் உள்ள வித்தியாசம் தெரியும்.

குளிப்பதற்கு முன்பாக முடியை இழுத்தாலோ அல்லது முடித்தோலை விரல்களால் மடித்தாலோ லாவகமாக வராது. ஆனால் முறையாகக் குளித்தபின் முடியை இழுப்பதற்கும் எளிதாக இருக்கும்.

உடலில் கழிவுப் பணி சரியாக நடைபெறாவிட்டால் தோல் மூலமாக அசுத்தம் வெளியாகும். அப்போது தலைமுடித் தோலின் வழியாகவும், அசுத்தம் வெளியாகும். இதனால் மயிர்க்கால்கள் மிகவும் பாதிக்கப்படும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் வாரத்திற்கு இரண்டு முறை தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்.



சுரப்பிகள் அதிக திரவங்களைச் சுரப்பதனாலும், வியர்வையினாலும் சிலரது முடி மிகவும் கடினமாக இருக்கும். இப்படிப் பட்ட முடி உள்ளவர்கள் தவறாமல் தலைப் பகுதியைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சுரப்பிகள் அதிகம் சுரந்தால் அவற்றில் கோளாறு என்று அர்த்தம். இப்படிப்பட்ட முடி உள்ளவர்கள் அதிக சோப் அல்லது சீயக்காய் போட்டுக் குளிப்பது நல்லது. அப்போதுதான் எண்ணெய்ப்பசை போகும்.

அதிக பசை உள்ள முடியைப் பெற்றவர்கள் கொழுப்புச் சத்துக் குறைவான உணவை உண்பது நல்லது. தலை முடியையும், முடித்தோலையும் கீழ்க்கண்ட முறையில் சுத்தமாகப் பாதுகாப்பது சிறந்தது.

எப்போது முடிந்தாலும் நேரடியாக வானத்தில் இருந்து விழும் மழைத் தண்ணீரைப் பிடித்து வைத்துச் சூடாக்கவும். அந்த நீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு எல்லாப்பகுதியிலும் நன்கு ஈரம்படும்படி தேயுங்கள். பிறகு ஓர் உறுதியான சீப்பை எடுத்து தலையில் உள்ள அழுக்கு, சிக்கு ஆகியவை போக நன்றாக வாரவும். அதன் பிறகு மீண்டும் ஒரு முறை நீரால் கழுவிவிட்டு சோப்பினால் மீண்டும் கழுவவும். இம்முறை விரல்களால் நன்கு தேய்த்துக் கொள்ளலாம். மழை நீருக்குச் சுத்தப்படுத்தும் தன்மை அதிகம்.

தலையில் அழுக்கோ, பசையோ இன்றிக் குளுமையுடன் இருப்பது வரவேற்கத்தக்கது. சளித்தொல்லை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் உடலில் சேரும் அசுத்தங்களும், மயக்கப் பொருட்களுமாகும். ஆனால் குளிர்ச்சியினாலேயே சளி பிடிக்கும் என்பது தவறான நினைப்பு. சளியால் பாதிக்கப் பட்டவர்கள் வெந்நீரை உபயோகித்துக் குளிக்கலாம் அல்லவா?

# உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்த ஆண்டு இந்தியாவில்

மார்ச் 17 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி முடிந்துவிட்டது. மற்றொரு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்த ஆண்டு நடக்கப்போகிறது.

இது- மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டி. இந்தியாதான் நடத்துகிறது.

மகளிர் உலக கோப்பை போட்டிகள், ஆடவர் உலகக் கோப்பை போட்டிக்கு முன்பிருந்தே நடைபெற்றுவருகின்றன. 1974 இல் இருந்து ஆரம்பமாயின.

இந்தியாவில் தமிழ்நாட்டிலும் மகளிர் கிரிக்கெட் அணி இருக்கிறது.

தமிழ்நாடு மகளிர் கிரிக்கெட் சங்கத் தலைவியாக இருக்கும் ஷீலாவதி ரங்கநாதனுக்கு 67 வயது.

"ஆரம்பகாலத்தில் கிரிக்கெட் விளையாட பெண்களை அனுமதிப்பதில்லை பெற்றோர்கள். வெய்யிலில் ஆடினால் பெண்கள் கறுத்துப்போய், பிறகு கல்யாணம் செய்வது கடினம் என்ற அச்சம்தான் அதற்கு காரணம். இப்படியான பல தடைகளைத் தாண்டித்தான் மகளிர் கிரிக்கெட் வளர்ந்துள்ளது,"

என்கிறார் ஷீலாவதி ரங்கநாதன்.



"மகளிர் கிரிக்கெட்டுக்கு அரசு போதிய ஊக்கம் தருவதில்லை

மகளிர் கிரிக்கெட்டுக்கு என்று தனியான மைதானம் கிடையாது. அதனால் பயிற்சி மேற்கொள்வது சிரமமாக உள்ளது.

மகளிர் கிரிக்கெட் போட்டிகளை ஒளி பரப்ப விளம்பரதாரர்கள் 'ஸ்பொன்சர்' செய்ய முன்வருவதில்லை," என்று பல குறைகளை பட்டியலிடுகிறார் ஷீலாவதி.

# தினமுரசு-அருள் ஜுவல்ஸ் இணைந்து நடத்திய தங்கமாலை பரிசுப் போட்டி

முதல் பரிசாக நெக்லஸ் பெற்ற அதிஷ்டசாலியின் பெயர் விபரமும், ஆறுதல் பரிசுகள் பெறும் 50 அதிஷ்டசாலிகளில் பத்துப்பேரின் விபரமும் முன்னரே வெளியாகியுள்ளன. ஏனையோரில் பத்து அதிஷ்டசாலிகள் இவர்கள்-



தங்கநெக்லஸ் பரிசாகப் பெறும் அதிஷ்டசாலி இவர்தான். **ஆர். ஜெயந்தி. இல: 60/28/1, றொறிங்டன் அவெனியு-கொழும்பு-07.**

11. செல்வி. ரவிமதி தேவராஜ்
357/1, திருமலை வீதி,மட்டக்களப்பு.

12. எஸ்.சங்கீதா
இல 6, நவ கெலனிபுர,
வெல்லம்பிட்டிய.

13. எம்.சித்தி அலீமா
17/3, வத்தேகம வீதி, மடவளை பஸார்,
மடவளை.

14. எஸ்.நிர்மலரூபினி
புகையிரத வீதி,கொம்மாதுறை.

15. திருமதி.றிபாயா ஏ.அஸீஸ்
204 ஏ, 5/6, பொது வீதி,
அக்கரைப்பற்று-6.

16. விஜயலட்சுமி வையாபுரி
பட்டல்கல எஸ்டேட்,
எட்லி டிவிஷன்,
டிக்கோயா.

17. செல்வி. சகியா
20 ஏ, றஹுமானா பாத்
பெரியமுல்லை,
நீர்கொழும்பு.

18. திருமதி.ரி.மகேஸ்வரி
தில்லையடி,
புத்தளம்.

19. திருமதி.ராணி சில்வா
82 1/46, ஸ்ரீ இராமநாதன் தொடர்மாடி
கொழும்பு-13.

20. சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்
36/1, மூர் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-6.

(ஏனையோர் விபரம் அடுத்தவாரம்)

# மனோஜ் பிரபாகரின் காதலி

இந்திய கிரிக்கெட் அணி வீரர் மனோஜ் பிரபாகருக்கு எண்ணற்ற இரசிகைகள். அந்த இரசிகைகளில் ஒருவர் சந்தியா.

சந்தியாவைக் கண்டதும் மனோஜ் பிரபாகரின் நெஞ்சுக்குள் மத்தாப்பு. சந்தியாவுக்கு மனோஜ் பிரபாகரைக் கண்டதும் மனசுக்குள் மழை.

அதுதான் காதல் என்பது என்று இருவருக்கும் மிக நிச்சயமாய் தெரிந்து போனது.

காதல் வளர்ந்தது. கல்யாணத்தில் முடிந்தது. காதலால் ஏற்பட்ட அனுபவத்தை சொல்லியிருக்கிறார் சந்தியா.

டெல்லி மைதானத்தில் ஆடிமுடித்த களைப்புடன் திரும்பிய மனோஜ் பிரபாகரை மொய்த்துக் கொண்டனர் கல்லூரி மாணவிகள்.

ஓட்டோகிராப் கேட்டனர். கையொப்பம் போட்டுக் கொண்டிருந்தார் பிரபாகர். சந்தியாவும் அப்போது கல்லூரி மாணவிதான். அவரும் ஓட்டோகிராப்பை நீட்டினார்.

கையொப்பம் போட்ட படியே சந்தியாவை வைத்தகண் வாங்காமல் பார்த்தார் பிரபாகர்.



பின்னர்.....

"உன் பெயர் என்ன?" என்று கேட்டார். சந்தியா மெய்சிலிர்த்துப் போனார். உடம்பு முழுக்க மின்சாரம் பாய்ந்ததுபோல இருந்தது. உள் மனதில் இனம்புரியாத சந்தோசம்.

"என் பெயர் சந்தியா!" என்றேன். அந்த நமிடமே.... இல்லை... அந்த வினாடியே என் மனம் அவருடன் இரண்டறக் கலந்துவிட்டது.

அவருக்கும் அப்படித்தான். நம் சந்திப்பு தொடர்ந்தது.

அவர் பம்பாய் சென்ற பின்னர் நான் டில்லியில் இருந்து தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்வேன். மணிக்கணக்காகப் பேசுவோம்.

அப்படித்தான் நம் காதல் வளர்ந்தது. பல வருடங்கள் அவருக்காகக் காத்திருந்தேன். அதன்பிறகே கல்யாணம் நடந்தது," என்று அனுபவத்தை மீட்டியிருக்கிறார் சந்தியா.

இந்திய அணியில் இருந்து மனோஜ் பிரபாகர் ஓய்வுபெற்றுவிட்டார் என்பது வருத்தமான செய்தி.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொள்ளுப்பிட்டி வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**சித்தி நஸ்ரீனா.**
11,17 வது ஒழுங்கை. கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் ஏப்ரல் 22ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் பகல் 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து [ஞாயிறு, புதன் தவிர] பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காவிந்த பிளேஸ், கிருல்லப்பனை, கொழும்பு-06.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

### மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** I

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-04-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## வெகு விரைவில்

உன் மடல் கிடைத்தது;
இதழ் விரித்து...
சிரித்திருக்கும்...
உன் முகம் தான் அதில்.....
முத்திரை...
குத்தப்பட்டிருந்தது.
***
அன்பு முத்தங்களுடன்
ஆரம்பமே
கிறங்கடித்து விட்டது;
முத்தங்களை நினைத்து...
இதழ்களை நாவால்
நனைத்து விட்டேன்.....!
***
ஒவ்வொரு
சொற்களிலும்
சொட்டு சொட்டாக
காதல் ரசம்!
ஒரு எழுத்து தவறாமல்
பார்த்து முடித்தேன்.
***
உன்னைப் போலவே
அழகான
முத்து முத்தான
எழுத்துக்கள்.
***
உன் முகத்திலிருக்கும்
மச்சத்தைப் போலவே..
வார்த்தைகளின்
முடிவுக் கருகில்
முற்றுப் புள்ளிகள்...
***
உன்
இதயம் தாங்கிய
இனிய பாச மடலின்
பாரம் தாளாமல்
மடல் பிடித்திருக்கும்
கைகள் தாழ்கின்றன!
***
துரித வேகத்தில் பதில்
எதிர் பார்த்த வண்ணம்
என்றும் அன்புடன்
என் முதலெழுத்து இணைந்த
கையெழுத்துடனே
முற்றுப் பெற்றது உன் மடல்.
***
வெகு விரைவில்
பதில் மடல் வரும்
அது வரையும்....
எதிர் பார்த்திரு....!

என். சஹாப்தீன்- ஓட்டமாவடி.

## நெஞ்சிலே ஒரு கோடு

விடை கொடு
காதலி..!
**
உன்னையே
பார்க்கிறேன்
என்-
கேள்வி புரிகிறதா
உனக்கு?
**
கறுப்பழகியே!
நான் படைக்கப்பட்ட
பின்
நீ
படைக்கப்பட்டாய்!
நாம்
படைப்பதில்லையா?
**
பூக்குழிக்காரியே!
குழந்தை போல
சிரி!
நான்
உருக வேண்டும்:
நமது
சந்திப்பு நிலையம்
நோக வேண்டும்!
**
நீ
கடற்கரையில்
குந்தியிருந்தால்,
உன் மடி
சிப்பி வங்கி!
இரவின்
நிலாப்பகுதியில்
என் தலையணை!
**
என்
ஒப்பாரித்தீவின்
உளறல் சத்தம்
கேட்குமா
உனக்கு....?
**
நீ
கடிதமே
எழுதுவதில்லையே!
**
உடைந்து
ஊத்துண்ண
இதயமிங்கு
மீதமில்லை:
உன்—
பேச்சுக்களை
எழுதிட
டயரி வாங்க
காசுமில்லை!

பொத்துவில்-பௌர்ணமி நிலா

## சுடலை வேண்டும்

சுடலை வேண்டும்
இறைவா...!
இப்பாருக்கோர்
சுடலை வேண்டும்!
–o–
வையகத்தில்,
வைத்தியமற்ற
பைத்தியங்கள்
மலிந்துவிட்டன!
–o–
சாதுக்கள் போர்வையில்
சாத்தான்கள் சங்கமம்!
அகிம்சைப் போர்வைக்குள்
அரக்கர்களின் உறைவிடம்!
–o–
கர்ப்பக்கிரகத்தில்
கள்வரின் உறைவிடம்!
கல்லறையில்
ஆயுதத்தின் தரிப்பிடம்!
–o–
கடவுளுக்கும்
சந்நிதியில்லை;
மாண்டவனுக்கும்
நிம்மதியில்லை!
–o–
மனிதம் மரணித்த
மனிதர்களின் ஜனனம்
மலிந்து விட்ட
'மா' நிலமிது!
–o–
இட்லர்களின்
இடியமின்களின்
இரும்புக் கரங்கள்
வையகத்தை வதைக்கின்றன!
–o–
பூமாதேவியும்
பொறுமையிழந்து
பூகம்பமாய்
வெடிக்கின்றாள்!
–o–
ஆனாலும்–வலுப்பெற்ற
வஞ்சிகரை
அழித்தொழிக்க
அவளாலும் முடியவில்லை!
–o–
சுந்தர பூமி எல்லாம்
சுடலையாய்–ஆனால்
அதர்மத்தை சுட்டெரிக்க
ஓர் சுடலையில்லை!
–o–
இறைவா! பாருக்கோர்
சுடலை வேண்டும்!
பாவிகளை சுட்டெரிக்க
பாருக்கோர்–சுடலை
வேண்டும்....!
–o–

கலாதிரு

## கார் வாங்க ஆசை!


ஸ்ருடியோவுக்கு வரும் கார்களை யெல்லாம் அவர் ஆர்வமாக கவனித்துக் கொண்டிருப்பார். தனக்கு தெரிந்த டிரைவர் களிடம் "இந்தக் கார் என்ன விலை? இதில் எது நல்ல கார்? எது ரொம்ப நாளைக்கு உழைக்கும்?" என்றெல்லாம் கேட்பார். அத்தோடு தானும் இப்படி ஒரு கார் வாங்க முடியுமா? என்று அவர்களிடம் கேட்பார்.

இப்படியெல்லாம் கேட்டவர் யார் தெரியுமா? இன்றைய தமிழ் படவுலக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தான். அது 'மாலை மதி'யில் வெளியான தகவல்.

திரைப்படத்துறையில் நுழைந்து பிரபலமாகத் தொடங்கிய காலத்தில் ரஜினிகாந்திடம் கார் இல்லை. ஸ்கூட்ட ரில்தான் சுற்று வார். அப்போதுதான் கார் வாங்கும் ஆசையில் இருந்தார் ரஜினி.

இப்போது ரஜினிகாந்த் நினைத்தால் தினம் ஒரு கார் வாங்கலாம்.

# ரஜனியின் முதல் காதல்!



"ரஜினிகாந்த் முதன் முதலாக ஒரு சிவந்த நடிகையைக் காதலித்தார். அந்த நடிகை ஒரு பெரிய மனிதரின் கட்டுப்பாட்டில் இருந்தார். ரஜினிக்காக அந்தப் பெரிய மனிதரை இழக்க நடிகை முன்வரவில்லை."

இது 'மாலை மதி' சஞ்சிகையில் ரஜினி பற்றிய தொடரில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்.


அந்த நடிகையின் பெயர் என்ன தெரியுமா? அதனை மாலைமதி குறிப்பிட வில்லை.

நடிகையின் பெயர் லதா! லதாவை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் எம்.ஜி.ஆர்.

லதாவை ரஜினி காதலித்த விடயம் எம்.ஜி.ஆர். காதுக்குப் போனது. அதனால் பல சிரமங்களைச் சந்தித்தார் ரஜினி.

லதாவின் போக்குப் பிடிக்காததால் தனது காதலை கைவிட்ட ரஜினி எம்.ஜி. ஆரையும் சந்தித்து சமரசமானார். அதன் பின்னர்தான் எம்.ஜி.ஆரைப் பாராட்டியும் பேசியிருந்தார் ரஜினி.

ரஜினியின் மனைவி லதாவும் நடிகை லதாவும் ஒன்றல்ல. ரஜினியின் மனைவி லதா நடிகர் ஒய்.ஜி.மகேந்திரனின் சகோதரி.



ரஜினி— மனைவி லதாவுடன்

## நீயில்லா நான்

நீயில்லாத இந்நாட்கள்
நிலவில்லாத அமாவாசையாய்
கனவுகளும் கற்பனைகளும்
எனக்கே சொந்தமாகி
எனக்குள் நானே
ஜனனித்து மரணிக்கின்றேன்.
•••
வாழ்வின் வசந்தத்தை
அனுபவிக்க முடியாமல்
அவஸ்தைப்பட்டு
அவதிப்படும்
ஆன்மாவுடன்
வாழ்கிறேன்.
•••
நீ
தொலை தூரத்தில்!
தொடர்பின்றி...
தொய்ந்து போன
உணர்வுகள்.
உனக்காகவே இன்னும்
உயிர்வாழ்கிறேன்!
•••
உன்
நினைவுகளின்
நெருடலில்
இமை வழுக்கி விழும்.
கண்ணீர்த்துளி
கன்னங்களில்
ஊர்வலம் நடத்தும்.
•••
வேதனையின்
விளிம்பினிலே
சந்திப்புகள்
சாத்தியமென்று...
வாழாமல்
வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்.

அகிலா ஜெகதீஸன்-வவுனியா.

## புதன் கிண்ணம்

## எட்டாத

உன்னை
தென்றல் காற்று
என்று
வர்ணித்தேன்;
அதனால்தான் என்னவோ
என்னை
தொட்டு விட்டு
தூரச்
சென்று விட்டாய்!
●○
உன்னை
என்
வண்ண நிலவே
என்று
வர்ணித்தேன்;
அதனால் தான்
இன்னும்
எட்டாத
தூரத்தில்
இருக்கிறாய்!

காவலூர் மனோ

## ஓ! பிரபஞ்சமே!

அழகான வெள்ளைக் கொடிகள்....
அதில் பறக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்!
திண்ணையிலே ஒரு கூட்டம்.
திறந்த வாய்களிலே இறந்தவனின் வரலாறு,
அறையினுள் அவனின் அவள்,
அவளைச்சுற்றி நாலைந்து பெண்கள்;
உரக்க ஒலித்திடும் அந்த ஒலங்கள்,
உறங்கியவனைக்கூட உசுப்பிப் போகும்
ஒப்பாரிகள்....!
♦♦♦
அழுது புரண்டவர்கள் சிலர்– அங்கே
அருமையாய் நடித்தவர்கள்தானே பலர்!
இறந்தவன் அழகாய் படுத்துறங்க....., பாவம்
இருந்தவர்கள் மட்டும் அலங்கோலமாய்
கிடந்தார்கள்.
♦♦♦
உலகம் பொய்யடா!
உறவும் பொய்யடா!
வாலிபம், வதனம், வசதிகள்...,
வாழ்வே இங்கு பொய்யடா!!!

நிட்டம்புவ- கலாயுவன்.

## திருக்கணித முறைப்படி.........

தாத்ரு வருடம் 13ம் திகதி சனிக்கிழமை பிற்பகல்4.51 க்குப் பிறக்கிறது. சூரியன் இதே நேரத்தில்தான் முதலாவது வீடான மேட இராசியில் பிரவேசிக்கிறான். அபரபட்ச ஏகாதசி திதியும் அவிட்ட நட்சத்திரம் 3ம் பாதமும் கூடிய சுபவேளை யில் புதுவருடம் பிறக்கிறது.

**விஷு புண்ணிய காலம்:–** பகல் 12.51 முதல் இரவு 8.51 வரை.

இக்காலத்தில் தலைக்கு ஆல் இலை யும் காலுக்கு இலவம் இலையும் வைத்து மருத்து நீர் தேய்த்து நீராட வேண்டும்.

**உடை:** நீலக்கரை அல்லது நீல வர்ண ஆடை.

**பொங்கலுக்குரிய காலம்:–** மாலை 4.51.

**கைவிசேஷம்:–** 13ம் திகதி இரவு 8.28 முதல் 10.04 வரை; 14ம் திகதி பகல் 10.14 முதல் 11.12 வரை.

## தாத்ரு வருடப்பிறப்பு

அறுபது வருடங்களைக் கொண்ட சுற்று வட்டத்தில் பத்தாவது ஆண்டான தாத்ரு வருடம், ஏப்ரல் மாதம் 13ம் திகதி பிறக்கிறது. இலங்கையில் திருக்கணித முறைப்படியும் வாக்கிய முறைப்படியும் இரு பஞ்சாங்கங் களைக் கொண்டே இந்து சமயத்துடன் தொடர்புடைய பண்டிகைகளுக்குரிய கால நேரங்கள் கணிக்கப்படுகின்றன.

## வாக்கிய பஞ்சாங்கப்படி.......

தாத்ரு வருடம் ஏப்ரல் 13ம் திகதி பிற்பகல் 2.25க்கு அவிட்ட நட்சத்திரத்தில் பிறக்கிறது.

**விஷு புண்ணிய காலம் :–** காலை 10.20 முதல் மாலை 6.25 வரை

இக்காலத்தில் தலையில் புங்கம் இலையும் காலில் ஆலிலையும் வைத்து நீராட வேண்டும்.

**உடை:–** கறுப்பு அல்லது பச்சை வர்ணக் கரை உடைய ஆடைகள்.

## தாத்ரு வருடத்துக்கான பாடல்

**தாத்துரவா மாண்டில் தராதலத்தோர் வாழ்ந்திருப்பர்**
**வேதனையுமில்லை விளைவுண்டு- சீத மழை பெய்யும் பரிவாரம் பேருடனே எந்நாளும் உய்யும் படி உலகிலுண்டு.**

இவ்வருடத்தில் போதுமான மழை பொழிந்து பயிர்வளர்ச்சி சிறப்புற்று வேதனைகள் நீங்கி மக்கள் சிறப்புற்று உய்ய வழி பிறக்கும் என்பது பொருள்.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 07.04.96 முதல் 13.04.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் பகை, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **புதன்**- வீண் அலைச்சல், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- காரிய சித்தி, கௌரவ மிகுதி. | காலை 7 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, சுபகாரிய நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- காரியத்தடை, மனச்சஞ்சலம். | காலை 6 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| **புதன்**- அந்நியர் நட்பு, பண விரயம். | பி.ப. 1 மணி |
| **வியாழன்**-வீண் பிரயாசம், செல்வாக்கு இழப்பு. | காலை 8 மணி |
| **வெள்ளி**- தொழில் கேடு, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| **சனி**- காரியானுகூலம், பொருள்வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| **திங்கள்**- உயர்ந்த எண்ணம், பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| **புதன்**- தொழில் மந்தம், பொருள் விரயம். | பகல் 12 மணி |
| **வியாழன்**- வீண் விரயம், அந்நியர் பகை. | மு.ப. 9 மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **சனி**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | காலை 6 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் நட்பு, பணவரவு. | மு.ப. 9 மணி |
| **புதன்**- தூர இடப்பணயம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| **வெள்ளி**- வரவுக்கு மிஞ்சியசெலவு, கடன்படல். | பகல் 12 மணி |
| **சனி**- முயற்சி தடை, வீண் கலக்கம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- பயனுள்ள செயல், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| **செவ்வாய்**- எதிர்பார்ப்பு நன்மை, பணவரவு. | பகல் 12 மணி |
| **புதன்**- பொருள் நஷ்டம், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**-கௌரவக் குறைவு, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | காலை 6 மணி |
| **சனி**- செலவு மிகுதி, அலைச்சல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், கேது, செவ்வாய். |
| மேடம் | - புதன். |
| இடபம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி. |

சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.
13.04.96 இல் மேடச் சூரியன்–தாத்ரு வருடப் பிறப்பு.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, ஆடம்பரச் செலவு. | காலை 7 மணி |
| **திங்கள்**- அந்நியர் சகவாசம், பிரயாச மிகுதி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் பகை, மனக்கலக்கம். | மு.ப. 9 மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், தேகசுக நன்மை. | பகல் 12 மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 8 மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | மு.ப. 9 மணி |
| **சனி**- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, துயர் நீங்கும். | மு.ப. 9 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| **புதன்** - புதிய முயற்சி, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| **வியாழன்**- வெளியிட பயணம், பிரயாச மிகுதி. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- காரியத் தடை, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| **சனி**- வீண் மனஸ்தாபம், முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- இன நன்மை, கௌரவ மிகுதி. | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை 7 மணி |
| **புதன்**- வீண் விரயம், கடன் படல் | பி.ப. 2 மணி |
| **வியாழன்**-மனக் கலக்கம், பிரயாசை மிகுதி. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| **செவ்வாய்**- காரியானுகூலம், பொருள் விரயம். | பி.ப. 2 மணி |
| **புதன்**- வீண் கலக்கம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| **வியாழன்**-பிரயாண கஷ்டம், மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, கௌரவம். | பகல் 1 மணி |
| **சனி**- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, கௌரவம். | காலை 6 மணி |
| **செவ்வாய்**- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், பிரயாச மிகுதி. | காலை 7 மணி |
| **வியாழன்**- அந்நியர் உதவி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- காரிய சித்தி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| **சனி**- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- கடன்படல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| **சனி**- வீண் அலைச்சல், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- செலவு மிகுதி, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- எதிர்பார்த்த நன்மை, தைரிய மிகுதி. | காலை 7 மணி |
| **புதன்**- தூரஇடப் பயணம், மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- காரிய சித்தி, பணவரவு. | காலை 6 மணி |
| **சனி**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6





# இரண்டு பூனைக்குட்டிகள்

இரண்டு பூனைக் குட்டிகள்
கையில் கிடைத்த உரொட்டியை
பாகம் பண்ணி எடுக்கவே
சண்டை செய்து கொண்டன.

குரங்கு ஒன்று வந்தது
குறையும் தீர்க்க நினைத்தது
தராசிலே உரொட்டியை
வைத்து நிறுக்கலானது.

நிறுக்கும் போது உரொட்டியை
கடித்துக் கடித்துத் தின்றது
சிறுகச் சிறுக உரொட்டியும்
குறைந்து முடிந்தும் போனது.

ஏமாந்த பூனைகள்
இரண்டும் சோகம் அடைந்தன
பேராசை கொண்டதால்
பெரிய துன்பம் வந்ததே!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

பணத்தினைப் பெருக்கு!
பாட்டினில் அன்புசெய்!
பிணத்தினைப் போற்றேல்!
பிழைக்கு இடங்கொடேல்!
புதியன விரும்பு! பூமி இழந்திடேல்!
பெரிதினும் பெரிது கேள்!
பேய்களுக்கு அஞ்சேல்!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கிணறு யாருக்கு?

வணிகர் ஒருவர் ஏராளமான சொத்துக்களை வைத்து விட்டு இறந்து போனார்.

அவருக்கு இரண்டு மகன்கள். இருவரும் வாலிபர்கள்.

தந்தையின் மறைவுக்குப் பின்னர் அத்தனை சொத்துக்களையும் இருவரும் சமமாகப் பங்கிட்டு எடுத்துக் கொண்டனர்.

ஆனால் கடைசியில் ஒரு வில்லங்கம் வரும் என்று இருவரும் எதிர்பார்க்கவில்லை.

அந்த வில்லங்கம் ஒரு கிணறு.

"நான் தான் மூத்தவன். கிணறை நானே வைத்துக் கொள்கிறேன். தம்பியாகிய நீ பொறுத்துக் கொள்," என்றான் அண்ணன்.

"நீ மூத்தவன் தான். ஆனால் இளையவனான எனக்கு இந்தக் கிணறை பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுக்கக் கூடாதா? உனக்கு இருக்கும் உரிமைதானே எனக்கும் இருக்கிறது!" என்றான் தம்பி.

நீ, நான் என்று வார்த்தைகள் தடிக்க, அந்தக் கிணறுக்காக சண்டையிடத் தொடங்கினர். சண்டை பல நாட்கள் தொடர்ந்தது.

சண்டையில் இந்தப் பிரச்சனை தீராது என்ற முடிவிற்கு இறுதியில் வந்த அவர்கள், பிரச்சனையை நீதிமன்றத்திற்குக் கொண்டு போய்த் தீர்த்துக் கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்தார்கள்.



ஒரு சட்டத்தரணியை ஏற்பாடு செய்து, கிணற்றுக்காக இருவரும் வாதாடினார்கள்.

வழக்கு பல மாதங்கள் நடந்தது. அதுவரை சட்டத்தரணியின் சம்பளம், போக்குவரத்துச்செலவு, சாப்பாடு, அப்படி, இப்படி என்று பணம் எக்கச்சக்கமாக செலவாகியது.

ஒருநாள் நீதிபதி, "அந்தக் கிணற்றை இருவரும் சரிசமமாகப் பிரித்துக் கொள்ள முடியாது. ஆகவே இதை இருவருக்கும் பொதுவாக வைத்து இருவருமே அதைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு தீர்ப்பளிக்கிறேன்," என்று தீர்ப்புக் கூறினார்.

'இந்தத் தீர்ப்பைக் கேட்கவா இத்தனை காலம் அலைந்து இத்தனை செலவழித்தோம். இது எங்களுக்குத் தெரியாதா?' என்று இருவரும் அங்கலாய்த்துக் கொண்டனர்.

இறுதியில் அவர்களுக்குத் தீர்ப்புச் சொன்ன நீதிபதி அவர்களிடம், "நீங்கள் இருவரும் சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையுடனும் செயற்பட்டிருந்தால், இப்பொழுது செலவான பணத்தைக் கொண்டு புதிதாக இன்னொரு கிணறு வெட்டியிருக்கலாம்," என்று புத்தி சொன்னார்.

சகோதரர்கள் இருவருக்கும் அப்பொழுது தான் தாம் செய்த தவறு விளங்கியது.

"ஐயா! தீர்ப்புச் சொன்னவுடன் உங்கள் வழியே செல்லாமல், எங்கள் இழப்பை எங்களுக்குச் சுட்டிக்காட்டி, எங்களுக்கு அறிவுரை சொல்கிறீர்களே. நன்றி ஐயா!" என்றான் அண்ணன்.

"இனி நாங்கள் உயிரோடு இருக்கும் வரை ஒற்றுமையுடனேயே வாழ்வோம். பணத்தை நாங்கள் இழந்தாலும், நாம் ஒற்றுமையாக வாழ வழி பிறந்துள்ளது." என்று மகிழ்ச்சியுடன் கூறினான் தம்பி.

"தம்பி சொல்வது முற்றிலும் சரியே." என்றான் அண்ணன்.

# வாரம் ஒரு நாடு

## மாலி



தலை நகர் - பமாகோ
பரப்பு - 12,40,192 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை - ஒரு கோடி
மொழி - ஃபிரெஞ்சு (அலுவல் மொழி) பம்பரா மற்றும் பிற ஆபிரிக்க மொழிகள்
எழுத்தறிவு - 25%
சமயம் - இஸ்லாம், பழங்குடியினர் மதம்
நாணயம் - ஃபிராங்க்
தனி நபர் வருமானம் - 270 டொலர்

**அமைவிடம்:-**

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு வளம் குறைந்த நாடு.

**வரலாறு:-**

ஃபிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்தது. 1960 இல் செனகலுடன் சேர்ந்து சுதந்திர நாடானது. அவ்வருடத்திலேயே செனகல் பிரிந்து தனிநாடானது. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**பொருளாதாரம்:-**

இயற்கை வளத்தில் ஏழ்மையுடையது இந்நாடு. 20 சதவீத நிலமே விவசாயத்திற்கு உகந்தது. அரிசி, சோளம், நிலக்கடலை ஆகியன முக்கிய விளைபொருட்கள். கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில், தோல் பதனிடுதல் மட்டுமே தொழிலாக நடைபெறுகிறது. ஆற்று நீர் மீன்பிடிப்பு வளர்ந்து வருகிறது. கருவாடு, பதனிடப் பட்ட மீன் ஆகியன முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்.

# பெர்சிவல் லோவெல்

**★ பெர்சிவல் லோவெல் என்பவர் யார்?**

அமெரிக்காவைச் சேர்ந்த வானியல் அறிஞர். இவர் செவ்வாய்க் கிரகத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்தினார். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த இவர், செவ்வாய்க் கிரகத்தில் கால்வாய்கள் உள்ளன என்ற முடிவுக்கு வந்தார்.

**★ அப்படியானால் செவ்வாய்க் கிரகத்தில் மக்கள் வசிக்கிறார்களா?**


அப்படித்தான் இவர் நம்பினார். செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும் கோடுகள் அங்குள்ள மக்கள் தோண்டியுள்ள கால்வாய்களின் அடையாளமே என்றார். ஜியோவினி சியாபெரலி என்ற இத்தாலிய விஞ்ஞானியும் இதே கருத்தை உடையவர்.

**★ இதுபற்றி மற்ற விஞ்ஞானிகளின் கருத்து என்ன?**

இந்த இருவரைத் தவிர மற்ற விஞ்ஞானிகள் செவ்வாய்க் கிரகத்தில் கால்வாய்கள் இருப்பதையும், மனிதர்கள் இருப்பதையும் பற்றி எதுவும் கூறவில்லை. அந்தக் கோடுகள் ஒளியியல் மாயைகள் என்று கூறினார்கள்.

**★ பெர்சிவல் லோவெல் வேறு ஏதேனும் கோள்கள் பற்றி ஆராய்ச்சி செய்தாரா?**

புளூட்டோ என்ற ஒரு கோள் இருப்பதை அவர் முன்பே சொன்னார். அதைப் பற்றிய ஆராய்ச்சியில் அவர்



ஈடுபட்டபோதும் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

**★ பின்னர் புளூட்டோவைக் கண்டு பிடித்தது யார்?**

லோவெல் இறந்த பின் நிறைய விஞ்ஞானிகள் இது பற்றி ஆராய்ந்தார்கள். ஆயினும் 1930ம் ஆண்டு கிளைட் டொம்போக் என்ற விஞ்ஞானியே புளூட்டோவைக் கண்டு பிடித்தார்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.04.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 136
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 134

**பரிசுக்குரியவர்:**
செல்வன். முகமட் நிஸ்வர்.
கல்பிட்டி வீதி, எத்தலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். ஆர். அன்ரூ. புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. | அருணாசலம் சுதர்சனி. பனான தமிழ் வித்தியாலயம், மாதெனிய, வரகாபொல. |
| Fபின்டன் கோஸ்தா. ஹெரோ சர்வதேச பாடசாலை. | தாமோதரம் பிரதீபன். கமு/ கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |
| பி. மபாஸா. இல-19 மாருக்கொன கொலனி, உக்குவலை. | ஏ.சி. முகமட் ரிஸ்வான். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| செல்வி. ஹேதுர்ஷி சந்திரகுமார். புளும் பீல்ட் தமிழ் வித்தியாலயம், மஸ்கெலியா. | எல். ரஜிவ். இ/ பரி யோவான் த.ம.வி. இறக்குவானை. |
| எம். எம். மில்ஹான். அல்/ அஸ்கா பாடசாலை, ஹேனமுல்லை, பாணந்துறை. | செல்வி. என். ஸ்ரீ வீணா. கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி. |

## சொல் அமுதம்

| மிருகங்கள் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| புலி- | ஒருத்தல் | பிணா |
| நரி- | ஓரி | பாட்டி. |
| மாடு- | எருது | பசு |
| ஆடு- | கடா | மறி |
| நாய்- | கடுவன் | பெட்டை |
| பூனை - | கடுவன் | பெட்டை |
| எருமை- | ஏறு | ஆண் |
| குதிரை- | மா | பெட்டை |
| மான்- | கலை | பிணை |
| யானை- | களிறு | பிடி |

காரைதீவு- எஸ். நாகராஜன்.

## ஒரு வரிச் செய்தி

- ★ அப்பிள்களில் மட்டும் 10,000 வகைகள் உள்ளன.
- ★ தேரையின் ஆயுட்காலம் 35 ஆண்டுகள் ஆகும்.
- ★ டென்மார்க்கின் தேசிய பறவை வானம்பாடி ஆகும்.
- ★ தக்காளி முதன் முதலில் அயர்லாந்தில் தான் பயிரிடப்பட்டது.
- ★ ஆல்பட்றாஸ் பறவை பறக்கும் போதே தூங்கும்.
- ★ நமது உடலில் உள்ள சுரப்பிகளில் மிகப் பெரியது கல்லீரல் ஆகும்.
- ★ பெண் மூட்டைப் பூச்சி இரை இல்லாமல் 1 1/2 வருடம் உயிர் வாழும்.
- ★ நமது மூளை 10,000 விதமான நறுமணங்களை நினைவு படுத்தக் கூடியது.

# (வாலில்லாக் குரங்கு) சிம்பன்ஸி



சிம்பன்ஸிக் குரங்குகள் பூமத்திய ரேகை செல்லும் மழைக்காடுகளிலும், மத்திய ஆபிரிக்கக் காடுகளிலும் வசிக்கின்றன. இந்தக் குரங்குகள் மூன்றரை அடி முதல் ஐந்து அடி உயரம் வரை வளரும். இதன் எடை 41 முதல் 50 கிலோ வரை இருக்கும்.



சிம்பன்ஸி குரங்குகளுக்கு வால் கிடையாது. பெரிய காதுகள் உண்டு. பின்னங்கால்களை விட அதன் முன் கால்கள் நீளமாக இருக்கும். முன்கால்களைச் சில சமயம் கைகளைப் போல் பயன்படுத்திக் கொள்ளும். அதன் கால்களில் உள்ள விரல்கள் பெருவிரல்களைப்போல இருக்கும்.

பழங்கள், பருப்புகள், இலைகள், தண்டுகள் இவற்றின் முக்கிய உணவு. சில கரையான், பூச்சி, பறவை முட்டைகள், மீன் போன்றவற்றையும் சாப்பிடும்.



காட்டில் வசிக்கும் சிம்பன்ஸிக் குரங்குகளின் வாழ்நாள் 30 முதல் 38 ஆண்டுகள். மிருகக்காட்சி சாலைகளில் வசிப்பவை 40 முதல் 60 ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

சிம்பன்ஸிக் குரங்குகளை நன்கு பழக்க முடியும். அவற்றை மனிதர்கள் போல் பேசவைக்க முடியும் என்றும் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் கண்டறிந்துள்ளனர். அழுகை, சிரிப்பு, கோபம் போன்ற உணர்ச்சிகளையும் முகபாவத்தில் இவை காட்டும்.

# திகில் 8

# நீ! நீயா!

இன்ஸ்பெக்டர் வேதநாயகத்தின் அனுமதியின் பேரில் அந்தப் பூட்டு உடைக்கப்பட்டது. உள்ளே போனவருக்கு வியப்பு வந்தது.

என்ன இது? ஒரு குடும்பமிருந்த வீடாஇது? யாரோ திருட்டுக்காதலர்கள் தங்குவதற்கு எடுக்கப்பட்ட இடமாகத்தான் தெரிகிறது.

ஒரேயொரு பாயும் நாலைந்து தலையணைகளும், சுற்றிலும் உலர்ந்து சருகாகிப் போன பூக்கள், ஒரு பானையில் நாலு நாளைய தண்ணீர், பாத்ரூமில் ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டும், ஒரு தட்டுமிருந்தனவே தவிர-

மற்றபடி ஒரு நாற்காலிகூட இல்லை. கெரசின் அடுப்பு கூட காணவில்லை. உடைகள், இரண்டு பெரிய அளவு துவாலைகள் மட்டுமேயிருந்தன. தரையில் பறந்து அல்லாடும் கவரில் அசைவ ஹோட்டல் முத்திரை தரமான சுவையான உணவுக்கு உத்திரவாத அழைப்பு விடுத்தது.

ஷெல்ப்புகள், தலையணைக்குக் கீழே என்றெல்லாம் நிறைய தேடினார்.

ஏதாவது கடிதம்-டையரி-குறைந்தபட்சம் போட்டோ படமாவது கிடைக்கும் என்ற அவர் முயற்சி தோற்றது.

உருப்படியாக எந்தத் தகவலுமில்லை,

அந்த ஆண் யார்? தெரியவில்லை. அவன் மனைவியாக (மனைவி தானா?) நடமாடிய பெண் யார்?

அடையாளம் காட்ட ஒரு தடயம் கூடவா இருக்காது?

அந்த ஆண் இப்போது எங்கே இருக்கிறான்? என்ன செய்கிறான்? (இருக்கிறானா?)

அந்தப் பெண் யார்? என்ன அவள் பெயர்? அவளுமிப்போது எங்கே இருக்கிறாள்?

இப்படியுமா இருப்பார்கள்?
திரும்பினார் தோல்வியுடன்.

★ ★ ★



"என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா பாஸ்? நாம தேடக் கிளம்பிய மூன்று பேரும் நமக்கு முன்னால் ஆபீஸில் வந்து நமக்காகக் காத்திருக்கிறார்கள். நல்ல வேடிக்கையில்லே?"

"வேடிக்கையில்லே வேதனை. இப்ப நாம யாருக்காக ஆராயப் போகிறோம்? தன்னோட வைர நெக்லஸைத் திருடினவங்கன்னு அந்த ஜோதி சொன்ன இவர்களை ஆராயப் போகிறோமா? இல்லே இவங்க ஆதரவு தேடி வந்ததற்காக இவங்களுக்கு உதவப்போகிறோமா? இப்ப நம்ம நிலை என்ன ஜேன்னி டியர்?"

"உன் பேர் ராம் தானே?"

"ஆமாம் மேடம்!"

"நீ மட்டும் தான் பேசிட்டிருக்கிறே தவிர இவங்க ரெண்டு பேரும் வாயே திறக்கமாட்டேங்கறாங்களே ஏன்?"

"இந்த வரதராஜன் செத்துப் பிழைச்சவன். அந்தப் பயம் இன்னமும் போகல்ல, இந்த சாலமன் பேசாத வரை க்ஷேமம்.."

"ஏன்?"

"வாயைத் திறந்தா இங்கிலீஷ்லே எத்தனை ஆபாசவார்த்தைகள் உண்டோ அத்தனையும் வெளிவரும். என்னடா சாலமன்?"

"ஃபக் அஃப் மேன்."

"நீ சொன்னது உண்மை. ராம் நீ மட்டும் பேசு."

"சார்," வரதராஜன் கேட்டான். "மறுபடியும் மரண ஓலை அனுப்பியிருக்கிறாங்களே. நிஜமாகவே ஏதும் கொலை பண்ணிடுவாங்களோன்னு பயமாயிருக்கு சார்! என் பாதுகாப்புக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணுங்களேன்."

"செய்யலாமே!" ஜென்னி சொன்னாள். "இந்த மாதிரி உருவத்தோட நீ நடமாட முடியாது."

"நான் வேணுமானால் பாடி கார்டாக போகிறேனே ராஜா."

"இல்லை திருக்குமரன்! அது சரிப்படாது. எங்கோ மறைந்து நின்னு சுட்டால் அதை எப்படி உன்னால் தடுக்க முடியும்?"

"அப்ப என்ன தான் செய்யலாம்?"

"அந்தக் கொலை காரனுக்கே இவனை அடையாளம் தெரியக்கூடாது. அப்படி மாத்திடணும்."

"அதுக்கு நான் என்ன செய்யட்டும்?"

"இரண்டு வழக்குகளையும் சேர்த்தே தான் எடுத்து நடத்தப் போகிறோம்."

"என்னது? அதெப்படி?"

"பாஸ்! ஏன் வீணாக் குழப்பறீங்க? அந்த ஜோதி கொடுத்த வழக்கு அவளோட வைர நகையைக் கண்டு பிடிச்சு தரணும்னு தானே தவிர, இவங்களைக் குற்றம் சொல்லல்லே. இங்க வழக்கிலேயும் இவங்களுக்கு பாதுகாப்பு கேட்கிறாங்களே தவிர அந்த வைர நகையை நாங்க திருடல்ல அதை நிரூபிச்சு காட்டுங்கன்னா சொன்னாங்க? இல்லையே. பாஸ் அது வேற வழக்கு. இரண்டையும் போட்டுக் குழப்பாதீங்க."

"சரி எதுக்கும் கேட்டுடுவோம். பசங்களா! சத்தியமாகச் சொல்லுங்க. நேற்று அவளைக் காரில் கூட்டிட்டுப் போகிறச்ச அவள் பையை ஆராய்ந்தீங்களா?"

"இல்லே சார். இல்லவேயில்லே."

"நம்பும்படியாகத்தான் பாஸ் இருக்கு. நம்புவோமே!" ஜென்னி கேட்டாள்- "நேற்று பார்ட்டியில வேற யாராவது அந்த ஜோதியை நெருங்கி வந்து பேசினாங்களா?"

"நிறையப் பேர் நெருங்கினாங்க பேசினாங்க. குடிச்சாங்க."

"நீ ஒண்ணும் செய்யாம வெறுமே இரு. வரதராஜா! செய்ய வேண்டியதை நாங்க செய்துக்கறோம். குறிப்பாக நான்" என்ற ஜென்னி தொலை பேசியைத் திருகினாள். பதிலுக்காகக் காத்திருந்தவள்-நிமிர்ந்தாள்.

"மன்னிக்கணும் சார். உங்க வீட்டு மாடியில இருக்காரே மேக்கப் ஜாக்கப். கொஞ்சம் கூப்பிடமுடியுமா ப்ளீஸ்...?"

(அந்த ஜாக்கப் வருகிற வரை ஒரு கதை சொல்லட்டுமா? ஓர் ஆளுக்கு கன்னடத்தில ஒரு லெட்டர் வந்தது. படிக்கத் தெரியாத பாஷையானதினால் அதை எடுத்து கன்னடம் தெரிந்த பாதிரியார் கிட்ட போனான். படித்த அவர் 'சேசுவே' என்று இவனை விலக்கிவிட்டு ஜபம் செய்ய ஆரம்பித்தார். கன்னட சினேகிதன் கிட்ட காட்டினப்ப அவன், அவசரமாக கடிதத்தை இவன் கையில் திணித்துத் திரும்பிப் பார்க்காம ஓடிவிட்டான். கன்னடம் படிக்கத் தெரிந்த பெண்ணிடம் அதைக் காட்டிப் படிக்கச் சொன்னப்ப காலிலிருக்கிறதைக் க்ழட்டி-

மன்னிக்கவும். ஜாக்கப் லைனில் வந்துவிட்டார்)

"ஜாக்கப் ஜென்னி பேசறேன்."

"சொல்லுங்கம்மா."

"அவசரமா கிழவன் வேஷத்துக்கு வேண்டியதெல்லாம் எடுத்துகிட்டு ஆபீஸுக்கு வா. விலாசம் தெரியுமில்லே. 17, காக்காத்தாள் தெரு..."

"தி.நகர்தானே? வரேன். எதுக்கும்மா? கிழவன் வேஷ மேக்கப்? ஏதும் படம் எடுக்கப் போறீங்களா?"

"உலகமெனும் நாடக மேடையில் நடிக்கப்போகிறோம். நொய் நொய்யின்னு கேள்வி கேட்காம உடனே கிளம்பி வருகிற வழியைப்பாரு ஜாக்கப். பணம் நிச்சயம் கிடைக்கும். அப்புறமென்ன?"

"இதோ பத்தே நிமிஷத்திலே வரேன். என்ன வயசு கிழவன்?"

"எழுவது வயசானா பரவாயில்லே. வருகிறாய் தானே?"

"இதோ கிளம்பிட்டேன்."

"எதுக்கு மேடம் கிழவன் வேஷம் போடப் போறீங்க நீங்க?"

திக்கென்று நிமிர்ந்தாள் "நானா? முட்டாள். நீ தான் அப்படி மாறப் போறே. அந்த வேஷத்திலேயே ஒரு ஹோட்டல் ரூமில் ரகசியமாகத் தங்கப் போறே, வேற பெயர்ல."

"சரி."

"இப்பவே வீட்டுக்கு போன் செய்து அவசரமா கோவா போறேன். வர ஒரு வாரம் பத்து நாளாகும்னு சொல்லிடு. கூடவே யாராவது தேடி வந்தாலோ போன் பண்ணினாலோ ராஜா துப்பறியும் பாக்டரிக்கு தகவல் தரச்சொல்லிடு."

"சரி."

"போன் எல்லாம் வேணாம். நான் சொன்ன மாதிரி எழுதி நம்ம ஜேம்ஸ் பாண்ட் பையன் கிட்ட கொடுத்தனுப்பு."

"கொலைகாரனோ-காரியோ உங்க வீட்டுக்கு போன் செய்து நீ இருக்கிற இடம் தெரியாம தவிப்பாங்க. ஏமாந்து போயிடுவாங்க. எப்படி என் யோசனை?"

"மேடம்! எங்களுக்கு தலையில் மட்டும் தான் மூளை உங்களுக்கு உடம்பு பூராவுமே மூளை! வாவ்! வாவ்! தீர்ந்தது பிரச்சினை."

"இரு. இரு. அதுக்குள்ளே பூரிச்சுப் போயிடாதே. நம்முடைய பக்கமா சதுரங்கக் காயை நகர்த்தியிருக்கோம். அடுத்த மூவ் எதிராளியோடது. அவன் என்ன பண்ணப் போகிறான் என்கிறதை பொறுத்திருந்துதான் பார்க்கணும். எப்பவும் எதிரியை தாழ்வாக எடைபோட்டு விடக்கூடாது."

➔ ✚ ☆

**போ**லீஸ் கமிஷனர் முகம் சிவந்து போயிருந்தது. நிமிர்ந்த நிலையில் கையை அசைத்தும் ஆட்டியும் கத்தினார்.



## திகில்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

"எத்தனை நாள்? இன்னும் எத்தனை நாள் தான் பிணங்களை சவக்கிடங்கில போட்டு வைக்கப் போறீங்க?"

"முயற்சி செய்துகிட்டு தானிருக்கேன் சார்."

"என்ன பிரயோஜனம்? இன்னும் கிளம்பின இடத்திலேயே தான் இருக்கீங்க. ஐ.ஜி.யானா, கேள்வி மேலே கேள்வி கேட்கிறார். நம்மால் முடியல்லேனா சொல்லணுமாம். அவர் சிபிஐக்கு மாத்திடறேங்கறார். இது தேவை தானா?"

"நுனி கிடைச்சிட்டதாகத்தான் நினைக்கிறேன் சார். நேற்று மறுபடி அந்த வீட்டை ஆராயப் போனப்ப இது கிடைச்சுது." என்று அவர் நீட்டியது-

"ஒயின்ஷாப் ரசீது ஒன்று. போன வாரம் ஒரு பாட்டில் ஸ்காட்ச் வாங்கியிருக்கான் அவன்."

"என்ன பண்ணப் போறீங்க?"

"அந்த ஒயின் ஷாப் ஆளை விசாரிக்கப் போகிறேன் சார்."

"உருப்படியான யோசனையாத் தெரியல்ல. யூ.ஸீ. ஒயின் ஷாப்பில் ஆயிரக்கணக்கான பேர் வாங்குவாங்க. அத்தனை பேரின் முகங்களையும் கவனம் வைச்சிருக்கிறது அந்த ஒயின் ஷாப் ஆளால முடியக்கூடிய காரியமாகத் தோணல்ல."

➧ ➞ ➳ ❦

**ஒ**யின் ஷாப் ஆள் இன்ஸ்பெக்டர் வரவுக்கு பயந்து படித்துக் கொண்டிருந்த மாத நாவலை மூடிவிட்டு எழுந்தான்.

"இந்த பில் உங்க கடையோடது தானே?"

"ஆமாம் சார்."

"இந்த ஆளை அடையாளம் சொல்ல முடியுமா? ஞாபகமிருக்கா?"

"மறக்க முடியுமா சார்? இவ்வளவு விலையுயர்ந்த ஸ்காட்சை வாங்கிறவனாச்சே. அதுவும் அடிக்கடி. குறிப்பாக இந்த சீட்டு பார்த்ததும் உறுதியாக சொல்றேன்னா.. எல்லாமே நூறு ரூபாய் நோட்டுகளா கொடுத்தான் சார்! சில்லரை மூணு ரூபாய் கொடுங்க. இருபது ரூபாய் நோட்டு தரேன்னேன்.

அவன் கிட்ட சில்லரை இல்லாததினால மோட்டார் பைக்மேலே உட்கார்ந்திருந்த பெண் கிட்ட கேட்டான். பணம் வாங்குகிற சாக்கில நானும் பக்கத்தில போய் அந்தப் பெண்ணையும் பார்த்தேன். மோபைக் நம்பரையும் பார்த்தேன்."

"என்ன நம்பர்?" என்று கேட்டதும்-

கச்சிதமாக எண்ணைச் சொல்லி விட்டான்.

இன்ஸ்பெக்டர் வேதநாயகத்துக்கு நம்பிக்கை துளிர் விட்டது. அந்தப் பிணங்களின் புகைப்படங்களைக் காட்டினார். "அடையாளம் தெரிகிறதா?"

"மன்னிக்கணும் சார்! போட்டோ தெளிவா இல்லே! அதனால் கண்டு பிடிக்க முடியல்ல. திணறலாக இருக்கு."

"கொஞ்சம் என்னோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கு வரை வருகிறாயா?"

"கடையை பார்த்துக்க ஆளில்லையே சார்! ஒரு மணியிலேர்ந்து மூணு மணி வரை சாப்பாட்டு ஓய்வு நேரம். அப்ப வேணுமானால் வருகிறேன்."

"சரி."

ஒரு மணிக்கு சரியாக வந்து விட்டார் வேதநாயகம். "இப்ப போகலாமா?"

"ஷ்யூர் சார். ஒரு நிமிஷம். பூட்டிட்டு வரேன்."

அரசு மருத்துவமனையில் - சவக் கிடங்கில் - துணியை உயர்த்தி முகத்தைக் காட்டியதும் சொல்லிவிட்டான் அந்த ஒயின்ஷாப் ஆள். "இவன் தான். இவனே தான்."

"நிச்சயமா தெரியுமா?"

"சர்வ நிச்சயமா தெரியும் சார். வழக்கமா வருகிற கிராக்கிதான். ஒரு தடவை ஒரு முழு பாட்டில் பிராந்தி வாங்கிட்டு மறுநாள் பணம் தருகிறதாக சொல்லிட்டுப் போனவன் திரும்பவேயில்லேன்னு வீடு தேடிப் போய் பணத்தை வாங்கி இருக்கேன்."

"எந்த வீடு? சொல்லு பார்க்கலாம்?" என்றவர் அவன் சொன்ன வீடு பொருத்தமாக இருக்கவே நம்பினார். "இந்தப் பெண் அவனோட வந்த பெண்ணா? என்று இன்னொரு பிணத்தைத் திறந்து காட்டினார்.

"ஸாரி. சார். ஒரே தடவை பார்த்த பெண். அதை வைச்சு இதை அடையாளம் காட்டறது சிரமம்."

"சரி. ரொம்பவும் வந்தனம். நீ போகலாம்."

➳ ★ ✡ ⇨

"**ஹ**லோ." தொலைபேசியில் கேட்டார். "ஆர்.டி.ஓ. ஆபீசா?"

"ஆமாம் சார். நீங்க யாரு,"

இவர் தன்னை அடையாளம் காட்டியதும் எதிர் குரலில் பணிவு வந்தது. "என்ன சார் உதவி செய்யட்டும்?"


நம்பரைச் சொன்னார். "இந்த நம்பர் மோ-பைக் யாருடையதுன்னு அவசரமாகத் தெரியணும்." பதிலுக்காக காத்திருந்தவர்-

அவர் சொன்ன பதிலுக்கு அதிர்ந்தே போனார்.


"அவரா?" என்றார் வியப்பாக.

**(தொடர்ந்து வரும்)**


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: கே. சிவபாலன்.
வயது: 18
முகவரி: 57/5, கெய்சர் வீதி, கொழும்பு .11
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, புத்தகம்.



பெயர்: எம். ரகுமான்.
வயது: 19
முகவரி: ஏ/ஜி/1, என்.எச்.எஸ். தொடர்மாடி, டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 9.
பொழுது போக்கு: ரி.வி. பாடல்கள், புத்தகம்.




பெயர்: கே. வரன்.
வயது: 24
முகவரி: WALDSTATTAR STR-9 6003 LUZERN, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: வி. கல்யாணி.
வயது: 19
முகவரி: பிட்டரட்மலே எஸ்டேட், ஹப்புத்தளை.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: எஸ். ஜஃபர்.
வயது: 23
முகவரி: 339, ஒஸ்மன் ரோட், சாய்ந்தமருது-02, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: எம். ரம்ஜான்.
வயது: 23
முகவரி: P.O.BOX-41499 CODE NO- 85855, JALEEB AL-SHOYOUKH. KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எஸ்.முகமட் சாஜகான்.
வயது: 18
முகவரி: தம்புள்ள வீதி, கலேவல.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். ரியால்தீன்.
வயது: 25
முகவரி: 105, நாச்சியாதீவு, அனுராதபுரம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: பி. கந்தசாமி.
வயது: 31
முகவரி: VIA DEL GOMITO- N0-02, 40127 BOLOGNA, ITALY.
பொழுது போக்கு: தொலைக்காட்சி.

பெயர்: ஜே. டேவிட்.
வயது: 25
முகவரி: சொறிக்கல்முனை, சம்மாந்துறை.
பொழுது போக்கு: வானொலி, உதைப்பந்து.

பெயர்: எம். கனகரட்னம்.
வயது: 23
முகவரி: லெஜர் வத்தை பிரிவு-2, நாரங்கல்ல.
பொழுது போக்கு: கிரிக்கெட்.

பெயர்: எம். சனீம்.
வயது: 27
முகவரி: P.O.BOX 17900, JEDDAH 21494, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்.

# தாய்

71

மேகக் கூட்டங்கள் ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கடுக்காய்ச் சேர்ந்து கறுத்த பெருந்திரளாகக் கூடி, பெருகின. எங்கும் அமைதியும் அசமந்தமும் ஆயாசமும் நிறைந்து, வாழ்க்கையே எதற்காகவோ காத்துக் கிடப்பது போலத்தோன்றிது.

திடீரென ஒரு குதிரைப் பொலிஸ் ஸார்ஜெண்ட் அந்தப் புல்வெளி வழியாக கிராமச்சாவடியின் முகப்புக்கு வேகமாகக் குதிரையை ஓட்டிக்கொண்டு வந்து நின்றான். அவன் சாட்டையைக் காற்றில் வீசிச் சுழற்றியவாறே அந்த முஜீக்கை நோக்கிச் சத்தமிட்டான். அவனது கூச்சல் ஜன்னலில் மோதித் துடித்தது. எனினும் வார்த்தைகளைக் கேட்க முடியவில்லை. அந்த முஜீக் துள்ளியெழுந்து எங்கோ தூரத்தில் கையைச் சுட்டிக் காட்டினான். ஸார்ஜெண்ட் குதிரையை விட்டுத்தாவிக் குதித்து, கடிவாள லகானை அந்த முஜீகின் கையில் ஒப்படைத்துவிட்டு, படிகளை நோக்கித் தடுமாறிச் சென்று அங்கிருந்த கம்பியைப் பற்றிப் பிடித்தவாறு, மிகுந்த சிரமத்துடன் மேலேறி உள்ளே சென்று மறைந்தான்.

மீண்டும் எங்கும் அமைதி நிலவியது. குதிரை தன் குளம்பால் தரையை இருமுறை உதைத்துக் கிளறியது. அறைக்குள் ஒரு யுவதி வந்தாள். அவள் தனது மஞ்சள் நிறமான கேசத்தைச் சிறு பின்னலாகப் போட்டிருந்தாள். அவளது உருண்ட முகத்தில் இங்கிதம் நிறைந்த கண்கள் பளிச்சிட்டன. உணவுப்பொருள்களைக் கொண்ட தட்டை எடுத்துச் செல்லும்போது, உதட்டைக் கடித்துத் தலையை ஆட்டினாள்.

"வணக்கம்! கண்ணே!" என்றாள் தாய்.

"வ்ணக்கம்!"

அவள் அந்தத் தின்பண்டங்களையும், தேநீர்ச் சாமான்களையும் மேஜை மீது வைத்துவிட்டு, திடீரென்று பரபரக்கும் குரலில் சொன்னள்:

"அவர்கள் இப்பொதுதான் ஒரு கொள்ளைக்காரனைப் பிடித்தார்கள். அவனை இங்கு கொண்டு வருகிறார்கள்!"

"யார் அந்தக் கொள்ளையன்?"

"எனக்குத் தெரியாது..."

"அவன் என்ன பண்ணினான்?"

"அதுவும் தெரியாது" என்றாள் அந்த யுவதி; "அவனைப் பிடித்து விட்டார்கள் என்பதை மட்டும் தான் கேள்விப்பட்டேன். இந்தக் கிராமச் சாவடிக் காவலாளி பொலிஸ் தலைவனை அழைக்கப் போயிருக்கிறான்."

தாய் ஜன்னல் வழியாகப் பார்த்தாள். அந்தச் சதுக்கத்தில் முஜீக்குகள் குழுமிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் அமைதியாகவும் மெதுவாகவும் வந்தார்கள்; சிலர் அவசர அவசரமாகத் தங்களது கம்பளிக் கோட்டின் பொத்தான்களை அரைகுறையாக மாட்டிக் கொண்டே ஓடிவந்தார்கள். அந்தச் சாவடி முகப்பில் கூடி நின்று இடது புறத்தில் எங்கோ ஒரு திசையை ஏறிட்டு நோக்கினார்கள்.

அந்தப் பெண்ணும் ஜன்னல் வழியாய்ப் பார்த்தாள். பிறகு கதவை பலமான சத்தத்துடன் மூடிவிட்டு அங்கிருந்து வெளியே ஓடிச் சென்றாள். அச்சத்தம் கேட்டு தாய் நடுங்கினாள். தனது டிரெங்குப் பெட்டியை பெஞ்சுக்கடியில் இன்னும் உள்ளே தள்ளிவைத்தாள். பிறகு அவள் தலைமீது ஒரு துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு ஓடிச்செல்ல வேண்டும் என்ற காரண காரியம் தெரியாத ஆவலை உள்ளடக்கிக்கொண்டு, வாசல் பக்கமாக விரைந்து வந்தாள்.

அவள் அந்தக் கட்டிட முகப்புக்கு வந்தவுடன், அவளது கண்களும் மார்பும் குளிர்ந்து விறைப்பதுப் போலிருந்தன. அவளுக்கு மூச்சு விடவே திணறியது. கால்கள் கல்லைப்போல உயிரிழந்து நின்றன. அந்தச் சதுக்கத்தின் வழியாக ரீபின் வந்தான். அவனது கைகள் கட்டப்பட்டிருந்தன, அவனுக்கு இருபுறத்திலும் தங்கள் கைகளிலுள்ள தடிகளால் தரையில் தட்டிக்கொண்டு இரண்டு பொலிஸ்காரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஜனக்கூட்டம் அமைதியோடு வாய்பேசாமல் அந்தக் கட்டிட முகப்பிலேயே காத்து நின்றது.

திக்பிரமை அடித்துத் திகைத்து நின்ற தாயால், தன் கண்களை அந்தக் காட்சியிலிருந்து அகற்றவே முடியவில்லை. ரீபின் ஏதோ சொல்லிக்கொண்டு வந்தான். அவனது குரலை அவள் கேட்டாள். என்றாலும் சூனிய இருள் படர்ந்த அவளது இதயத்தில் அந்த வார்த்தைகள் எந்த எதிரொலியையும் எழுப்பவில்லை.

அவள் ஆழ்ந்த பெரு மூச்செடுத்துத் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். நீலக் கண்களும் அகன்ற அழகிய தாடியும் கொண்ட ஒரு முஜீக் முகப்பு வாசலில் நின்ற வாறே அவளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு நின்றான். அவள் இருமினாள். பயத்தால் பலமிழந்த கைகளால் தொண்டையைத் தடவிக் கொடுத்துக் கொண்டாள்.

"என்ன நடந்தது?" என்று அவனிடம் சிரமப்பட்டுக் கேட்டாள்.

"நீங்களே பாருங்கள்" என்று பதிலளித்து விட்டு அவன் மறுபுறம் திரும்பிக் கொண்டான். மற்றொரு முஜீக் அங்கு வந்து அவளருகே நின்றான்.

ரீபினை அழைத்துக் கொண்டு வந்த பொலிஸ்காரர்கள் ஜனக் கூட்டத்தின் முன்னால் நின்றார்கள். ஜனங்கள் ஆரவாரமே இல்லாமல் நின்றாலும் கூட, வரவர ஜனக் கூட்டம் பெருகிக்கொண்டிருந்தது. திடிரென்று ரீபின் குரல் அவர்களது தலைக்கு மேலாக எழுந்து ஒலித்தது:

"உண்மை விசுவாசிகளே! விவசாயிகளான நமது வாழ்க்கையின் உண்மையையெல்லாம் எடுத்துக்காட்டும் பிரசுரங்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சரி, அந்தப் புத்தகங்களுக்காகத் தான் நான் கைதானேன். அந்தப் புத்தகங்களை மக்களிடம் விநியோகித்தவர்களில் நானும் ஒருவன்!"

ஜனக்கூட்டம் ரீபினை நெருங்கிச் சுற்றிச் சூழ்ந்தது. அவனது குரல் அமைதியும் நிதானமும் பெற்று விளங்கியது. அதைக் கண்டு தாய் தைரியம் அடைந்தாள்.

"கேட்டீர்களா?" என்று இரண்டாவதாக வந்த முஜீக், அந்த நீலக்கண் முஜீக்கை லேசாக இடித்துக் கொண்டே சொன்னான். அவன் பதிலே கூறாமல் தன் தலையை மட்டும் உயர்த்தி, தாயை மீண்டும் ஒரு முறை பார்த்தான். இரண்டாவது வந்தவனும் அவளைப் பார்த்தான். இரண்டாமவன் முன் முஜீக்கைக் காட்டிலும் வயதில் சிறியவன்; புள்ளிவிழுந்த ஒடுங்கிய முகமும், சுருட்டையான கூரிய தாடியும் கொண்டவன். பிறகு அவர்கள் இருவரும் சாவடி முகப்பிலிருந்து ஒரு புறமாக ஒதுங்கினார்கள்.

"அவர்கள் பயந்து போயிருக்கிறார்கள்" என்று நினைத்துக் கொண்டாள் தாய்.

அவள் மிகுந்த கவனத்தோடு இருந்தாள். அந்த முகப்பு வாசலில் அவள் நின்ற இடத்திலிருந்தே மிகயீல் இவானவிச்சின் கரிய தங்கிப்போன முகத்தைப் பார்க்க முடியும் அவனது கண்களில் இருந்த பிரகாசத்தையும் அவள் காண முடியும். என்றாலும் அவனும் அவளைப் பாாக்க வேண்டும் என்று விரும்பியதால், அவள் தன் முன் கால்விரல்களை ஊன்றி கழுத்தை நீட்டிப் பார்த்தாள்.

மக்கள் முகஞ் சுழித்து, அவநம்பிக்கையோடு அவனைப்பார்த்தார்கள், மௌனமாயிருந்தார்கள். கூட்டத்துக்கு பின்னால் மட்டும் அமுங்கிப்போன குரலில் ஏதோ கசமுசப்பு எழுந்தது.



"நான் ஓடிப்போக மாட்டேன், நான் இந்த உண்மையிலிருந்து ஒளிந்து மறைய முடியாது."

"விவசாயிகளே!" என்று சிரமப்பட்டு உரக்கப் பேசினான் ரீபின். "அந்தப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை நம்புங்கள். இதற்காக நான் உயிரையும் கூட இழக்க நேரிடலாம்; அவர்கள் என்னை அடித்தார்கள்; சித்திரவதை செய்தார்கள்; அவற்றை நான் எங்கிருந்து பெற்றேன் என்பதை என் வாயிலிருந்து கக்கவைக்க முயன்றார்கள்; மீண்டும் அடிப்பார்கள். ஆனால், நான் அதையும் தாங்கிக் கொள்ளத் தயார். ஏனெனில் அந்தப் பத்திரிகைகளில் கூறப்பட்டுள்ளவை உண்மை–அந்த உண்மை தான் நமக்கு நம்முடைய அன்றாட உணவை விட, அதிமுக்கியமானதாக், அருமையானதாக இருக்க வேண்டும். அதுதான் சங்கதி!"

"அவன் இதையெல்லாம் ஏன் சொல்கிறான்" என்று முகப்பு வாசலுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த முஜீக்குகளில் ஒருவன் கேட்டான்.

"எதைச் சொன்னால் என்ன? இப்போது எல்லாம் ஒன்று தான்" என்று அந்த நீலக் கண்ணன் சொன்னான். "மனிதன் ஒரே ஒரு முறை தானே சாக முடியும்."

> "நாம் ஒவ்வொருவரும் அடுத்தவரது கைக் கட்டுகளை அவிழ்த்து விடாவிட்டால், பின் யார்தான் நமக்காக அந்தக் காரியத்தைச் செய்வார்கள்?"

அந்த ஜனங்கள் ஒருவார்த்தை கூடப் பேசாது அங்கேயே நின்று தங்களது புருவங்களுக்குக் கீழாக உம்மென்று பார்த்தார்கள். கண்ணுக்குப் புலனாகாத ஏதோ ஒரு பார உணர்ச்சி அவர்களைக் கீழ் நோக்கி அழுத்திக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அந்தப் பொலிஸ் ஸார்ஜெண்ட் அந்தக் கட்டிடத்துக்குள்ளிருந்து தட்டுத் தடுமாறிக் கொண்டே முகப்பு வாசலுக்கு வந்து சேர்ந்தான்.

"யாரங்கே பேசுகிறது?" என்று அவன் குடிகாரனைப் போலக் கத்தினான்.

திடீரென்று அவன் விடுவிடென்று படிகளை விட்டிறங்கி, ரீபினிடம் போய் அவனுடைய தலைமயிரைப் பற்றிப்பிடித்து, தலையை முன்னும் பின்னும் இழுத்துக் குலுக்கிவிட்டான்.

"டேய்! நீதானே பேசினாய்? நாய்க்குப் பிறந்த பயலே!"என்று அவன் கூச்சலிட்டான்.

ஜனக் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது; முணுமுணுப்பு அலை பாய்ந்து பரவியது. நிராதரவான வேதனையுணர்ச்சியோடு தாய் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டாள். மீண்டும் ரீபினின் குரல் ஓங்கி ஒலித்தது:

"பாருங்கள், நல்லவர்களே!..."

"சத்தம் போடாதே!" அந்த ஸார்ஜெண்ட் அவன் காதோடு ஓங்கியறைந்தான். ரீபின் தடுமாறிச் சாய்ந்து, கீழே விழாமல் சுதாரித்து நின்றான்.

"ஒரு மனிதனின் கைகள் இரண்டையும் கட்டிப்போட்டு விட்டு, இவர்கள் இஷ்டப்படியெல்லாம் அவனை வதைக்கிறார்கள்..."

"பொலிஸ்! இவனைக் கொண்டு போங்கள். ஏ ஜனங்களே, சீக்கிரம் கலைந்து போங்கள்!" வாயிலே கறித்துண்டைக்கவ்விக் கொண்டு தாவுகின்ற நாய்மாதிரி அந்த ஸார்ஜெண்ட் ரீபினுக்கு முன்னால் பாய்ந்து சென்று அவனது முகத்திலும், நெஞ்சிலும், வயிற்றிலும் தன் முஷ்டியால் ஓங்கி ஓங்கிக் குத்தினான்.

## மக்சீம் கார்க்கி

"அடிப்பதை நிறுத்து!" என்று யாரோ கூட்டத்தினிடையேயிருந்து கத்தினார்கள்.

"நீ ஏன் அவனை அடிக்கிறாய்?" என்று மற்றொரு குரல் அதை ஆமோதித்து ஒலித்தது.

"நாம் போய் விடுவோம்" என்று அந்த நீலக்கண் முஜீக் தலையை அசைத்துக் கொண்டே தன் தோழனிடம் சொன்னான். பிறகு அவர்கள் இருவரும் அந்தச் சாவடியை நோக்கி மெதுவாக நடந்தார்கள். அவர்கள் போகும்போது தாய் அவர்களை அன்பு நிறைந்த கண்களோடு பார்த்தாள். அந்தப் பொலிஸ் ஸார்ஜெண்ட் மீண்டும் சாவடியின் முகப்பை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும் தாய்க்கும் நிம்மதி நிறைந்த பெருமூச்சு வெளிப்பட்டது. அங்கு வந்து நின்று வெறி பிடித்த குரலில் அவன் கத்தினான்:

"கொண்டு வாருங்கள் அவனை! நான் பார்த்துக் கொள்கிறேன்..."

"அப்படிச் செய்யாதே" என்று கூட்டத்திலிருந்து ஒரு பலத்த குரல் எழுந்தது. அந்தக் குரல் அந்த நீலக்கண் முஜீக்கின் குரல் தான் என்பதைத் தாய் உணர்ந்து கொண்டாள். "பயல்களா, அவர்களை விடாதீர்கள்! அவனை உள்ளே கொண்டு போனால் அவர்கள் உதைத்தே கொன்று விடுவார்கள். அப்புறம் அந்தக் கொலையை நாம்தான்செய்தோமென்று நம்மீதுபழியும் சாட்டிவிடுவார்கள். விடாதீர்கள் அவர்களை!"

"விவசாயிகளே!" என்று கத்தினான் ரீபின்; "உங்கள் வாழ்க்கை எப்படி பட்டது என்பதை நீங்கள் இன்னும் காணவில்லையா? உங்களை எப்படி கொள்ளையடிக்கிறார்கள், எப்படி ஏமாற்றுகிறார்கள், எப்படி உங்கள் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறார்கள் என்று உங்களுக்குப் புரியவில்லையா? எல்லாம் உங்கள் சக்தியால் தான் இயங்குகின்றன. நீங்கள் தான் இந்தப் பூலோகத்திலேயே சிறந்த மகோன்னத சக்தியாக விளங்குகிறீர்கள். ஆனால் உங்களுக்கு என்ன உரிமைகள் இருக்கின்றன? பட்டினி கிடந்து சாவதற்குத்தான் உங்களுக்கு உரிமை இருக்கிறது!"

திடீரென்று அந்த முஜீக்குகள் ஒருவருக்கொருவர் குறுக்கிட்டுச் சத்தம் போட ஆரம்பித்தார்கள்:

"அவன் உண்மையைத்தான் சொல்கிறான்!"

"பொலிஸ் தலைவனைக் கூப்பிடு. எங்கே அவன்?"

"பொலிஸ் ஸார்ஜெண்ட் அவனைத் தேடிப்போயிருக்கிறான்."

"யார், அந்தக் குடிகாரனா?"

"அதிகாரிகளைக் கூப்பிட்டு வருவது நம் வேலையல்ல." அந்தக் கூச்சல் அதிகரித்துக் கொண்டிருந்தது.

"முன்னாலே போய்ப் பேசு. உன்னை அடிக்கும்படி நாங்கள் விட்டுக் கொண்டிருக்க மாட்டோம்!"

"அவன் கைகளை அவிழ்த்துவிடு!"

"நீ அகப்படாமல் பார்த்துக்கொள்!"

"இந்தக் கயிறு என் கைகளை உறுத்துகிறது" என்று அமைதியாகச் சொன்னான் ரீபின். என்றாலும் அவனது குரல் மற்றவர்களின் குரல்களுக்கு மேலாக மேலோங்கித் தெளிவோடு ஒலித்தது. "நான் ஓடிப்போக மாட்டேன், முஜீக்குகளே! நான் இந்த உண்மையிலிருந்து ஒளிந்து மறைய முடியாது. அது என் இதயத்திலேயே வாழ்கிறது."

சில மனிதர்கள் மட்டும் கூட்டத்திலிருந்து பிரிந்து சென்று ஒரு புறமாக ஒதுங்கி நின்று ஏதேதோ சொல்லிக் கொண்டும் தலையையாட்டிக் கொண்டும் இருந்தார்கள். கந்தலும் கிழிசலுமாய் உடையணிந்த எத்தனை எத்தனையோ மக்கள் உணர்ச்சி வெளியோட ஓடோடியும் வந்து குழும ஆரம்பித்தார்கள். அவர்கள் ரீபினைச் சுற்றி கொதிக்கும் கறுத்த நுரை போன்று சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு காட்டுக்கோழி மாதிரி நிமிர்ந்து நின்று தன் கைகளைத் தலைக்கு மேல் ஆட்டிக் கொண்டு சத்த மிட்டான் ரீபின்:

"நல்லவர்களே! உங்களுக்கு நன்றி. உங்களுக்கு நன்றி. நாம் ஒவ்வொருவரும் அடுத்தவரது கைக் கட்டுகளை அவிழ்த்து விடாவிட்டால், பின் யார் தான் நமக்காக அந்தக் காரியத்தைச் செய்வார்கள்?"

அவன் தன் தாடியைத் தடவிக் கொடுத்துக் கொண்டு இரத்தம் தோய்ந்த தனது ஒருகரத்தை உயர்த்திக் காட்டினான்.

"இதோ என் இரத்தம்–சத்தியத்தைக் காப்பதற்காகச் சிந்திய இரத்தம்!"

தாயும் படியிறங்கி அந்த முகப்புக்குச் சென்றாள். ஆனால் கூட்டத்தின் மத்தியில் நின்ற ரீபினை அவளால் பார்க்க முடியவில்லை. எனவே மீண்டும் அவள் படிகளின் மீது ஏறி நின்று கொண்டாள். ஏதோ ஒரு மங்கிய ஆனந்தம் அவளது இதயத்தில் படபடத்தது.

(தொடர்ந்து வரும்)

# முரண்பாடுகள்

'சில விஷயங்களை புரிந்தும் புரியாத மாதிரி சிலசமயங்களில் மௌனங்காக்க வேண்டியிருக்கிறது. புரிந்தும் புரியாத மாதிரி நடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வளவு நாள் பொறுத்துப் பார்த்தாயிற்று. இனிமேல் மௌனங் கலைய வேண்டியதுதான். விளைவு என்னவானாலும் பரவாயில்லை.'

ரகு யோசித்தவாறு நண்பனைப் பார்த்தான். படியாமல் அடம் பிடித்த தலைமயிரைப் படிய வைக்க பகீரதப் பிரயத்தனம் செய்த ரகுவின் நண்பன் ராஜாரகு தன்னையே கண்ணாடி வழியே கவனிப்பதை உணர்ந்து புன்னகைத்தான்.

"என்னடாப்பா, எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனை?" ராஜாவின் கேள்வி செவியில் விழுந்ததாய்க் காட்டிக் கொள்ளவில்லை ரகு.

"ராஜா" ரகு அழுத்தமாய்க் கூப்பிட்டான். ராஜா ரகுவைப் பார்த்தவாறு வந்து அருகிலமர்ந்தான். "என்ன ரொம்ப சீரியஸாய்?" ராஜா சிரித்தவாறு கேட்டான்.

"உன் நெஞ்சத் தொட்டுச் சொல்லு. சஹானாவை நீ உண்மையாகவே நேசிக்கிறாய் தானே? கடைசிவரை அவளே உனது இதய ராணி இல்லியா?" ரகு ஒவ்வொரு வார்த்தையிலும் ஓர் அழுத்தத்தைப் பிரயோகித்தான்.

ராஜா சிரித்தான். "திடீரென்று என்னடாப்பா இது? கேள்வி மேல் கேள்வி? என் காதலில் எங்கேயடா குற்றம் கண்டாய்? இறுதிவரை என் சஹானாதான் எனக்கு. மனம் மாற மாட்டேன் என்னைப் பற்றி இவ்வளவுதானா நீ புரிந்து கொண்டாய்? போ.. இத்தனை வருட நட்பிலும் பலனில்லை. பூஜ்ஜியம் தான். "ராஜா அலுத்துக் கொண்டான்.

"பதறாதே ராஜா. என் மனசில் பட்டதைத் தான் சொல்கிறேன். கோபிக்காதே. நிதானமாய் யோசி. பிறகு சொல். போன புதன் நீயும் நானும் லைப்ரரியில் மீட் பண்ணின அந்த கேர்ள்... அவ பேரு... அதான் ரவீணா... அவ மேல உனக்கு ஒரு லேசான மயக்கம்... லேசான..." ரகு மென்மையாய் வார்த்தைகளை உதிர வைத்தான். "இல்லியா?"

ராஜாவின் முகத்தில் கோபம். "மயக்கம்... ஹ்ம்... என் மனசைத் தோண்டிப் பார்த்தாயில்லையா? உன் மனசின் அடியில் களங்கம். அதுதான் லேசான நட்பைக்கூட இப்படி குற்றம் போலச் சொல்கிறாய். அவளப் பார்க்கிறது, பேசறது எல்லாம் நீயும் தான் செய்கிறாய். பிறகு.. பிறகு.. என்னை மட்டும் எப்படி... குற்றம் பிடிப்பாய்?" எதிர்த்துக் கேட்டான். "உனக்கு மட்டும் மயக்கம் இல்லியா? நீ மட்டும் என்ன ராமன் வம்சமா?" கோபமாய் எரிந்தான்.

"இங்க பார் ராஜா. நீ எவ்வளவு கோபித்தாலும் சரி. நான் சொல்றதை சொல்லிட்டேன். பாம்பின் கால் பாம்பறியும். எனக்கும் மயக்கம் இருக்கலாம். இல்லைனு சொல்ல வரலே. ஆனா.. உன்னையே நம்பியிருக்கிற சஹானா உன் காதலி– பாவமில்லையா? எனக்கு காதலும் இல்லை. காதலியும் இல்லை. நான் மயங்கலாம். காதலிக்கவும் தொடங்கலாம். ஆனால் நீ..."

நிறுத்திய ரகுவே தொடர்ந்தான். "ரவீணாவைக் கண்டதும் உன் முகத்துல தெரியுற அலாதியான சிரிப்பு, சந்தோசம், உன் செய்கைகள் எல்லாமே ஏதோவொன்றை எனக்குத் தெரிவிக்கின்றன– ராஜா! தயவு செய்து தவறா எடுத்துக்காத. நீ செய்யறது நல்லதில்லேனு எனக்குப் படறது. உன்னை அங்குலம் அங்குலமா புரிஞ்சு வைச்சிருக்கிறவன் நான். இது நல்லதில்ல."

ராஜா பேசவில்லை. இன்னும் கோபத்தின் சிவப்பு முகத்தில் இருந்தாலும் ஏதோவோர் யோசனையும் ஊடே தெரிந்தது.

"கவனி ராஜா.. இதெல்லாம் இப்போ விளையாட்டாத் தெரியலாம். இப்படியே ரவீணாவோட நாம் பழகி–அதுவும் நீ பழகி அவ மனசுல ஆசைகள வளர்த்திட்டா, நாளைக்கொரு நாள் அவ உன்னை நேசிக்கிறதா சொல்லிட்டா என்ன செய்வே? நான் ஏதோ உன் மேலே பொறாமைப் பட்டு



ரவீணாவை நானே காதலிக்கணும்னு ஆசைப்பட்டு இதையெல்லாம் சொல்றதா நெனக்காத ராஜா. யதார்த்தம் இது தான். உணர்ந்துட்டா உனக்கு நல்லது. எனக்கும் நல்லது. உன் சஹானாவுக்கும் நல்லது. சபலங்கள் என்றைக்குமே நல்லதில்லை!"

சொல்லிய ரகு நிறுத்திவிட்டு எழுந்து கொண்டான். "நீ சொல்ற மாதிரி நட்புக்கும் காதலுக்கும் வித்தியாசம் புரியாத முட்டாளில்லை நான். வித்தியாசங்கள் புரிந்தபடியால் தான் விபரீதங்கள் ஆகிடக் கூடாதுன்னு நினைக்கிறேன். என் மனசில் களங்கம். அது தான் உன்னில் குற்றம் சொல்றேன்னு சொல்கிறாய். பரவாயில்லை. உன் காதலில் களங்கம் வரக் கூடாதுன்னு தான் நான் நினைக்கிறேன்: அவ்வளவுதான். ராமனாய் வாழ முடியாவிட்டாலும் பரவாயில்லை; மாறாக ராவணனாய் வாழ நினைக்காதிருப்பதே மேல்."

இத்தனையும் சொல்லிவிட்டு ரகு போய் விட்டான். ராஜாவுக்குள் படு கோபம். இனிமேல் ரகுவுக்கும் அவனுக்கும் நட்பில்லை என கங்கணம் கட்டிக் கொண்டான். வாசலில் தபால்காரனின் மணியோசை.

இரண்டு கடிதங்கள். ஒரு கடிதத்தை சஹானாவுடையதுஎன அடையாளம் கண்டான். மற்றையது? கேள்விக் குறியோடு உடைத்தான். வரிகளை வாசிக்க வாசிக்க இதயம் இரு மடங்காய் அடித்தது. ரவீணா தன் காதலையெல்லாம் கொட்டியிருந்தாள். அவனது அன்பை யாசித்திருந்தாள். ராஜா தலையில் கைவைத்தபடி சாய்ந்து உட்கார்ந்தான். மனத்திரைக்குள் ரகு வந்தான். "இது நல்லாயில்லே ராஜா!" எதிரொலி கேட்டது.

ஷர்மிளா இஸ்மாயில்– கண்டி

# மண்வாசனை

அந்த ரம்மியமான மாலைப்பொழுதிலே கிணற்றடிக்கல்லின் மேல் உட்கார்ந்திருந்த மாலாவின் முகத்தில் கவலை ரேகை படர்ந்திருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் முத்து கையில் விழுந்து சிதறியது.

மாலாவினால் ஜீரணிக்க முடியவில்லை.



தனது சொந்த தாய் மண்ணை விட்டுப் போவது என்றால் தனது உடமைகளில் எதையோ விட்டுவிட்டுப் போகின்றோமோ என்று தோன்றியது.

காரணம்-இரண்டு நாட்களுக்கு முன் வந்த அந்தக் கனடாக்கடிதம். பார்த்த மாத்திரத்தில் அவளுக்கு மிகவும் சந்தோசமாகத்தான் இருந்தது. கனடாவிற்கு அண்ணா விடம் போவது, அங்கு பல இடங்களைச் சுற்றிப்பார்ப்பது போல்; ஒரு நிமிடம் அவள் மனக்கண்முன் தோன்றி மறைந்தது அந்தக் காட்சி.

ஆனால் இப்போது அவள் மனதில் பெரும் மாற்றம். அது என்னவென்று தெரியவில்லை. இதைத்தான் மண்வாசனை என்று சொல்லுவதோ தெரியவில்லை.

இந்த கிணற்றடிக் கல், பனைமரம், அழகிய சூழல், நல்ல நண்பிகள், அன்பே வடிவான தாய், தந்தை! எல்லா வற்றையும் எல்லோரையும் விட்டுப் பிரிவது என்றால்.... அவளால் தாங்க முடியாத வேதனையாக இருந்தது.

வயல் சேற்றில் கால்புதைய விளையாடியது. கடற்கரையில் சோகி பொறுக்கி உலாவியது. பனம் பழம் சூப்பியது.. எல்லாம் எப்படி மறக்க முடியும்?

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ தெரியவில்லை. அம்மாவின் குரல் அடுப்படியில் இருந்து காற்றுடன் கலந்து அவள் செவிகளில் புகுந்ததும் தாமதம், நினைவு கலைந்து, கல்லை விட்டு எழுந்தாள்.

அவள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள்.

'என்ன ஆனாலும் சரி. இந்த மண்ணை விட்டு, சொந்த மண்ணைவிட்டு நகருவதில்லை' அந்த கிணற்றடிக் கல்லைப்போல் அவளது மனதும் உறுதியாக இருந்தது.

யூலி அனித்தா

# சிறுகதை

# அத்தையா...? அம்மாவா...?

"சா'ப்பிட வாங்கம்மா," என்று அழைத்தாள் புது மருமகள் சித்ரா.

"முதல் முதலாக சமையல் பண்ணியிருக்கே. எப்படி இருக்குதுன்னு பார்க்கலாம்," என்றாள் மாமியார்.

இலை போட்டு தண்ணீர் வைத்தாள் சித்ரா. வீட்டில் அம்மாவும், பாட்டியும் அடுப்பங்கரைக்கு விடாத செல்லம். படிப்பு, பகட்டு, டான்ஸ், டிவி என்று சுதந்திரமான பழக்கங்கள். இருந்தாலும் ஓரளவுக்கு சமையல் செய்யத் தெரியும். ராஜேஸ்வரி அம்மாளின் டேஸ்ட்டுக்கு மனதில் வாங்கிக் கொண்டாள். அம்மா வீட்டில் எதை எப்படிப் போட்டு அம்மணினாலும் புதிய சுவை என்று ஏற்றுக் கொண்டு விடுவார்கள். ஆனால் இங்கே....

"நீயும் என் கூடவே உட்கார்ந்துக்க...."

சமையலைப் பற்றி என்ன சொல்லப் போகிறாளோ என்ற பயத்துடன் இலையைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள் சித்ரா. கணங்கள் நிமிடங்களில் பரவ.....

"சமையல் நல்லா இருக்கு. என்னை மாதிரி செய்யக் கத்துக்கிட்டே...."

நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சித்ரா. தன் சமையல் ஒன்று தான் உலகத்தின் சமையல் கலையின் எல்லைக்கோடு என்ற எண்ணம் சமையல் அறையோடு தன் உலகத்தைக் குறுக்கிக் கொண்ட சின்ன வட்டத்தினால் ஏற்பட்டதா? மாமியாரை பார்க்க சித்ராவுக்கு பரிதாபம் தான் ஏற்படுடு.

"நீயும், சுந்தரும் உங்கம்மா வீட்டுக்கு போயி தங்கிட்டு வரப்ப ஸ்வீட் பண்ணிட்டு வரணும் நீ.....இல்லாட்டி எல்லாரும் என்ன கொண்டு வந்தா சித்ரான்னு கேட்பாங்க."

"சரிம்மா."

"நீ என் பெண் மாதிரி. அதான் உனக்கு இதெல்லாம் சொல்லித்தரேன்."

கட்டிய கயிறு எல்லையைத் தாண்ட விடாது இழுப்பது போல் இது ஒரு கேம்ப்.

ரேவதி, பிரபா, வீணா இவர்களின் மாமியார்களை பார்க்கும் பொழுது, தன் மாமியாரின் குறைகள் ரசிக்கும் படியான விமர்சனம் தானே தவிர. பொறுக்க இயலாத வேதனை இல்லை.

'கணவன் வீட்டினர் என்றால் கொம்பா முளைத்திருக்கிறது? நாம் ஏன் அவங்க சொல்லுக்கு ஆடனும்னு கேட்பியே சித்ரா.... இப்ப எப்படி?" என்று தோழி கலா கேட்கும் பொழுது தனக்குத் தானே யோசித்தாள்.

'எங்க வீட்டு சமையல்படிதான் சமைப்பேன். நீங்க சொல்றபடி நான் ஏன் சமைக்கணும்,' என்று ஏன் பதில் பேசத் தெரியவில்லை?

'இந்த புடவையா கட்றே சித்ரு! இது டிம்மா இருக்குதே?' என்று ஒரு முறை கணவன் கேட்டபொழுது, ஏழெட்டு புடவைகளை கையில் சுருட்டி வைத்துக் கொண்டு, 'உங்களுக்கு எது பிடிச்சிருக்குது?' என்று கேட்டு அவன் வாங்கிக் கொடுத்ததை ஏன் அவள் கட்டுகிறாள்?

யோசிக்கிறாள்! அன்பு! 'உனக்குன்னு ஜாதிப் பூ பிடிக்குமே!' என்று வாங்கித் தரும் அன்பு.

அவளுக்கு பிடிக்காததை தனக்குப் பிடிக்காது என்று ஒதுக்கித் தள்ளிக் காட்டும் அன்பு.

சளி பிடித்துவிட்டால் துடித்துப் போய் இரவு பூராவும் தொட்டுப் பார்த்து மடியில் போட்டு தாலாட்டும் அன்பு.

இதற்கு விலையாகத்தான் சகிப்புத் தன்மையைக் காட்டுகிறாளா?

சாப்பாட்டிற்கு பின்னர் ராஜேஸ்வரி உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள்.

"அம்மா! உனக்கு நல்ல பிள்ளை. அவளுக்கு நல்ல கணவன்."

லச்சுமி ராஜரத்தினம்



அன்று 'லீவ்' ஆனதால் சுந்தர் சோபாவில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தான். சமையல் அறை வேலைகளை முடித்துக் கொண்டு வந்தாள் சித்ரா.

"சித்ரா, வேலையை முடிச்சுட்டியா?"

"ஆச்சும்மா, டிபனுக்கு வடைக்கு நனைச்சு, வச்சிருக்கேன். ஒரு மணிக்கு அரைக்கலாம். மிசி தானே!"

"இப்படி உட்கார். தீபாவளி லிஸ்ட் போட்டிருக்கேன்."

மாமியார் வாங்கப் போகும் 'லிஸ்ட்' என்று நினைத்தாள் சித்ரா. முதல் நாள் இரவே பேச்சு வாக்கில் தனக்குப் பட்டுப் புடவை, சித்ராவுக்கு பூணமோ, மெட்டல் ஷிபானோ ஏதோ ஒன்றை முன்னூறு நானூறு ரூபாய் என்று ஒதுக்கி இருந்தாள்.

இதுக்குப் போய் இன்னும் என்ன 'லிஸ்ட்?'

"சித்ரா, கவனமாக கேட்டுக்கோ."

"சரிம்மா."

"தீபாவளிக்கு முதல் நாளே போய் இறங்கிடறோம். சுந்தருக்கு மயில் கண் வேஷ்டி, காஸ்ட்லி ஷர்ட், இதோ பார்.... வேட்டி துண்டுன்னு கூடாது. எனக்கு மைசூர் சில்க்புடவை, உங்கள் மாமனாருக்கு ஜரிகை வேட்டி, ஷர்ட், இன்னும் யார் யார் வராங்களோ அவங்களுக்கு ரவிக்கை துண்டு. முக்கியமா ஒண்ணை மறந்துட்டேனே?"

"என்னம்மா?"

"வைர மோதிரம்.... எங்க மைத்துனி பிள்ளை ராஜாவுக்கு வைர மோதிரம் போன தீபாவளிக்கு பண்ணி போட்டிருக்காங்களாம். அதே மாதிரி பண்ணனும். நடுவுல வைரம், இரண்டு பக்கமும் நல்ல ஜாதி கெம்பு வச்சு பண்ணனும். அங்க யாரும் நல்ல பண்ணாட்டி, இங்க வரச் சொல்லு உங்கப் பாவை. நம்ம வழக்கமா பண்ணக் கொடுக்கிற பத்தர்ட்ட கொடுக்கலாம்."

'லிஸ்ட்'டை சாமி படத்தில் வைக்க எழுந்து போனாள் ராஜேஸ்வரி. "உனக்கு என்ன புடவை எடுக்கறாளோ எடுக்கட்டும். பட்டுப் புடவை வாங்கணும்னு சொல்லலே. பட்டெல்லாம் வாங்கற விலையிலா இருக்குது?"

"என்ன சுந்தர் இது? நீங்களாவது வேண்டாம்னு சொல்லக் கூடாது?"

அவன் தோளை பிடித்து குலுக்கினாள்.

"உனக்கு நல்ல கணவன்; அம்மாவுக்கு நல்ல பிள்ளை. அவங்களை தடுக்க என்னால முடியாது சித்ரு. ஏதாவது சொன்னா நம்ம சந்தோஷம் போயிடும். வேலையெல்லாம் முடிஞ்சு போச்சு இல்லே? வா, மாடிக்கு போகலாம்."

எதையோ மென்று கொண்டே வந்தாள் ராஜேஸ்வரி.

"நீ என் பெண் மாதிரி. இதெல்லாம் உனக்குத்தானே!"

'ஆமாமா....! தனக்கு போடும் லிஸ்ட்ல தனக்கு தன் வீட்டில் பட்டுப் புடவை, மருமகள் வீட்டில் மைசூர் சில்க்... மருமகளுக்கு என்று பூணமோ... ஒணமோ.... ஏதோ ஒன்று....' மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் சித்ரா.

வாசல் கதவை யாரோ தட்டினார்கள்.

"யாருனு பார்."

செண்பகம் மாமிதான் நின்றாள்.

"அத்தை! செண்பகம் மாமி வந்திருக்காங்க."

'அத்தையா! யாரை சொல்கிறாள்?'

"அத்தை எங்கேடி சித்ரா வந்திருக்கா?" என்று ராஜேஸ்வரி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"உங்களைத்தான் சொன்னேன்."

"என்னையா? மாமியாரை அம்மான்னு கூப்பிடறது தான் நம்ம வழக்கம்."

"எப்ப எல்லாத்தையும் 'லிஸ்ட்' போட்டு வாங்குறீங்களோ அப்பவே உங்களுக்கு மாமியார் ஸ்தானம் தானே! உங்களுக்கு இங்கே பட்டுப் புடவை. எனக்கு பூணம்.... எங்கள் வீட்டுக்கு போட்ட 'லிஸ்டில்' எனக்கு எது வேணுமோ வாங்கலாம்னு சொல்லிட்டீங்க. எங்கம்மா என்னை விட்டுட்டு பட்டுப் புடவை கட்டிப்பாங்களா? அம்மா, அம்மா தான், மாமியார் மாமியார் தான்!"

அடிபட்டாற் போல நின்றாள் ராஜேஸ்வரி.

"என்னடா சுந்தர். இப்படி பேசறா.... கேட்டுண்டே நிக்கிறே?"

மெல்ல சிரித்தான் சுந்தர்.

"அம்மா, நான் உனக்கு நல்ல பிள்ளை. அவளுக்கு நல்ல கணவன். உன்னை எதிர்த்து கீழே வரமுடியாது. அவளை எதிர்த்தா மாடிக்கு போக முடியாது. எங்க பிழைப்பு திரிசங்கு சொர்க்கம்னு நீ புரிஞ்சுக்கணும்."

"சித்ரா, நீ என்னை அம்மான்னு கூப்பிடு"

"என்னால முடியாது அத்தை," என்றாள் அழுத்தமாக சித்ரா.

செண்பகம் மாமி நிற்பது வேறு அவமானமாக இருந்தது. 'லிஸ்டை' எடுத்துக் கொண்டு வந்த ராஜேஸ்வரி அதை கிழித்துப் போட்டாள்.

"தீபாவளிக்கு உங்க வீட்ல என்ன செய்றாளோ அதைச் செய்யட்டும் சித்ரா. எனக்கு எடுக்கற மாதிரி நானும் பட்டுப் புடவை உனக்கும் வாங்கிடறேன். இப்ப என்னை அம்மான்னு கூப்பிடு."

"அம்மா," என்று அழைத்தாள் சித்ரா.

"ராஜேஸ்வரி, நானும் புரிஞ்சுகிட்டேன். வரதட்சணையோ, அதுக்கு மேல வரும் தட்சணையாக எதையும் எதிர்பார்க்காம இருந்தால் தான் நம்ம வீட்டு பிள்ளைகள் நிம்மதியாக இருக்க முடியும். நானும், என் மருமகளை எதுவும் சொல்ல மாட்டேன்," என்றாள் செண்பகம்.

"அம்மாவை திருத்திட்டியே.....நீ கெட்டிக்காரிதான்" என்றான் சுந்தர்.

"மேல வாங்க கவனிச்சுக்கறேன்," என்றாள் சித்ரா பெருமையுடன்.

# மரணமில்லை!

1986 சித்திரை 15ம் நாள்

வெய்யில் சுட்டது

தலைக்கு மேலே சூரியன் வந்து கொண்டிருந்தது.

வீதியெங்கும் வெறிச்சோடிப் போய்க் கிடந்தது.

டச்சு ரோட்டில் பிள்ளையார் கோயிலை நோக்கி வந்து கொண்டிருந்தான் செல்வம்... அவனுக்கு மனதில் பயம். அவனுடைய மாமா சின்னத்துரையர் வந்து சொல்லி விட்டுப் போயிருந்தும் அவனுடைய மனச பயத்தை உதறவில்லை.

இயக்க மோதல்! சக இயக்கம் ஒன்று அவனுடைய இயக்கத்தை- இயக்கத்தவர்களை தேடித் திரிகிறது.

அவனைக் கடந்து சென்ற சைக்கிளில் ஆனந்தன் போவதைக்கண்டு "அண்ண அவுங்கள் எல்லாம் போயிட்டாங்களா?" என்றான் செல்வம்.

"அவுங்க விடியப்புறமே போயிட்டாங்க."

"அண்ண நீங்க பாத்தீங்களா?"

"இல்ல தம்பி கிறிஸ்டோப்பர் இப்ப காலையில ஆஸ்பத்திரிக்கு போயிட்டு போகேக்க சொன்னவர்.. சனிக்கிழம வந்த



வள்ளத்தை கொண்டு போக இஞ்சின் சுத்த தன்ன கூட்டிக் கொண்டு போனாங்களாம்... இஞ்சின் சுத்தேக்க கிறிஸ்டோப்பருக்கு காலல காயம்..." என்று சொன்ன ஆனந்தன் சைக்கிளில் ஏறி மிதிக்கத் தொடங்கினான்.

எதிர்ப்புறமாக சைக்கிளில் வந்த யூட், "அண்ண.... பழய பொலிஸ்டேஷனடியில பிணம் ஒண்டு கெடக்குது.." என்று சொல்லி விட்டு வேகவேகமாகச் சென்றான்.

'யாருடைய பிணம்..!' என்று... வாயெடுத்த செல்வம் அவன் தூரப்போய் விட்டதை உணர்ந்து மிகுதி வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான்.

சனிக்கிழமை விடியற்காலை நாலு மணிக்கு.. ஜெயாவின், கடையடியில வெடிச் சத்தம் கேட்டது.. "ஏதோ கேம்பில பயரிங் கொடுக்கிறாங்கள்" என்று மாமா சொன்னார்... "டெயிலி நேரகாலம் தெரியாம வெடிச்சத்தம் இப்படிக்கேட்கும்" என்று சொல்லி விட்டு திரும்பிப்படுத்துக் கொண்டேன்.

"இஞ்சாருங்கோ கேம்படியில தொடர்ந்து வெடிச்சத்தம் கேக்குது.." மனைவி பயத்தில் மூச்சுவாங்கினாள். அவளுடைய பெருத்த வயிறு மேலும் ஏறி இறங்கியது.. அவளைப் பார்க்க எனக்கு பயமா இருந்திச்சி....தம்பி நீங்க வீட்டில இருங்க நான் ஜெட்டிவர போய் பாத்திட்டு வாரன்...." என்று சொல்லி விட்டு தனது சைக்கிளில் ஏறிப்போன மாமா..... கொஞ்சநேரத்தில திரும்பி வேகமாக..... மூச்சிரைக்க வியர்த்துப்போய் வந்து..... "தம்பி பெருசுகள் வந்திருக்கு....நீங்க இங்க இருக்கிறது நல்லா இல்ல.... இங்க தேடிவருவாங்க, உங்க உயிருக்கு ஆபத்து," என்று மாமா சொல்லச் சொல்ல என்னுடைய முழி பிதுங்கி வெளியில் வந்து விடும் போல் இருந்தது.

மனைவி அழத்தொடங்கினாள்.

நிறைமாதக் கர்ப்பிணி.... அவளுடைய கோலத்தைப் பார்க்கும்போது எனக்கே அழுகை வந்துவிடும்போல் இருந்தது.

"உதுக்குத்தான் நான் சொல்றது கேம்புக்குப் போக வேண்டாம். அவுங்க கூட திரிய வேண்டாம் என்றா கேட்பியளா....? நான் இப்ப வயித்தில நெருப்புக் கட்டிக்கொண்டு இருக்க வேண்டியதாப் போச்சு.....?" அவள் சொன்னத கேட்டிருந்தா இப்போது எனக்கு இந்த அவஸ்தை இருந்திருக்காது, என்று நினைத்தான்.

"மாமா கூட்டிப் போய்.... பாழடைஞ்ச கிணத்தச்சுத்தி பத்த வளர்ந்திருந்தது- அதுக்குள்ள என்ன இறக்கிவிட்டு..... கமுகு தடிகளால் மூடிவிட்டு.."நான் வரும் போது செருமிக் கொண்டு வருவேன்." என்று சொல்லிவிட்டுப்போய்விட்டார்.

சுவர்ணா

"டேய் செல்வம்..... என்ன கூப்பன் முத்திரை எல்லாம் விதானையார் வேண்டிட்டாரா?..... நடு ரோட்டில போற....?" என்ற சின்னதம்பியின் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்தான் செல்வம்.

"டேய்... டேய் பகிடி விடாத, ரெண்டு நாளா நான் எங்க போய் இருந்தேன் .... என்ன இந்தப் பக்கத்தால வாற....?"

"மெயின் ரோட்டில வராம குச்சி ஒழுங்கையால வாறன். இப்பத்தான் சன மெல்லமா ரோட்டில கொஞ்சம் வெளிக் கிடுது." என்றான் சின்னத்தம்பி.

"என்ன சின்னத்தம்பி பழைய பொலிஸ் டேஷனடியில பிணமொண்டு கெடக்கெண்டு யூட் சொல்லிவிட்டுப்போறான்.... யாருடைய பிணமடா சின்னத்தம்பி?"

"சுகுணாவின் பிணம் கிடக்குதாம்.... வா கெதியாப்போய்ப் பார்ப்பம்...." என்றவாறு சின்னத்தம்பி செல்வத்தையும் சைக்கிளில் முன்னுக்கு ஏத்திக் கொண்டு மிதிக்கலானான்.

எல்லோருடனும் நல்ல மாதிரி பாகுபாடு இன்றி.... தோழமையோடு பழகுற நல்ல மனிதர்...சக அமைப்பு உறுப்பினர்களோடு பகைமை பாராட்டாமல் பழகியவர்.

"டேய் செல்வம், இறங்கு..." என்று சின்னத்தம்பியின் குரலுக்கு சுயநினைவுக்குத்திரும்பிய செல்வம் திடீரென்று இறங்க முயற்சித்து செல்வத்தின் காலில் சைக்கிள் பெடல் பட்டு தள்ளாடிய சின்னத்தம்பி ஒருவாறு தன்னை நிலைப்படுத்திக் கொண்டான்.

மக்கள் கூட்டமாக கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள். செல்வத்தால் பிணத்தை பார்க்க முடியவில்லை. கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னேறிப்போய் பார்த்தான். இறந்து கிடக்கும் சுகுணாவின் நிலையைக் கண்டு மனம் அழுதது.

அடிமைத்தனத்தை உடைத்தெறிய உயர்த்தப்பட்ட முஷ்டிகளின் விரல்கள் துண்டிக்கப்பட்டிருந்தன.

மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றப் படவேண்டுமெனப் புறப்பட்டவன் கண்கள் சிதைக்கப்பட்டிருந்தன.

தான் வாழ்வதற்கு- தனது சுற்றம் வாழ்வதற்கு- தனது சமூகம் வாழ்வதற்கு- தனது இனம் வாழ்வதற்கு- சுதந்திரத்திற்கும் உரிமைக்கும் சொந்த மண்ணில் குரல் கொடுக்க மறுக்கப்பட்டு அனாதையாக- அநியாயமாக சக அமைப்பால் பிணமாகிக் கிடக்கிறான்.

செல்வத்தின் மனம் துடித்தது. சுகுணாவுக்காக அழப்போனவன் கண்களிலிருந்து கண்ணீருக்குப் பதிலாக கோபம் அனலாக வீசியது....

"எங்களுக்காக- எம்மக்களுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் அனாதைகளாக தெருவோரங்களில் மரணிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. எல்லோருடைய நோக்கமும் ஒன்றுதான். தவறுகள், பேதங்கள் இருக்கலாம். அது பேசித்தீர்க்கப்பட வேண்டியது. வன்முறை, உயிர்ப்பலிகள் இதற்கு தீர்வாகாது. இச்சம்பவத்திற்கு யார் காரணமோ அவர்களிடம் காரணம் கேட்கப் படவேண்டும். இதுபோன்று இனிவரும் காலத்தில் அநியாயம் நடைபெறாது என்பதற்கு உத்தரவாதம் பெறப்பட வேண்டும். எமது வாழ்வின் விமோசனத்திற்காகப் புறப்பட்ட எம் மைந்தர்களை நாம் தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்....."

இந்த நியாயமான குரலுக்குக் கூடி இருந்தவர்கள் மௌனத்தை தமது சார்பு நிலையாக வெளிப்படுத்தினார்கள்.

பொன்னம்பலம் மாஸ்டரை நிமிர்ந்து பார்த்தான் செல்வம். நியாயத்தை சொல்லக் கூடிய உன்னத மனிதர்.... பொன்னம்பலம் மாஸ்டர் தனது தோளிலிருந்த சால்வையை எடுத்து சுகுணாவின் பிணத்தை மூடிவிட்டார்.

"என்ன எதிர்ப்பு வந்தாலும் சகல மரியாதையோடும் மொத்த மக்களின் அணிவகுப்புடன் இறுதி ஊர்வலம் நடந்தாகணும். அதுதான் நாம் சுகுணாவுக்கு செய்யும் கைமாறாகும்...." என்றவாறு நடக்க வேண்டிய மிகுதி வேலைகளை கவனிக்கத் தொடங்கினார் மாஸ்டர்.

சுகுணா இறக்கவில்லை..... சுகுணா அவன் வாழ்கின்றான்!

## இலக்கிய நயம்

# மேனடிக்கு விளக்கு!



வில்லெடுத்து அம்பு தொடுத்து குறி பார்த்தான். காலில் சருகு மிதிபட்டது. அந்த சப்தமே குறிவைக்கப்பட்ட மானுக்கு போதுமானதாக இருந்தது. மான் துள்ளி யோடிற்று. குறி தவறியது.

வேட்டைக்குவந்த மன்னன் மனம் வாடியது. 'குறி தவறிவிட்டதே!'

எங்கே போய்விடப் போகிறது.

விடாதே! துரத்து! தேடு! வீழ்த்து! மனம் கட்டளையிட்டது.

மன்னன் கானகத்தில் தேடத்தொடங் கினான். பொழுது சாயத் தொடங்கியது. சூரியன் தன் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டான்.

மன்னன் கால்கள் மட்டும் ஓயவே யில்லை. போருக்குச் சென்றால் வெற்றியின்றி திரும்புவது வெட்கம். வேட்டைக்குச் சென் றால் வெறுங்கையோடு திரும்புவது துக்கம்.

அலைந்து திரிந்ததால் மன்னனுக்கு தாகம் எடுத்தது.

வனத்தின் மத்தியிலே ஒரு குடில் தெரிந்தது. விழிகள் வழிகாட்ட கால்கள் தடம்பதித்தன.

குடில் கதவை தட்டலாம் என்று கையெடுத்தவனை, செவிக்குள் புகுந்த சலங்கை ஒலி தடுத்து நிறுத்தியது.

பூனைபோல் நடந்து குடிலைச் சுற்றி வந்தான். வெளியே யாரும் இல்லை.

தனியான இடம். தனியான குடில். நடுங்கவைக்கும் கானகம் நடுவே அகம் மயங்கவைக்கும் நாட்டிய கானமா?

வியப்பாக இருந்தது.

யாராயிருக்கும்?

குடிலுக்குள் இருந்து வெளிச்சம் வந்த கீற்றின் துளைவழியாக கண்களை வைத்துப் பார்த்தான்.

நழுவியது மனது!

தழுவியது மலைப்பு!

குறிக்கு தப்பிய மானோ, இப்போது என் விழிக்குள் சிக்கியது?!

மான் என்றால் மதயானை தலைபோல மார்பில் இரண்டு குன்று இருக்குமோ?

மான் அல்ல, மழைமேகம் வரக்கண்டு கலை நடனம் புரிகின்ற மயிலுமல்ல, கால் உண்டு, கையுண்டு, கனகமணித் தேர் போன்ற உடல் உண்டு; மனித குல மங்கையிவள் என்பதற்கு அள்ளக்குறையாத ஆச்சரிய சாட்சிகள் உண்டு! ஆளை மயக்கும் காட்சிகள் உண்டு!

மன்னன் தேடிவந்த மானை மறந்து போனான். தாகம் கூட தணிந்துபோனது.

உள்ளே-இசை முழங்க, கானம் எழும்ப,



தருவது

**ரசிகன்**

அழகுமயில் குலுங்கியது. அபிநயம் பொழிந்தது.

**"எங்கே என் இராஜகுமாரன்**
**அங்கே என் மனம் போகுமா?**
**கண்டேன் நான் கனவில் அவன் முகம்**
**கண்விழித்தேன் முகம் மாயமானது**
**எங்கே என் இராஜகுமாரன்?"**

"இங்கே இருக்கிறேன் உன் ராஜ குமாரன்" என்று கூவவேண்டும் போல இருந்தது மன்னனுக்கு.

**"வெள்ளைக் குதிரையிலே வந்தான்,**
**கள்ள நகையொன்றை தந்தான்.**
**உள்ளம் உவகையிலே குளிக்க,**
**வெள்ளம் போல் வந்த கள்வன்**
**கொள்ளையடித்தான் என் மனதை**
**புயலடித்த படகாய் நான் ஆனேன்."**

எனக்கு முன்னரே வேறொரு கள்ளன் வந்து வித்தையைக் காட்டி வெற்றியைக் கொய்துவிட்டானோ? என்று கவலைப்பட்டான் மன்னன்.

**"கனவில் கண்ட முகம்**
**நனவில் வந்திடுமா தோழி;**
**மனதில் வாழும் முகம்**
**நேரில் மலர்ந்திடுமா தோழி?"**

அடடே....அப்படியானால் கனவில் மட்டும்தான் காதலா? இவள் எண்ணப்படி நான் இருந்தால், காதல் விண்ணப் பத்தை போட்டுவிடலாமே, என்று மனக்கணக்குப் போட்டான் மன்னன்.

இப்போது காதலுக்குள் காமம் மெல்ல எட்டிப் பார்த்தது. பாடலுக்குள் தீப் பிடித்துக் கொண்டது.

**"எரிகிறது நிலவு, அழுகிறது மனது,**
**மூடிக் கொள்ள வா என் மேகமே!**
**குளிர்கின்ற பொழுதும் நெருப்பாகிச் சுடுமே**
**சூடிக் கொள்ள வா என் வானமே!"**

வளைந்தாள்-நெளிந்தாள். விரகதாபம் விழிகளில் வழிய அதரங்கள் துடிக்க அபிநயம் புரிந்தாள்.

**"தேகமெல்லாம் நெருப்பின் வசம்**
**தேன் சொரியாமல் பூ எரிகிறது.**
**தாகம் உனக்கில்லையோ என் வண்டே!**
**போகம் இங்கிருக்க நீ போன இடமெங்கே?"**

மன்னன் ஒரு முடிவோடு நடந்தான். குடில் கதவு தட்டினான். உள்ளே சலங்கை ஒலி அடங்கியது. காலடி ஓசை கதவருகே கேட்டது.

கதவு திறந்தது. எதிர்பார்த்து நின்றான். வெளிச்சமடிக்கவில்லை. காரணம், கதவு திறந்தது வேறொருத்தி.

அவள் தோளுக்கு மேலாக உள்ளே நோக்கினான்.

"என்ன வேண்டும்? யார் நீங்கள்?" கதவு திறந்தவள் கேட்டாள். உள்ளே பார்த்தபடி கேட்டான்;

"என்ன கேட்டாலும் தருவீர்களா?" உள்ளே அவள் விழிகளில் மிரட்சி தெரிந்தது. கூடவே ஆச்சரியக் குறிப்பும் தெரிந்தது. அதரம் தானாகத் திறந்தது.

"அவரை உள்ளே விடு" என்றாள். உள்ளே சென்றவன் சொன்னான்; "கானகம் நடுவே கலைக் கோயில்! ஆச்சரியம்! ஆச்சரியம்!"

அப்போதும் அவள் மன்னனையே பார்த்துக்கொண்டிருந்தாள். விழிகளால் துளைத்துக் கொண்டிருந்தாள்.

"மாறாக இருக்கிறது, அதாவது வழக்கத் திற்கு மாறாக!"

அப்போதுதான் சுயநினைவு பெற்ற வளாய் அவள் கேட்டாள்;

"என்ன மாறாக இருக்கிறது?"

"மலர் வண்டைத் துளைப்பது!"

சட்டென்று அவள் முகத்தின்மீது வெட்கம் செங்கம்பளம் விரித்தது.

❤❤

"என்ன சிரிப்பு?" என்று கேட்டாள் அந்தப்புரத்தில் மன்னனின் அணைப்பில் இருந்த பட்டத்துராணி.

"நம் முதல் சந்திப்பை சிந்தித்து பார்த்தேன்! சிரிப்பு வந்தது! மனதில் ஒரு குதிப்பும் வந்தது!" என்றான் மன்னன்.

"நங்கையர் நாட்டியம்! நாட்டின் மன்னன் ஒளித்திருந்து ரசித்தான்! நினைத்தால் வெட்கமன்றோ வரவேண்டும்" என்றாள் மன்னனை கேலிசெய்யும் நினைப்போடு!

அவளை அணைத்து, இதழ்களையும் கடந்து, நாவிரண்டும் கலந்து, தேனோடு பழம் உண்ட சுவையோடு மன்னன் சொன்னான்;

"வெட்கம் வரவில்லையென்பது மெய்! நெஞ்சில் பயம் நிறைந்தது மெய்!"

"பயமா? உங்களுக்கா? வாள் முனையிலா நாம் சந்தித்தோம்?"

"வாள் முனையில் அல்ல, விழியென்னும் வேல் முனையில்! மனம் குழம்பிப் போனதன்றோ எனக்கு?"

"என்ன குழப்பம்?"

"உன் பார்வை ஒன்று போதுமடி! பல்லாயிரம் குழப்பம் சேருமடி!"

"அதில் சில குழப்பங்களை செப்புங்கள் செவி கேட்கட்டும்!"

"பார்த்தாய், பார்த்தேன், எமனோ, கண்ணோ, பெண்மானோ? என்று குழம்பிப்போனேன்! மூன்றும்தான் என்று முடிவு செய்தேன்!"

"எமன் என்றா நினைத்தீர்கள் என்னை?"

போலியாக கோபித்தாள்.

"பொறு! கோபத்தை திருவள்ளுவர் மீது போடு! அவரும் சொல்லியிருக்கிறார் பார்!" என்றான். அந்தக் குறள் சொன்னான்.

**"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கம்இம் மூன்றும் உடைத்து."**

குறள்-1085. அதிகாரம்-109

## குறுக்கெழுத்துப் போட்டி இல-147

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | | | | |
| | ■ | | ■ | 3 | | |
| 4 | | | | | ■ | ■ |
| | ■ | 5 | | ■ | 6 | |
| 7 | | | ■ | 8 | | |
| | ■ | ■ | 9 | | | ■ |
| 10 | | | | | ■ | 11 |

### இடமிருந்து வலம்

02. வழக்குத் தாக்கல் செய்தால் எதிரிகளுக்குப் பதிலளிக்க நீதிபதி இதனை வழங்குவார்.
03. வலது சாரியாகவும் இருக்கலாம், இடதுசாரியாகவும் இருக்கலாம்.
04. நாடகம் தொடங்குவதற்கு முன்னர் நடிகர்கள், பார்வையாளர்களுக்கு இதனைக் கூறுவது மரபு.
05. பருவமழை பெய்தால் சுவையான இவற்றைப் பெறலாம்.
06. புதுவருடப் பிறப்பை முன்னிட்டு பொருட்களுக்கு இது தானாக உயர்ந்து விடும்.
07. அளவோடு ஊதினால் அழகுடன் தோன்றும்.
08. கண்ணகிக்குச் சிலை எடுத்த மன்னன்.
09. தேங்காய்த் துருவலுடன், சர்க்கரையும் சேர்த்தால் இதன் சுவையே தனி.
10. ஆணி அடிக்க உதவும்.

### மேலிருந்து கீழ்

01. பழம் பழுத்து வெடித்தால் இது பறந்துவிடும். கிளிக்கு ஏமாற்றம் தான்.
02. திருதராட்டினன் இப்படி இருந்ததால் தான் பாண்டுவுக்கு ஆட்சியுரிமை கிடைத்தது.
06. மனிதர்களுக்கு மட்டுமல்ல குரங்குகளுக்கும் உணவு வேளையில் இது உதவும்.
08. கதிரவனின் வரவுக்குக் கட்டியம் கூறும்.
11. நோய்களைப் பரப்புவதில் இதற்கு ஈடு வேறெதுவுமில்லை.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 13.04.1996 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-147
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-145ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 போ | ட் | டி | ■ | 2 ஈ | 3 ச | ல் |
| சா | ■ | 4 ஆ | கா | ர | ம் | ■ |
| க் | ■ | ■ | 5 ர | ம் | ப | ம் |
| 6 கு | ம் | 7 ப | ம் | ■ | ள | ■ |
| ■ | ■ | ஞ் | ■ | 8 பா | ம் | 9 பு |
| 10 ப | ச் | ச | ரி | சி | ■ | ய |
| ■ | 11 அ | ம் | மை | ■ | 12 நூ | ல் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 145இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. பி. ஜெயக்குமார், வெள்ளவத்தை.
2. எம். ரஸ்மி, கல்பிட்டி.
3. நிலானி ஜோசவ், வத்தளை.
4. நூர்ஜஹான் சம்சாதீன், அநுராதபுரம்.
5. எம். விஸ்வநாதன், பண்டாரவளை.
6. எஸ். சுகுணகாந்தி, தெமோதர.
7. எம். ஹிதாயதுள்ளா, வாழைச்சேனை.
8. செல்வி. நிரூபா செல்வநாயகம், வெலிமடை.
9. சல்மா பஷீர், திஹாரிய.
10. கே. பாலச்சந்திரன், நிலாவெளி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## வம்பரங்கம்

தமிழ்நாட்டில் ரஜினிகாந்த்.
பாகிஸ்தானில் இம்ரான்கான்.
இலங்கையில் ரணதுங்கா.

மூவருமே தனித்துவமானவர்கள். தமது திறமையால் புகழின் உச்சத்தை தொட்டவர்கள்.

மூவருக்கும் பின்னால் இரசிகர் பட்டாளம் இருக்கிறது!

# ரணதுங்காவுக்கு வலை

அந்த இரசிகர்களில் வாக்களிக்கும் வயதுள்ளவர்களும் இருக்கிறார்கள் என்பதுதான் அரசியல்வாதிகள் பலருக்கு கண்ணைக் குத்துகிற சமாச்சாரம்.

இப்போதெல்லாம் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் ஒருவர் பிரபலமாகிவிட்டால் அவரை அரசியல்வாதியாக்கிப் பார்க்க பலரும் ஆசைப்படுகிறார்கள்.

நாலு பேர் மெச்சத்தக்க காரியத்தை ஒருவர் செய்துவிட்டால், "நாளை நீங்கள் அரசியலில் குதிப்பீர்களா?" என்று கேள்வி கேட்க பலர் கிளம்பிவிடுகிறார்கள்.

பத்திரிகையாளர்களுக்கு அரசியல் அரங்கம் சுவாரசியமாகத் தெரியவில்லை.

மக்களுக்கும் ஒரே முகங்களைப் பார்த்து சலித்துவிட்டது.

தமிழ் நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள்; கருணாநிதியையும், ஜெயலலிதாவையும் பார்த்துப் பார்த்து சலித்துவிட்டது

ஜெயலலிதா ஊழல் செய்யவில்லை என்று ஒரு பிள்ளை சொல்லாது. ஆனாலும் ஜெயலலிதாவுக்குத்தான் வாக்குப்போடும்.

"ஏன்? கருணாநிதி மட்டும் இலஞ்சம் வாங்கவில்லையா? யார்தான் உசத்தி சொல்லுங்கள்? இந்தம்மா பார்க்க அழகாயிருக்காங்க. எம்.ஜி.ஆரின் இரட்டை இலையோடு வாறாங்க, இவங்களுக்குத்தான் வாக்கு" என்று சொல்லும்.

ரஜினிகாந்த் மாதிரி அரசியலுக்கு புதிய முகம், புதிய தலைமை வரும்போது அப்படிக் கேள்வி வராது.

கிழடுதட்டிப்போன அரசியலில் புதிய இரத்தம் பாய்வதை எழுச்சியூட்டும் விஷயமாகப் பலரும் கருதுவார்கள்.

அப்படித்தான் பாகிஸ்தானிலும்! பெனாசீர் பூட்டோ, நவாஸ் ஷெரீப்- இருவரது செயற்பாடுகளையும் மக்கள் கண்டு அறிந்து- அனுபவித்துவிட்டார்கள்!

இருவருமே சற்று சலிப்பூட்டிய நேரத்தில் இம்ரான்கானின் பெயர் அடிபடத் தொடங்கியது.

அவர் வந்தால் மாற்றம் தெரியலாம் என்றும் ஒரு நம்பிக்கைக்கீற்று தென்படத் தொடங்கியது.

இங்கே-இலங்கையில் ஜனாதிபதி சந்திரிக்காவை தவிர வேறு வசீகரமான தலைவர்கள் இல்லையென்றாகிவிட்டது.

அர்ஜுன் ரணதுங்கா போன்றவர்கள் தம் பக்கம் வந்தால் வாக்கு வங்கிகளைக் கவரும் வசீகர முகம் ஒன்று மேலதிகமாகத் தேறும் என்று ஆளும் அணியில் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.



**தருவது—அம்பன்**

ஆக, ரஜினி, இம்ரான்கான், ரணதுங்கா மூவருமே அரசியல்வாதிகளின் தூண்டில்களில் எந்நேரமும் சிக்கிவிடலாம் என்ற நிலையில் இருக்கிறார்கள்.

மூவருமே "நாங்கள் அரசியலுக்கு வருவோம்" என்று திட்டவட்டமாக அறிவிக்கு முன்னரே, "வருகிறார், வரப்போகிறார், வந்து கொண்டிருக்கிறார்" என்று பத்திரிகை வதந்திகளால் பரபரப்பூட்டப்பட்டவர்கள்.

பத்திரிகைகளுக்கு வதந்திகளை செய்தி போல் சொல்வதும் அரசியல்வாதிகள் சிலருக்கு விருப்பமான தொழில்.

ஒரு புறம் வலைவீசிக்கொண்டே, மறு புறத்தால் பத்திரிகைச் செய்திகள் மூலம் ஆசைகளை வளர்த்துவிடுவார்கள்.

செய்திகளைப் பார்த்துவிட்டு பலர் ஃபோன் செய்வார்கள். "என்ன ரணதுங்கா, நீங்கள் அரசியலில் குதிக்கப்போகிறீர்களாமே?" என்று கேட்பார்கள்.

"இல்லை.. அது வந்து.." இவர் ஆரம்பிக்க முன்னரே மறுமுனையில் இருப்பவர் குறுக்கே பாய்ந்துவிடுவார்; "குட், வெரி குட்! உங்களை மாதிரியானவர்கள் வந்தால் தான் அரசியல் உருப்படும்! உங்கள் துணிச்சல் இங்கே யாருக்கு வரும்?"

அரசியல் வேண்டாம் என்று ஒதுங்க நினைப்பவருக்கும் சபலம்-எட்டிப்பார்க்கும்; ஆசை தொட்டுப் பார்க்கும்.

அதுதான் அரசியலே வேண்டாம் என்று முதலில் உறுதியாகச் சொன்ன ரஜினியால் பின்னர் அதே உறுதியோடு பேசமுடியவில்லை.

இம்ரான்கானும் "வரவேமாட்டேன்" என்று மறுக்கவில்லை.

அர்ஜுன் ரணதுங்காவை கேட்டார்கள்- "அரசியலில் குதிப்பீர்களா?" அதற்கு ரணதுங்கா "மாட்டேன்!" என்று சொல்லியிருக்கிறார். "மாட்டவே மாட்டார் அரசியல்வாதிகளின் வலையில்" என்று அவசரப்பட்டு ஆருடம் சொல்ல இயலவில்லை.

அர்ஜுன் ரணதுங்காவின் அப்பா ஆளும் கட்சியில் முக்கிய புள்ளி.

தந்தையைவைத்து தனயனை இழுப்பது கொஞ்சம் சுலபம்.

ரணதுங்காவுக்கு வீசப்படும் வலையில் பதவி என்ற இரைகூட இருக்கலாம்.

ரணதுங்கா இதுவரை நல்ல மனிதர். சிறந்த கப்டன்! சகல கட்சிகளிலும் அவருக்கு இரசிகர்கள் இருக்கிறார்கள்.

அரசியல் சபலம் எட்டிப்பார்த்தால் ரணதுங்கா பொதுச் சொத்தல்ல; தனிக் கட்சியொன்றின் சொத்தாகிவிடுவார்.

'உலகக் கோப்பையை வென்ற கப்டன் ரணதுங்கா. எதிர்காலத்தில் அவரை பாதுகாப்பமைச்சராக நியமித்தால் வெற்றிகளைப் பெற்றுத்தருவார்தானே' என்று சிறுபிள்ளைத்தனமாக சிந்திப்பவர்களும் இருக்கிறார்கள்.

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அரசியலே சிறுபிள்ளைத்தனமாகிவிட்டது.

அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை அள்ளி வழங்கிவிட்டு, அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த தேர்தலின்போது பிரபலமான, செல்வாக்கான முதுகுகளின் பின்னால் மறைந்துகொண்டு வாக்குக் கேட்க ஆசைப் படுகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் இன்றைய அரசியல்வாதிகளுக்கு தங்கள்மீதே நம்பிக்கையில்லை!

அதற்கான சாட்சிதான்- மக்களின் அபிமானத்துக்குரியவர்களை தேடி அரசியல்வாதிகள் ஓடிக்கொண்டிருப்பது!

மக்களுக்கும், பத்திரிகைகளுக்கும் இன்றைய அரசியல் அரங்கம் உற்சாகம் தருவதாக இல்லை.

அதற்கு ஆதாரபூர்வமான சாட்சிதான், ரஜினி, இம்ரான்கான், ரணதுங்கா போன்றோர் அரசியலில் குதிக்கலாம் என்ற செய்திகளுக்கு கிடைத்துவரும் முக்கியத்துவம்!

நிற்க, ரணதுங்கா அரசியலுக்கு வருவாரா மாட்டாரா?

சட்டுப்புட்டென்று முடிவு சொல்லும் விடயமல்ல இது.

அரசியல் ஒரு அழகான மோகினி ஆடும்-ஆட்டுவிக்கும்! ■

# இராமாயணம் அங்கம் 27


# அரியாசனம் அமர்ந்த இராமரின் பாதுகை

## இராஜகுமாரன்

இராமபிரானுடைய திருப்பாதங்களை இதுவரை சுமந்து கொண்டிருந்த பாதுகைகளைத் தன் சிரத்தின் மீது தாங்கியவனாக பரதன் புறப்பட்டான். "எப்படியாவது இராமரை அயோத்தி மாநகருக்கு அழைத்து வருவேன்-அரியாசனத்தில் அமர்த்துவேன்" என்று சபதம் பூண்ட பரதனால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் ஏற்பட்ட துயரம் உள்ளத்தை உறுத்தியது. இருப்பினும் தந்தை இட்ட கட்டளைக்கு மாறாக எத்தகைய செயலையும் புரிய முடியாது என்று விரதம் பூண்டுள்ள தன் தமயன் இராமரின் வைராக்கியத்தை நினைத்து பெருமிதம் கொண்டிருந்தான் பரதன். இராமபிரானுடைய பாதுகையே தனக்குப் பெருந்துணையாக இருந்து நல்வழிகாட்டும் என்ற நம்பிக்கையுடன் அவன் நடந்தான்.

### இலக்குவனின் கண்ணீர்

பரதனையும் குழுவினரையும் வழியனுப்பி விட்டுத்திரும்புகையில் இராமரின்



கால்களில் வீழ்ந்து கண்ணீரால் அவர் பாதங்களை இலக்குவன் கழுவினான். குனிந்து தன் தம்பியைத் தூக்கி நிறுத்தி அணைத்து ஆதரவுடன் அவனுடலைத் தடவிய இராமர், இலக்குவன் எதற்காக அழுகிறான் என் பதனை அவனிடம் கேட்கவில்லை. இலக்குவ னின் உள்ளுணர்வுகளை அவர் உணர்ந்து கொண்டார்.

'பரதன் பண்பு நெறி தவறாதவன், அண்ணனிடத்தில் பக்தியும் பெருமதிப்பும் கொண்டவன் பதவிக்காக எத்தகைய பாதகங்களையும் செய்யத்தயங்காத மனிதர் வாழும் இவ்வுலகில் தன்னைத் தேடிவந்த அரச பதவியையே உதறித்தள்ளிவிட்டு அதற்குரித்துடையவரிடமே அதனைச் சேர்த்துவிடத் துடிக்கும் தன் சகோதரனை சந்தேகித்து, அவனுடன் போர் தொடுக்கவே துணிந்து விட்டோமே, என்று இலக்குவன் துயரடைந்தான். இப்பெரும் பழிக்காகப் பிராயச்சித்தம் தேடுவதாகவே இலக்குவனின் கூற்று அப்போதிருந்தது. இதனை நன்கறிந்த இராமர், இலக்குவனின் கண்ணீரைத் துடைத்ததுடன் தம்பியின் துயரத்தையும் துடைத்து விட்டார்.

பரதனும் பரிவாரங்களும் மிக வேகமாகவே அயோத்திமாநகரை அடைந்துவிட்டனர். அரண்மனை சென்றதும் புரோகிதர்களை வரவழைத்து அரியாசனத்துக்குரிய கிரியைகளைச் செய்வித்தான். தக்க தருணம் பார்த்து பாதுகைகளை அரியாசனத்தில் பரதன் ஏற்றி வைத்தான். அரசவையைக் கூட்டினான். சகலரும் வந்து குழுமியதும் தனது கருத்துக்களை முன்வைத்தான்:

"அண்ணன் இராமனே இவ்வரியாசனத்துக்குரித்துடையவன். தசரத மாமன்னரின் கட்டளைப்படி பதினான்காண்டுகள் வனவாசம் முடிந்து நாடு திரும்பும்வரை இராமபிரானின் பாதுகைகளே இவ்வரியணையில் அமர்ந்திருக்கும். அவருடைய நல்லாசியுடன் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எத்தகைய குறையும் ஏற்படாதவாறு அரசாட்சியைக் கொண்டு செலுத்த என்னாலான சகலவற்றையும் செய்வேன்.

முனிபுங்கவரே! அந்தணோத்தமர்களே! அமைச்சர்களே! மக்கள் பிரதிநிதிகளே! பிரதானிகளே! உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பு என் பணிகளுக்கு உற்ற துணையாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. மேலும்! இராமபிரான் அயோத்தி மீண்டு அரச பரிபாலனத்தை ஏற்றுக்கொள்ளும் காலம்வரை நான் துறவறம் மேற்கொண்டிருப்பேன். எனது துறவற வாழ்க்கைக்கு இந்த அரண்மனை வாசம் ஏற்றதல்ல. நந்திக்கிராமத்தில் இருந்தே என் பணியினை மேற்கொள்ள நான் உத்தேசித்திருப்பதனால், ஆசிரமம் ஒன்றினை அங்கே அமைக்க வேண்டும். இராமபிரானின் பாதணிகளை ஏற்றிவைத்துள்ள சிம்மாசனத்தை அங்கேயே கொண்டு செல்ல வேண்டும். அமைச்சர் சுமந்திரரும் ஏனைய அமைச்சர்களும் உடனடியாக இதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

இவ்வாறு பரதன் கூறிமுடித்ததும் அவையிலுள்ள அனைவரின் கண்களும் குளமாயின. பரதனின் பண்பையும் பக்தியையும் சீரிய ஒழுக்கத்தையும் அனைவரும் வாயாரப்புகழ்ந்தனர். இராமர்தான் ஆட்சி செய்யாவிட்டாலும் அவருடைய திருவடிகளைச் சுமந்த பாதணிகளை வைத்து பரதன் எனும் தூயவன் எக்குறையும் வைக்காமல் நாட்டையும் மக்களையும் நிச்சயம் காப்பான் என்ற நம்பிக்கை மக்களிடம் வேரூன்றியது. நம்பிக்கை வீண்போகவில்லை. தர்மமும் நீதி நெறிகளும் சிறந்தோங்க பரதன் ஆட்சி சிறப்புற்றது. வெவ்வேறு நாடுகளிருந்தும் வந்த மன்னர்களும் யாத்திரீகர்களும் அயோத்தியில் நடைபெறும் அரச முறை களைக் கண்டு வியந்து பாராட்டினர்.

### ஆரியரும் திராவிடரும்

ஆண்டவன் இருக்கிறானா? இல்லையா? என்ற விவாதம் பண்டு தொட்டே இன்றுவரை அவ்வப்போது விசுவரூபமெடுப்பதை அவதானிக்கிறோம், அதே போல் 'இந்த மதம் உண்மையானது அந்த மதம் பொய்யானது' என்ற மதச் சண்டைகளும் அவ்வப்போது தோன்றி பெரும் பிரளயம் போலவே பல துன்பதுயரங்களை மனித சமுதாயத்துக்கு ஏற்படுத்திவந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் 1930ம் ஆண்டுகளைத் தொடர்ந்து சுயமரியாதை இயக்கம் தலையெடுத்தது. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், தந்தை ஈ.வே.ரா.பெரியார் (ஈ.வே.ராமசாமி நாயக்கர்) போன்றவர்கள் திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்து, தமிழ்நாட்டில் பரவிவிட்ட பிரமாணியத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கினர். ஆலயவழிபாடு, சமயச் சடங்குகள் போன்றவற்றை 'ஆரிய மாயை' என்று தந்தை பெரியார் சாடினார். அவர் வழிவந்த பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி போன்றாரும் இந்து மதச் சம்பிரதாயங்களை வன்மையாகக் கண்டிக்க ஆரம்பித்தனர். அழகு தமிழில்-அடுக்குமொழியில் உரையாடல்களை எழுதி நாடகங்களையும் திரைப்படங்களையும் மக்கள் மத்தியில் வைத்தனர். அலைகடல்போல் ஆதரவு பெருகிற்று.

திராவிட கழகம்-அதனைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவையும் நாத்தீகப் பிரசாரங்களில் ஈடுபட்டன. இக்கழகப் பிரசாரகர்களின் கைகளில் கம்பராமாயணமும் அகப்பட்டு படாதபாடுபட்டது. 'கம்பராமாயண சொற்போர்' என்ற பெயரில் அப்போது நடைபெற்ற விவாத அரங்கில், பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை போன்ற அறிஞர்களையே-அறிஞர் அண்ணா தன்னுடைய தேர்ந்த-தெளிந்த தமிழால் தோற்கடித்து, கவியரசர் கம்பரையே 'ஒரு வம்பர்-காம வேட்கை நிறைந்த பாடல்களையே பாடியுள்ள காமாந்தகாரர்' என்று வர்ணித்தார்.

இக்காலகட்டத்தில் நடைபெற்ற விவாதங்களில், பரதன் இராமரின் பாதணிகளைப் பெற்றுவந்த சம்பவத்தையே 'பெரிய கொடுமை' என்று சுட்டிக்காட்டி, பரதனை ஒரு கொடியவன் என்றும் கூறியிருக்கின்றனர். "மேடும் பள்ளமும், முள்ளும் கல்லும் நிறைந்த கொடிய காடுகளில்-பாதங்களைப் பாதுகாக்க அணிந்திருந்த பாதணிகளையே பறித்தெடுத்து, இராமனைப் பரிதவிக்கவிட்ட பாவி" என்றும் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

மேற்படி விவாதங்களில் ஆஸ்திகர் சார்பில் கலந்து கொண்டவர் ஈழத்தடிகள். இவரே இவ்விவாதத்தின் பின்னர் திராவிட கழகத்தில் சேர்ந்து கொண்டார். அறிஞர் அண்ணாவின் வார ஏடான 'திராவிட நாடு' பத்திரிகைக்கு நிர்வாகியாக இருந்தவர். இவர் இலங்கையை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரத்தில் வைத்து ஈழத்தடிகளாரை நாம் 1958ல் சந்தித்தபோது, "அண்ணா விவாதத்துக்காகவே கம்பரை மேடையில் தூற்றினாரே ஒழிய, கம்பரை 'கவியரசர்' என்று அண்ணா போற்றத் தவறியவரல்ல; கவியரசரின் புலமையை அண்ணா என்றென்றும் போற்றவே செய்தார்" என்று எம்மிடம் குறிப்பிட்டார்.

### கதாகாலாட்சேபம்

தமிழ் நாட்டில் ஆலயங்களிலும் வேறு பல மேடைகளிலும் இராமகாதை கதா காலாட்சேப மாக தொடர்ந்து பல நாட்கள் நடைபெறுவதுண்டு. பல நூற்றுக்கணக்கானோர் இக்கதைகளை பக்தி சிரத்தையுடன் கேட்டின்புறுவார்கள். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், புலவர் கீரன் போன்றோர் நகைச்சுவையுடன் கூடிய புதுமைக் கருத்துக்களை புகுத்தி கதையைச் சிறப்பாக உரைப்பார்கள்.

இக்கதைகள் நடைபெறும்போது 'பாதுகா பட்டாபிஷேகம்', 'இராமர் பட்டாபிஷேகம்' ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும் நாட்கள் மிகச் சிறப்பான திருவிழாப் போன்று பரிணமிக்கும். பூசைகளும் பக்தி சிரத்தையுடன் நடைபெறும்.

### இடம் பெயரும் எண்ணம்

பரதனும் குழுவினரும் சித்திரகூடம் வந்து திரும்பியபின்னர் சில நாட்கள் இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் அமைதி குலைந்து காணப்பட்டனர். தங்கள் அரண்மனை வாழ்வைத்துறந்து, காகத்தின் சூழலுக்கேற்ப தங்கள் வாழ்வினை மாற்றியமைத்திருந்தனர். திடீரென அரண்மனையிலிருந்து சுற்றம் சூழவந்து சென்றதும் மூவருக்கும் பழைய எண்ணங்கள் வாட்டத் தொடங்கின. இது மனிதப் பொது நியதியே! தாய்மாரும் தம்பியரும் வந்திருந்து பழகி விட்டுச் சென்ற இடங்களைப் பார்க்கும் போது மனம் பேதலித்தது.

அந்தப் பிரதேசத்தில் தவ வாழ்க்கையினை மேற்கொண்டிருந்த தபோதனருக்கும் அசுரர்களால் பல தீமைகள் தொடரலாயிற்று. இராவணனின் தம்பியான கரன் அப்பிரதேசத்தில் பயங்கர அட்டகாசங்களைப் புரிந்து வந்தான். இதனால் அப்பிரதேசத்தில் வாழ்ந்த முனிவர்கள் தெற்கு நோக்கி இடம் பெயர்ந்தனர்.

பரதனுடன் பல அயோத்திக் குடிமக்களும் சித்திரகூடம் வந்து இராமர் இருப்பிடத்தைக் கண்டு சென்றனர். அவர்கள் மீண்டும் மீண்டும் வந்த தனது வனவாசத்துக்கு இடையூறுகளை உண்டாக்கக் கூடும் என்று இராமர் கருதினார். எனவே சித்திர கூடத்தை விட்டு நீங்கி மேலும் தெற்கு நோக்கிச் செல்வதே சிறந்ததென இராமர் கருதினார். சீதையும் இலக்குவனும் இதற்கு ஒப்புதல் அளிக்க மூவரும் தென்திசையில் தமது பயணத்தை மேற்கொண்டனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 25**

**சரியானவிடை:- திருவாத்தி மரம்**

1. எம்.எம். சாமிலா.
15/42 B சேர்ச் வீதி, மட்டக்குளி, கொழும்பு-15.
2. இ. றொஷாந்தி.
இல. 29 நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு-06.
3. எம். ஜெஸ்மின் சிரியபுஸ்பம்.
கலதுர குரோசரி, மெத-கலதுர, இரத்தினபுரி.
4. எம்.எம்.எம். ரமீஸ்.
22 ஹஸீம் பிரதர்ஸ், மெயின் வீதி, குருவிட.
5. க. சந்திரிக்கா. 80 நாகொல்ல வீதி, மாத்தளை.

**போட்டி இல. 27** கேள்வி:- பரதன் அரச பணியினை மேற்கொள்ள தேர்ந்தெடுத்த கிராமம் யாது?

ஏப்ரல்.13க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.27, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# காதில பூ கந்தசாமி

இந்திய பொதுத்தேர்தல், சட்டமன்றத் தேர்தல் என்பவை நடைபெறவுள்ளன.

தமிழ் நாட்டில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான தி.மு.க.வும், கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க.வும் பிரதானசக்திகளாக மோதுகின்றன.

இந்த இரு அணிகளும் வெற்றிபெற்றால் அந்த மகிழ்ச்சியை எப்படி வெளியிடுவார்கள்? தோல்வி கண்டால் சோகத்தை எவ்வாறு வெளிக்காட்டுவார்கள் கற்பனை செய்து பார்ப்போமா?

## தமிழன் விழித்தான்! கலைஞர் மகிழ்ச்சி.

தி.மு.க.கூட்டணி அமோக வெற்றி பெற்று விட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து கலைஞர் கருணாநிதி பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். தனது கோபாலபுரம் இல்லத்தில் வைத்து கலைஞர் அளித்த பேட்டியின் விபரம்.

"தமிழக மக்கள் ஆணவ ஆட்சிக்கு சாவு மணியடித்து விட்டார்கள். மானமும், மாண்பும், மட்டற்ற அறிவும் உள்ளவர்கள் தாங்கள் என்பதை அகில உலகம் அறிய தெரிவித்து விட்டார்கள்.

சினிமா கவர்ச்சியிலே மயங்கிக் கிடப்பார்கள்: மாய மோகினிகள் முன்பாக சுருண்டு கிடப்பார்கள்: சோற்றாலடித்த பிண்டங்களாக உணர்ச்சியற்று இருப்பார்கள்: பலகணிப் பாவைகளுக்கு பல்லக்கு தூக்குவார்கள் என்றெல்லாம் நினைத்தோருக்கு நெற்றியிலே நாமம் போட்டுவிட்டார்கள்.

நமது கட்சியிலே கூட சிலருக்கு நம்பிக்கையில்லை! நாம் வெற்றி பெறுவோமோ என்று நெற்றிப் புருவம் உயர்த்தினார்கள்.

நமது எதிரிகள் தி.மு.க. தோல்விக்குள் சுருண்டுவிடும். சோகத்திலே அழிந்துவிடும். இத் தேர்தலுடன் அதன் கதை முடிந்துவிடும் என்று கொக்கரித்தனர். குதித்தாடினர்.

தமிழர்கள் தரம்கெட்டதுகள் பின்னால்தான் எந்நாளும் செல்வார்கள் என்று நினைத்தவர்கள் சரித்திரம் அறியாதவர்கள். தமிழனின் மனத்திடம் புரியாதவர்கள். என்று தெரிவித்தார் கலைஞர் கருணாநிதி.

நிருபர்:- **வாக்களிப்புக்கள் திருப்தியாக நடந்து முடிந்துள்ளதாக நினைக்கிறீர்களா?**

கலைஞர்:- அந்த அம்மாவின் கட்சிக்காரர்கள் காட்டித்தான் இருக்கிறார்கள் கைவரிசையை! திட்டமிட்டு போட்டுத்தான் இருக்கிறார்கள் திருட்டு வாக்கு! நம் கட்சித் தொண்டர்களும், மக்களும் விழிப்பாக இருந்தார்கள். அதனால் நாம் வெற்றிபெற முடிந்தது. கோட்டையைக் கைப்பற்ற முடிந்தது.

நிருபர்:- **தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா?**

கலைஞர்:- காற்றுப்போன டயர், உடைந்து போன பலூன், உளுத்துப்போன தடி நமக்கெதற்கு என்று உடன்பிறப்புக்கள் உரத்துக் கேட்பார்கள். நான் என்ன பதில் சொல்வது?

நிருபர்:- **உங்கள் மகன் ஸ்டாலினுக்கு அமைச்சுப் பொறுப்புக் கொடுப்பீர்களா?**

கலைஞர்:- என் மகன் என்று நீங்கள் கேட்பதே தவறு! அவன் வீட்டிலேதான் என் மகன். வெளியே மக்களின் சொத்து! சுருக்கமாகச் சொன்னால், வீட்டிலே உத்தம புத்திரன், வெளியிலே உன்னத தலைவன்!

நிருபர்:- **அப்படியானால் அமைச்சுப் பொறுப்பு கொடுக்கப்படும் என்று செய்தி போடலாமா?**

கலைஞர்:- செய்தி போடுவதும், போடாததும் உங்கள் சுதந்திரம். பத்திரிகைச் சுதந்திரத்திலே தலையிடும் கட்சியில்ல, தி.மு.க.! அறிஞர் அண்ணாவின் அருகே இருந்து பத்திரிகைச் சுதந்திரத்தை பற்றி பாடம் பயின்றவர்கள் நாங்கள்!

## தமிழன் தூங்குகிறான்—கலைஞர் சோகம்



தமிழக சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளின்படி தி.மு.க கூட்டணி தோல்வி கண்டுள்ளது. அதனையடுத்து கலைஞர் விடுத்துள்ள உருக்கமான அறிக்கை.

"தமிழன் தூங்கிக் கொண்டே இருப்பேன் என்று அடம் பிடிக்கிறான். அதனால்தான் ஆணவ ஆட்சிக்கு ஆலவட்டம் பிடித்திருக்கிறான்! கவர்ச்சிக் கோலம் கண்டு தமிழர்கள் மயங்கிக் கிடக்கும் வரை உணர்ச்சி வெள்ளம் இங்கே பாயாது! உருப்படாத இனமாகி விட்டது தமிழர் இனம் என்று நினைக்கையில் என் கண்கள் குளமாகி கண்ணீர் வழிந்தோடுகிறது. கவலை நிழலாடுகிறது.

நிருபர்:- **கடலில் என்னை வீசினாலும் கட்டுமரமாய் இருப்பேன் என்றீர்களே! இப்போது கவலைப்படலாமா?**

கலைஞர்:- கட்டுமரத்தையும் வெட்டிப் போட்டு விட்டானே தமிழன்.

நிருபர்:- **கால்செருப்பாகவேனும் இருப்பேன் என்றீர்களே! கண்கள் குளமாகலாமா?**

கலைஞர்:- கால் செருப்பாக இருக்க நினைத்தாலும் அதன் 'வார்' அறுத்து விட்டானே தமிழன்.

நிருபர்:- **தி.மு.கவில் ஏற்பட்ட பிளவுதானே தோல்விக்குக் காரணம்?**

கலைஞர்:- தமிழன் பிரிந்து நின்று சரிந்து போகிறானே என்று வெந்து கொண்டிருக்கிறேன். தாய்க் கழகம் அழைக்கிறது, சேய்கள் திரும்பி வர வேண்டும்! பேய்கள் பின்னாலே செல்லும் தமிழனை பிடித்து நிறுத்தி கழகத்தை வலுப்படுத்தவேண்டும்.

நிருபர்:- **தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளதாக நினைக்கிறீர்களா?**

கலைஞர்:- முறைகேடுகளின் மொத்த வடிவம் தானே இந்தத் தேர்தல் முடிவு!"

நிருபர்:- **தமிழன் தூங்கியதால் தோல்வி என்றீர்கள். இப்போது முறைகேடுகளால் தோல்வி என்கிறீர்கள். குழப்பமாக இருக்கிறதே?**

கலைஞர்:- பத்திரிகையாளர்களான நீங்கள் தான் குழப்புகிறீர்கள். பார்ப்பான பத்திரிகைகளின் பாசம் யார் மீது என்று நாடறியும். நானறிவேன்!

நிருபர்:- **தமிழக மக்களுக்கு உங்கள் செய்தி என்ன?**

கலைஞர்:- தமிழக மக்களே! தமிழக மக்களே! நீங்கள் எல்லாம் தி.மு.க.வாகி விட்டீர்களே! நினைத்தால் நெஞ்சு எரிகிறது. பேச நா எழ மறுக்கிறது.

நிருபர்:- **தி.மு.க.வானால் நீங்கள் மகிழ்ச்சிப் படவல்லவா வேண்டும்!**

கலைஞர்:- நான் சொல்லும் தி.மு.கவுக்கு அர்த்தம் வேறு! அழகு தமிழில் சொன்னால், திருத்த முடியாத கழுதைகள் என்று அர்த்தம்.

## உடன்பிறவாத சகோதரிக்கு கிடைத்த வெற்றி



**தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அமோக வெற்றியை அள்ளிக் கொண்ட பின்னர் ஜெயலலிதா விடுத்த அறிக்கை!**

"தேர்தல் வெற்றி என் வெற்றியல்ல. என் உடன்பிறவா சகோதரிக்கு கிடைத்த வெற்றி."

நடமாடும் நகைக்கடை என்றார்கள். அந்த நகைக் கடையும் நமக்குத் தேவைதான் என்று தமிழக மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள்.

ஊழல்களின் கூடாரம் என்றார்கள். உலகத்திலே இல்லாத ஊழலா? என்று சிந்தித்து திறம்பட வாக்களித்துவிட்டார்கள்.

அமோக வெற்றியைப் பெறவைத்த தமிழக மக்களுக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன் என்று சிந்தித்தேன்.

நேற்று என் கனவில் இதயதெய்வம் எம்.ஜி.ஆர் தோன்றினார்.

50 ஆயிரம் ஜோடிகளுக்கு கல்யாணம் செய்துவை என்று கட்டளையிட்டார்.

திருமண வயது வந்தவர்கள், திருமணம் செய்திருந்தும், மீண்டும் ஒரு தடவை திருமணவிழா நடத்த ஆவலாக உள்ளவர்கள், வயது வந்தோர்கள், வயது சென்றோர்கள் அனைவருமே விண்ணபிக்கலாம். நம் ஆட்சி மங்கள ஆட்சி. அதனால் மங்கள விழாக்கள் தொடர்ந்து நடத்தப்படும்!

நிருபர்:- **உங்கள் உடன்பிறவா சகோதரிக்கு பதவி கொடுப்பீர்களா?**

ஜெயா:-பதவியில் இருந்துதான் சம்பாதிக்க... மன்னிக்கவும்.... சாதிக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. நான் பதவியில் இருப்பது தானே பதவியில் இருப்பதுமாதிரி என்று நினைக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவர் அவர்.

## "உழைத்தது போதும், ஓய்வெடுக்கப் போகிறேன்"

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள திடுக்கிடும் அறிக்கை.

"சென்ற பலவருடங்களாக தொய்வில்லாமல் உழைத்துவிட்டேன். தூக்கமில்லாமல் இருந்து விட்டேன்! ஒரு நாளில் இருப்பது 24 மணிநேரம். நான் ஓயாமல் உழைத்ததோ 26 மணிநேரம். அது எப்படி என்று கேட்பார்கள் சிலர்! அவ்வாறான முட்டாள்தனமான கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லமாட்டேன்! பணக்கணக்கே நான் காட்டுவதில்லை, மணிக்கணக்கா காட்டுவேன்!

அயராது உழைத்த காரணத்தால் என்னை ஓய்வெடுக்குமாறு மருத்துவர்கள் தினமும் சாப்பாட்டுக்கு முன்னரும், சாப்பாட்டுக்கு பின்னரும் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால், என் இதய தெய்வம் எம்.ஜி.ஆர் இன்றிருந்தால் எனக்கு என்ன கட்டளை இட்டிருப்பாரோ, அதற்கு ஏற்ப நான் அரசியலில் இருந்து ஓய்வெடுத்துக்கொள்ள தீர்மானித்து விட்டேன்.

என் சொத்துக்களில் தமிழக மக்களாகிய உங்களை மட்டும் விட்டுப்பிரிந்து, ஏனைய சொத்துக்களை என் அன்றாட கைச்செலவுக்காக எடுத்துக் கொண்டு செல்கிறேன். நன்றி வணக்கம்.

பிற்குறிப்பு:- ஒரு வேளை நீங்கள் என்னை மீண்டும் முதலமைச்சராக்க எதிர்காலத்தில் எப்போதாவது நினைத்தால், என் இதய தெய்வத்தின் கட்டளைப்படி கடமையைச் செய்ய வர வேண்டியிருக்கும் என்பதை எச்சரிக்கையாக சொல்லிவைக்க விரும்புகிறேன்.

அருள் ஜுவலர்ஸ்
AROOL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

இந்திய அணிக் கப்டன் அசாருதீன் அடக்கமானபிள்ளை. அதாவது விருந்தொன்றில் இந்தி நடிகையும், மொடல் அழகியுமான சங்கீதாவை சந்திக்கும்வரை!

தானுண்டு, தன் மனைவி நவ்ரீன், குழந்தைகள் அபாஸ், அஸர் உண்டு என்று இருந்தவர் அசாருதீன். அதுதான் சொர்க்கம் என்றும் நினைத்திருந்தவர். சங்கீதாவைக் கண்டதும் அனைத்தையும் மறந்துவிட்டார். நவ்ரீன் மீது கொண்ட வெறுப்பு, அல்லது நவ்ரீனுடன் ஏற்பட்ட பிணக்கு என்று எந்தக் காரணமும் இல்லாமலேயே விவாகரத்து வரை அசார் சென்றது ஏன்? என்பதுதான் கேள்வி.

ஒரே பதில், சங்கீதாவோடு வாழ்க்கையை பங்கிட்டுக் கொள்ள நவ்ரீன் விரும்பவில்லை. 'நல்லது; பிள்ளைகளை பராமரிக்க மட்டும் பணம் தருகிறேன். பிள்ளைகள் உன்னிடமே இருக்கட்டும்' என்று விட்டு விலகிக் கொண்டார் அசாருதீன். சொர்க்கம் சிதைந்தது.

அம்மன் ஜுவல்
AMMAN JEWELS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

# சிதைந்த சொர்க்கம்



# தருவது விடைபெறும் (?) ... 

## தருவது விடை

1996-இரண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கும் கப்டனாக இருந்த பெருமையோடு விடைபெறுகிறார் ரிச்சி ரிச்சாட்சன்.

உலகக் கோப்பை போட்டியில் இம்முறை ஒரு சதம் அடிக்கும் வாய்ப்பை மயிரிழையில் தவறவிட்டார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 93 ரன்கள் அடித்திருந்தார். சதம் அடிக்காவிட்டாலும், கால் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வெற்றி கொள்ள காரணமாக இருந்த பெருமை போதும். அந்த கால் இறுதிப் போட்டியில் ஆட்டநாயகனும் ரிச்சாட்சன்தான்.

அரை இறுதிப்போட்டியில்கூட ரிச்சி ரிச்சாட்சன் கடுமையாகப் போராடியும் அணியில் ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் கைகொடுக்கவில்லை.

தனது தலைமையில் பாரிய வெற்றிகளை பெற்றுக்கொடுக்காத கப்டன் என்று ரிச்சாட்சன் விமர்சிக்கப்படுகிறார். அந்த விமர்சனத்தை போனாகவும் வாங்கிப் இல்லாமல் ஓய்வு பெறும் அறிவிப்பை வெளியிட்டுவிட்டார். அடுத்த கப்டன் ஹொட்னி வோல்ஷ்.



# நன்றி மீண்டும் வருக

# நினைத்தால் நிரப்பலாம்





வெங்கடேஷ் பிரசாத்- இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர். பெங்களூரைச் சேர்ந்தவர். இந்திய அணிக்கு மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் தேவைப்படுகிறார்கள். கபில் தேவ் போனபின்னர் நிரப்பப்படாத இடத்தை ஸ்ரீநாத், வெங்கடேஷ்பிரசாத் இருவரும்தான் போராடி, மூவன்று நிரப்ப வேண்டும்.

உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானை வெல்ல வெங்கடேஷ் பிரசாத்தும் ஒரு காரணம் என்று அசார் பாராட்டியதில் பெருமை. பாகிஸ்தானின் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினார் வெங்கடேஷ்பிரசாத். 10 ஓவர்கள் பந்து வீசி, 45 ரன்களை கொடுத்து மூன்று விக்கெட் கைப்பற்றி அணிக்கு உதவினார்.

மனோஜ் பிரபாகரின் திறமை ஆட்டம்தானத் தொடங்கியிருப்பதால் வெங்கடேஷ் பிரசாத், ஸ்ரீநாத் இருவரையும்தான் மலையாக நம்பியிருக்கிறது இந்திய அணி.

# அம்மா தந்தல்லோ

எட்வேட் என்னும் சிறுவனுக்கு 6 வயது. அவனிடமிருந்து கின்னஸ் புத்தக நிறுவனத்திற்கு ஒரு கடிதம் வந்தது. 30 செக்கன் நேரத்தில் அம்மா எனக்குத் தந்தது 130 முத்தங்கள். இது ஏன் கின்னஸ் சாதனையாகக்கூடாது? என்று கேட்டிருந்தான். கின்னஸ் நிறுவனத்திலிருந்து தகுதிவாய்ந்தவர்கள் முகவரிக்கு சென்றார்கள். அவர்கள் முன்பாக எட்வேட்டுக்கு அம்மா முத்தம் கொடுக்க, கணக்கிட்டார்கள். இப்போது கின்னஸில் பதிவு செய்யப்பட்டுவிட்டது.

30 செக்கனில் 131 முத்தம் கொடுக்கக்கூடியவர்கள் யாராவது இருந்தால் கின்னஸ் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு பார்க்கலாம். அதற்காக இந்த பிசகாக முயலவேண்டாம்!




# துடிக்கிறது மீசை

'துடிக்கிறது மீசை. அடக்கு அடக்கு என்று நாடிவந்த நட்பு தடுக்கிறது' அது வீரபாண்டிய கட்டப்பொம்மன் பட வசனம்.

இந்தியாவைச் சேர்ந்த கே.திவாரி துடிக்கும் மீசையை அடக்குவதேயில்லை. அடக்காதே அடக்காதே என்று அவர் நாடிய சாதனை முயற்சி கட்டளையிடுகிறது.

மீசை நடனம் மூலமாக உலக சாதனை புரிந்திருக்கிறார் மனிதர். மீசை துடிக்கும்போது அதனை வெளிப்படுத்துவதற்காக மீசையில் பிளாஸ்ரிக் குழாய்களை பொருத்தி வைத்திருக்கிறார். மீசை துடிக்க குழாய்கள் அசையும் நாட்டியம் போல அசத்தலாக இருக்கும்.

மீசை நடனத்தின் மூலமாக கின்னஸில் இடம்பிடித்துவிட்டார் திவாரி. மீசை உள்ளவர்கள் முயன்று பார்க்கலாம் தப்பில்லை.

